# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 11 வெள்ளிக்கிழமை (27.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 274


### இந்திய நாடாளுமன்றில் டி.ஆர். பாலு சாடல்

# ஈழத் தமிழரை ஆயுதம் ஏந்தவைத்த பிரச்சினைகளை இன்னும் களையவில்லை அரசு

### அரசியல் தீர்வில் மஹிந்தவுக்கு விருப்பமில்லை; நெருக்குதல் தேவை



புதுடில்லி, ஓகஸ்ட் 27

"ஈழத் தமிழர்கள் ஆயுதம் ஏந்தியதற்கான அடிப்படைக் காரணங்கள் போர் முடிந்த பின்னரும் இன்னும் அப்படியே உள்ளன. அவை களையப்படவில்லை. இப்போதும் அங்கு ஒரு நெருக்கடி நிலைதான் காணப்படுகிறது. ஏதோ நூடில்ஸ் தயாரிப்பதுபோல உடனடியாகத் தீர்வு காண முடியாது என்று கேலியாக மஹிந்த ராஜபக்ஷ பேட்டியளிக்கிறார். அவருக்கு அரசியல் தீர்வில் விருப்பம் இல்லை.

புலிகளின் அபாயம் இன்னும் இருக்கிறது என இலங்கை கூறுவது, தமிழர் பகுதிகளில் இராணுவத்தை நிலைநிறுத்துவதற்கே ஆகும். எனவே, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு மத்திய அரசு உடனடியாக அரசியல் தீர்வுகாண இலங்கைக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும்.'' - இவ்வாறு நாடாளுமன்றில் தி.மு.க. சார்பில் அக்கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு வலியுறுத்தினார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் தொண்டுப் பணியாளர் கொலை உட்பட பல கேள்விகளுக்கு இன்னமும் விடை இல்லை



கொழும்பு, ஓக. 27

இலங்கையில் போர் முடிவடைந்து ஒருவருடம் கழிந்த நிலையில் பல கேள்விகளுக்கு இன்னமும் விடை காணப்படாமல் உள்ளது - என்று பதவியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் ஐ.நாவின் உதவிச் செயலாளர் நாயகமும் அவரசகால நிவாரண இணைப்பாளருமான ஜோன் ஹோம்ஸ் கூறியுள்ளார்.

மூதூரில் ஏ.சி.எவ். தொண்டு நிறுவன ஊழியர்கள் 17 பேர் கொல்லப்பட்டமை குறித்து முறையான விசாரணை நடத்தப்படவில்லை எனவும் அவர் கூறினார்

நியூயோர்க்கில் நேற்று நடைபெற்ற பிரியாவிடை நிகழ்வின் பின்னர், செய்தியாளருக்கு (24ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் அழிவுகளுக்கு புலிகள் மட்டுமல்ல அரசின் நிர்வாக முறைமைகளுமே காரணம்

### சமாதான செயலகத்தின் முன்னாள் பணிப்பாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 26

''இலங்கையில் இதுவரை காலமும் ஏற்பட்ட அழிவுகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் மட்டும் காரணம் எனக் கூறமுடியாது. இலங்கையில் மாறி மாறி ஆட்சிசெய்த அரசுகளின் தவறான நிர்வாக முறைகளும் இதற்குக் காரணமாகும்.''

- இவ்வாறு சமாதானச் செயலகத்தின் முன்னாள் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பஸில் தலைமையிலான குழு இந்தியத் தரப்புடன் நேற்றுச் சந்திப்பு

### மீள்குடியேற்றம் குறித்து அறிய நிருபமா வருகிறார்



புதுடில்லி, ஓக. 27

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான குழு, இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ், இந்தியத் தேசிய பாதுகாப்புச் செயலர் சிவசங்கர் மேனன் ஆகியோரை நேற்று டில்லியில் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

இதன்போது இலங்கையில் இந்தியா மேற்கொள்ளும் மறுவாழ்வுப் பணிகள் உட்பட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பாக இவர்கள் ஆலோசனை நடத்தினர்.

இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ், விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு மீள்குடியேற்றம் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை நேரில் பார்வையிடவுள்ளார். அப்போது அத்திட்டங்கள் தொடர்பாக அடுத்த கட்டமாக விவாதிக்கவும் முடிவெடுக்கப்பட்டது.

இச்சந்திப்பில் இலங்கை (24ஆம் பக்கம் பார்க்க)

## முதியவரும் பெண்மணியும் ஜெனிவாவிலிருந்து பெல்ஜியத்துக்கு நாளை முதல் பாதயாத்திரை

ஜெனிவா, ஓக.27

இலங்கையில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனக்கோரி மற்றுமொரு பாதயாத்திரை நாளை ஜெனிவாவில் இருந்து ஆரம்பமாகின்றது.

லண்டனில் இருந்து ஜெனிவா வரையான சிவந்தனின் பாதயாத்திரை முடிவுற்ற ஐக்கிய நாடுகள் சபையின் முன்னால் அமைந்துள்ள முருகதாசன் திடலில் இருந்து ஜெகன் என்ற முதியவரும் தேவகி என்பவரும் இந்தப் பாதயாத்திரையைத் தொடங்க உள்ளனர்.

ஜெனிவாவில் நாளை ஆரம்பமாகவுள்ள பாதயாத்திரை ஒருமாதம் நீடிக்கும். உண்ணாவிரதம் இருந்து உயிரை நீத்த திலீபனின் (24ஆம் பக்கம் பார்க்க)

## தயா மாஸ்டர், ஜோர்ஜ் நேற்று நீதிமன்றில்; சட்டமா அதிபரின் தீர்மானம் செப். 14 இல்!

கொழும்பு, ஓக. 27

புலிகளின் முன்னாள் ஊடகத்துறைப் பொறுப்பாளர் தயாமாஸ்டர், மொழிபெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்டர் தொடர்பான சட்டமா அதிபரின் தீர்மானத்தை எதிர்வரும் செப்ரெம்பர் 14ஆம் திகதி நீதிமன்றத்தில் அறிவிக்கும்படி கொழும்பு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

தயாமாஸ்டர், ஜோர்ஜ் மாஸ்டர் ஆகிய இருவரும் நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை மாணவனுக்கு கத்திக்குத்து

கொழும்பு, ஓக. 27

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்து வரை சென்றதில் மாணவன் ஒருவன் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை கலட்டிச் சந்திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இரண்டாம் ஆண்டு கலைப்பீட மாணவர் ஒருவரே மூன்றாம் ஆண்டு கலைப்பீட மாணவனான மன்னாரைச் சேர்ந்த லக்ஷ்மன் (வயது 25) என்பவரைக் கத்தியால் குத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த மாணவன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகிறார். (எ-16-10)

## மக்களுக்குத் தெரிவிக்காமல் அரசமைப்புத் திருத்த யோசனைகள் அவற்றைத் தோற்கடிக்க அனைவரும் இணைய ஜே.வி.பி. அழைப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 27

நாட்டுக்கும், ஜனநாயகத்துக்கும் பெரும் ஆபத்து ஏற்படுத்தக்கூடிய அரசமைப்புத் திருத்த யோசனைகளை அரசு அடுத்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளது. மக்களுக்கு அவற்றைத் தெரியப்படுத்தாமல் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளது. அதனைத் தோற்கடிக்க இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். ஜே.வி.பி. இவ்வாறு நேற்று அறைகூவல் விடுத்தது.

அரசின் பாதகமான பாரதூரமான யோசனை களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் துணை போய் விட்டார் என்று அக்கட்சி மேலும் கூறியது.

ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்தார்.



அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அடுத்த வாரம் நாடாளுமன்றம் கூடும் போது அரசமைப்புத் திருத்த யோசனைகளை அரசு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ள (24ஆம் பக்கம் பார்க்க)


உள்ளே.....

ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப பாட மாதிரி வினாத் தாள்!


## கோதுமை மா விலை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 26

கோதுமை மாவின் இறக்குமதி யின் பொருட்டு வழங்கப்பட்டு வந்த மானியம் குறைக்கப்பட்டதன் காரணமாக கோதுமை மாவின் மொத்த விலை ஒரு ரூபா 50 சதத்தினால் அதிகரித்துள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பெருங்குடி மக்களே! உங்களுக்கு இனிமேல் இலவச சிகிச்சை இல்லை!

கொழும்பு, ஓக. 27

அரச வைத்தியசாலைகளில் 'பெருங் குடிமக்களுக்கு' அடுத்த ஆண்டுமுதல் இலவச சிகிச்சை அளிக்கப்படமாட்டாது. அரசு கொள்கை ரீதியில் இந்த முடிவை எடுத்துள்ளது என சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

''மது அருந்துவதன் காரணமாக ஏற்படும் நோய்களுக்கு அரச வைத்திய சாலைகளில் சிகிச்சை அளிப்பதற்கு கட்டணம் அறவிட நாம் கொள்கையளவில் தீர்மானித்துள்ளோம்.'' எனத் தெரிவிக்கும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, ''எமது அமைச்சு மேற்கொண்ட ஆய்வின்படி சிகிச்சைக்கென வைத்திய சாலைகளுக்கு வரும் நோயாளர்களில் பலர் மது அருந்துவதால் ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை பெறவே வருகின்றனர்'' என்றும் கூறுகின்றார். (ஒ-சி)


5 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

நுணாவில் மேற்கைச் சேர்ந்த கிருபாகரன்-யாழினி தம்பதியரின் செல்வப் புதல்வி

செல்வி ஜானகி கிருபாகரன்



அவர்கள் தனது 5ஆவது பிறந்த நாளை இன்று (27.08.2010) வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அம்மா (யாழினி), அப்பா (கிருபாகரன்), அண்ணா (ஜெயசுதசர்மா), தாத்தா (சிவாராஜ ஐயர்), பாட்டி (சுலோசனா தேவி), யாழ்ப்பாணம் மாமா, மாமி (வசந்தி) கொழும்பு மற்றும் நண்பர்கள் அனைவரும் ஜான கியை நல்லூரன் அருள்பெற்று பல்லாண்டுகாலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ்க என்று வாழ்த்துகின் றோம்.

கிருபாகரன்
16 1/1, 2ஆவது செம்பல் லேன்,
கொழும்பு-6

யாழினி (அம்மா),
கொழும்பு.


## மணவாளக்கோல விழா

யாழ்ப்பாணம், ஓக 27

யாழ்.வண்ணார்பண்ணை காட்டுத்துறை விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக தின மணவாளக் கோலவிழா நாளை சனிக்கிழமை நிகழவிருக்கிறது.

அன்றையதினம் மு.ப. 11 மணிக்கு அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும் விசேட பூசை ஆராதனைகளும் மாலை 6.30 மணிக்கு ஊஞ்சலும் நடைபெற்று மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் தெரு வீதி விழா உற்சவமும் இடம்பெறும். (ஒ)

## கணித, விஞ்ஞான பாட ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக 27

தீவகக் கல்விவலய கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர் வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீவகக் கல்வி வலய அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெறும்.

கல்வி அமைச்சின் கணித, விஞ்ஞான பாடங்களில் துரிதகற்றல் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்னேற்றம் மீளாய்வு செய்யவிருப்பதனால் ஆசிரியர்களை உரிய ஆவணங்களுடன் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாக்கிருஷ்ணன் கேட்டுள்ளார். (ஒ)

## 107 குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கு சைக்கிள்கள் கையளிப்பு

யாழ்.மாவட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் வெளிக்கள குடும்பநல உத்தியோகத்தர்களாகப் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை குடும்பத்திட்ட சங்கத்தினால் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக இவ்வருடம் மே மாதத்தில் 45 குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. தற்போது இரண்டாவது கட்டமாக 107 குடும்பநல உத்தியோகத்தர்களுக்கென எதிர் வரும் திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி சைக்கிள்களை வழங்கவுள்ளார். (ஒ)


PERSONAL CLASS
364, Stanly Rd, Jaffna (Near DMI)
தமிழ்-K.தர்மராஜா
GAQ: Tue - 3-6
BA Part 1 sat/sun 11-12
BA (P) 2011 sat/sun 12-1
Po.Sci- புவனதாஸ்
Hin.Cul- சிறீ
Drama- சிவன்ரூபன்
English- MAHESWARRAN
GAQ/BA-1 Paper & Revision
ஆரம்பம் நாளை 28.08.2010 sat 9 மணி.

பக்கவடிவமைப்பாளர் தேவை

பக்கவடிவமைப்பில் தேர்ச்சியும் அனுபவமும் வாய்ந்தவர்கள் உடன் தேவை. பத்திரிகையில் பக்கம் அமைப்பதில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பகுதி நேரப் பணிசெய்ய விரும்பினால் அதற்கும் வசதி செய்யப்படும். பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளோர் அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.
தொடர்பு: முகாமையாளர்,
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளிநொச்சியில்

புதிதாக ஆரம்பிக்க இருக்கும் வைத்திய நிலையத்துக்கு PHARMACY, NURSING தெரிந்த பெண் பிள்ளைகள் உடன் தேவை.

0778730129

தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வியாபார ஸ்தாபனம் ஒன்றுக்கு 18-22 வயதுக்கு உட்பட்டவர் வேலைக்கு உடனடியாகத் தேவை. (ஆண்) உடன் தொடர்புகொள்ளவும்.
தொ.பே: 021 4905330

விற்பனைக்கு

Tractor, Massey furguesion 240. 36-8XXX விற்பனைக்கு உண்டு.
ச.சதாசிவம்,
0213001478, 0778213160


## தவறிவிட்டது

73/11, பதிவாளர் ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த அ.ஜெயரட்ணம் என்பவருடைய கறுப்புநிற பேர்ஸ் ஒன்று, ஒரு தொகைப் பணம் உட்பட பெறுமதி மிக்க ஆவணங்களுடன் யாழ்.நகரப் பகுதியில் (25.08.2010) புதன்கிழமை தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0772140593, 0776602765, 0213735232

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமதி சோமசுந்தரக் குருக்கள் சத்தியபாமா

(புளியங்கூடல், சங்கானை)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், முருகமூர்த்தி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி சோமசுந்தரக் குருக்கள் சத்தியபாமா நேற்று (26.08. 2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நா.சோமசுந்தரக்குருக்கள்-சுப்புலக்ஷ்மி அம்மா தம்பதியரின் அன்பு மகளும் சிவானந்தக்குருக்கள்- சீதாலக்ஷ்மி அம்மா தம்பதியரின் மருமகளும் சோமசுந்தரக்குருக்களின் பிரிய பத்தினியும் ருக்குமணியம்மா (டென்மார்க்), ஏகாம்பாள் (பருத்தித்துறை), வரதராஜக்குருக்கள் (புளியங்கூடல்), பாலச்சந்திரசர்மா (சபேசன் ஐயா-டென்மார்க்), சகுந்தலாதேவி (பருத்தித்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சி.சுப்பிரமணியசர்மா, சி.நாகேஸ்வரசர்மா மற்றும் இ.அமிர்தலக்ஷ்மியம்மா, சி.பாலசுப்பிரமணியசர்மா, சி.நித்தியானந்தக்குருக்கள், நா.இராஜேஸ்வரியம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் பாலச்சந்திரக்குருக்கள் (கொழும்பு), ஜெயலக்ஷ்மி, நந்தினிதேவி, ரேணுகா (லண்டன்), கேதீஸ்வரசர்மா ஆகியோரின் பாசமிகு தாயும் பா.காஞ்சனாதேவி, கருணாகரசர்மா, ராம்கெங்காதரக் குளருக்கள் (லண்டன்), கே.கலைச்செல்வி (ஆசிரியை, யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் லோகாத்மன், சுதர்ஷன், அனுஷியா, மதுரா, தனுஷா, ஸ்ரீகரன், சுதாகரன், ஹம்சத்வனி, மயூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் முருகமூர்த்தி வீதி, சங்கானையில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

தகவல்:
சோ.கேதீஸ்வரசர்மா (மகன்)
0214904473, 0776176752

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா மனுவல்



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா மனுவல் நேற்று (26.08.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தவேந்தி மற்றும் விக்கினேஸ்வரி, தனேஸ்வரி (யா/மயிலனி சைவ வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பூபாலசிங்கம், பிறேமகுமாரி ஆகியோரின் மாமனாரும் நிறைஞ்சன், நிராஞ்சீஸ், நிசாந்தினி, டுசாந்தினி, அகிலன், அனோஜன், அனுசன், அஜீவன், அனுஸ்ரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு றோட்,
உடுவில். (102503)

தகவல் :
குடும்பத்தினர்

### திருமதி இரத்தினேஸ்வரி சதாசிவம்



கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியை பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினேஸ்வரி சதாசிவம் கடந்த 23.08.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தபால் அதிபர் சதாசிவம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற புகையிரத அதிபர் (Singapor) கந்தப்பிள்ளை - இராசரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவராஜா அதிபர் (Brown & Company), காலஞ்சென்ற சிவஞானம் (Overscar), திருமதி ராஜேஸ்வரி (Colombo) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஆசிரியர் வேலுப்பிள்ளை நாகரத்தினத்தின் அன்பு மருமகளும் கருணாகரன், மனோகரி (கனடா), திருக்கேதீஸ்வரன் (ஜேர்மனி), அருணகிரிநாதன் வினோதினி, கிருபாகரன், தனோபதி, ராஜசூரியர் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிர்மலா (கனடா), காலஞ்சென்ற குகபாலன், (I.K- ஜேர்மனி), லீலாவதி (கனடா), காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் சௌந்தர்யா, பரதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மதிநாத், சத்தியேந்திரா, பிரசாத், அபிராமி (கனடா), சஞ்சியா, நிக்கோ (ஜேர்மனி), நிரோஷ், நிஷாந், நிஜோன், பூஜா, ஆகாஷ், அபிமன்யு, அர்ஜுன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மாலக்கா, ஸனாயா (கனடா) மழலைகளின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தொ.பே: 4903423

தகவல் :
சதாசிவம் குடும்பத்தினர். (102504)

### திருமதி ஆறுமுகம் செல்லம்மா



புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் 5/1, புகையிரத வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் செல்லம்மா நேற்று (26.08.2010) வியாழக்ளகிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - மருதநாயகம் தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், யோகேஸ்வரி (யாழ்ப்பாணம்) மற்றும் சிவராசலிங்கம் (பிரான்ஸ்), நவராசலிங்கம் (பிரான்ஸ்), சியாமளாதேவி (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கந்தையா (யாழ்ப்பாணம்), உதயபவானி (பிரான்ஸ்), உதயகுமாரி (பிரான்ஸ்), யோகநாதன் (பிரான்ஸ்), விஜயகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திருமேனிப்பிள்ளை மற்றும் செல்லையா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம், உருத்திராதேவி, கந்தையா, இரத்தினசிங்கம், பசுபதிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் கணேஸ்வரன் - பானுமதி (பிரான்ஸ்), காலஞ்சென்ற புண்ணியகரன் மற்றும் தாரணி (பிரான்ஸ்), இலம்போதரன், சிந்துஜீவனி, கஜாஜினி, சோபசாலினி (பிரான்ஸ்), துஸ்யந்தன், துவாரகா, துஷானா (பிரான்ஸ்), சுலக்ஷன், சுலக்ஷனா, சானுஜன் (பிரான்ஸ்), அர்ஷாந்த், சாருஜா, விதுஷா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் லவனின் (பிரான்ஸ்) பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப், பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5/1, புகையிரத வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212221926 (102502)

தகவல் :
மகள் (யோகேஸ்வரி),
மருமகன் (கந்தையா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மீள்குடியேற்றமும் அரசின் போக்கும்

வன்னிப் போரினால் இடம்பெயர்ந்த மக்களில், இப்போது முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள எஞ்சியுள்ள மக்களை, எதிர்வரும் டிசெம்பர் மாத முடிவுக்குள் மீளக் குடியமர்த்திவிடப் போவதாக புதுடில்லி சென்றுள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் வாக்குறுதி அளித்திருக்கிறார். அமைச்சர் பஸிலின் கணக்குப் பிரகாரம் இன்னும் பத்தாயிரம் மக்களே மீளக்குடியமர்த்தப்படாமல் எஞ்சியுள்ளனர்.

வன்னிப் போரில் சிக்குண்டு தமது உயிர்களைக் காப்பாற்றினால் போதும் என்ற ஒரே இலக்குடன், அரசாங்கம் அறிவித்த நலன்புரி நிலையங்களை அடைந்தவர்கள் சுமார் 3இலட்சம் பேராவர். அவர்களை மீளக்குடியேற்றுவதற்குப் பாதகமான பல காரணங்களையும் கருத்துக்களையும் தெரிவித்து தாம் வகுத்த உதவித் திட்டங்களையும் காரணம் காட்டி அரசு அதில் ஈடுபடுவதில் காலதாமதம் செய்தது.

அதனால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் முதியவர்களும், குழந்தைகளும், சிறுசுகளும், நோயாளிகளும், கர்ப்பிணிப் பெண்களும் பட்ட அவலம் அத்தியாயமாக எழுதப்பட வேண்டிய ஒன்று. அரசின் அந்தத் தாமதத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் உடலாலும் உள்ளத்தாலும் நொடிந்து போனதை சர்வதேச மனிதாபிமான அமைப்புகள் பகிரங்கப்படுத்தத் தவறவில்லை.

நலன்புரி நிலையங்கள் என்று சொல்லப்பட்டவை மறைமுகமானதும் வெளிப்படையானதுமான பல வகை இன்னல்களுக்கும் இம்சைகளுக்கும் வழிவகுத்தவை என்பது சர்வதேசங்களுக்குத் தெரிய வந்த பின்னரே -

இடம்பெயர்ந்த தமிழ் மக்களை, முட்கம்பி வேலிகளுக்குள் இருந்து வெளியே செல்லக்கூடியதாக உறவினர்களுடன் தங்கியிருக்கத்தக்கதாக வகை செய்யப்பட்டது.

பின்னர், இடைத்தங்கல் முகாம்கள் என்றும் மற்றும் வெவ்வேறு வகைகளிலும் மக்கள் துன்பப்படுத்தப்பட்டார்கள். சர்வதேச அரசுகள் பலவும், மனிதநேய அமைப்புகள் பலவும், தொண்டர் நிறுவனங்கள் பலவும் கொடுத்த அழுத்தத்தின் பின்னரே அரைகுறை விருப்பத்துடன் இடம்பெயர்ந்தவர்களை அரசு அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தத் தொடங்கியது.

போர் நடந்த பிரதேசத்தை மக்கள் வாழ்க்கைக்கு உகந்த நிலைக்குக் கொண்டு வருவது, கண்ணிவெடிகளை அகற்றி குறிப்பிட்ட பிரதேசங்களைச் சுத்தப்படுத்துவது என்று ஏற்கக்கூடிய காரணங்களையும் கூறிக்கொண்டே அரசு தனது உள்வீட்டுத் திட்டங்களை ஒப்பேற்றி முடிக் கும்வரை மீள்குடியேற்றத்தைத் தாமதித்து வந்தது.

இவ்வாறெல்லாம் நீண்டகால தாமதத்தின் பின்னர் தொடக்கப்பட்ட மீள்குடியேற்றம் இன்னும் உயிர்ப்புப் பெறவில்லை. பேருக்குச் செய்யப்பட்ட, பல தரப்புகளின் அழுத்தத்தின் பேரில் நடத்தப்பட்ட மீள்குடியேற்றம் வன்னி மக்களின் வாழ்க்கையை மற்றொரு தடவை நரகமாக்கி இருக்கிறது.

வன்னி மக்களின் மீள்குடியேற்றம், அரசுக்குரிய முன்னுரிமைப் பணி என்ற வடிவத்தில் செய்யப்படவில்லை. அதனால் அவர்கள் மரநிழல்களிலும், பாம்புகளுடனும் உயிர்குடிக்கும் விலங்குகளுடனும் சேர்ந்து வாழ்கின்ற 'வனவாசம்' செய்து வருகிறார்கள்!

பாதுகாப்புத் துறைக்கு பென்னம் பெரிதாக 'யானை நிதி' ஒதுக்கீடும், மீள்குடியேற்றத்துக்கு 'எறும்பு நிதி' ஒதுக்கீடும் செய்துள்ள அரசு, நிச்சயம் வெளிநாடுகளின் நிதி உதவிகளைக் கொண்டே மீள்குடியேற்றத்தைச் செய்து வருகிறது என்று சொல்லலாம். மக்களின் அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு ஐ.நா.அமைப்புகளைச் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் நிதி உதவிகளை எதிர்பார்த்து நிற்கிறது. மீள்குடியேற்றப்பட்டவர்கள் தமது தொழில்களைச் செய்வதற்கு ஆதாரமான உதவிகள் வழங்கப்படவில்லை.

மீள்குடியேற்றப்பட்ட மக்கள் படும் துன்பங்களும் அவர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களும் நாளாந்தம் ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் இந்த நாட்டுப் பிரசைகள் என்ற கணிப்புடன் மீள்குடியேற்றத்துடன் சம்பந்தப்பட்ட பணிகள், மனம் வைத்து செய்யப்பட்டதற்கான ஆக்கபூர்வமான பிரதிபலிப்பு எதுவும், ஆகக்குறைந்தது இருபது சதவீத மேனும் தென்படவில்லை.

வெளித்தோற்றத்துக்கு, வெளிப்பூச்சுக்கு மீள் குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நலன்களை, முந்திய நிலைக்கு மீள்விக்க இன்னும் பல வருடங்கள் செல்லுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

உதாரணத்துக்கு கிளிநொச்சி, பரவிப்பாஞ்சான் பகுதியில் முன்னர் வசித்து வந்த பொதுமக்களை அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகக் காரணம் காட்டி இராணுவத் தரப்பு அவர்களை மீளக் குடியமர அனுமதிக்க மறுத்து வருகிறது. இந்த வகையில் வெவ்வேறு காரணங்களை முன்வைத்து சாந்தபுரம், கிருஷ்ணன் கோயிலடி மற்றும் சில ஊர்களைச் சேர்ந்த பொதுமக்களும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதி மறுக்கப்படுகிறது. இவை ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போலாகும்.

இடம்பெயர்ந்த வன்னி மக்களின் மீள்குடியேற்றம் உட்பட இலங்கை அரசு இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் பிரச்சினையில் இன்னமும் மந்த கதியிலேயே செயற்படுகிறது என்று தமிழகத்தின் ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் மூன்று நாள்களுக்கு முன்னர் நிறைவேற்றிய தீர்மானம் இங்குள்ள நிலையை நுணுக்குக் காட்டியாக படம் பிடித்துக் காண்பித்திருக்கிறது.

வன்னித் தமிழ் மக்களின் நலன் கருதி வெளிநாடுகளும், தொண்டர் நிறுவனங்களும் வழங்கும் நன்கொடைகள் நிதி உதவிகள் உரிய முறையில் வழிப்படுத்தப்பட்டால் இத்தகைய நிலை ஏற்படாது.

தமிழர் மீள்குடியேற்றத்தில் ஒரு கண்ணில் வெண்ணெயும் மறு கண்ணில் சுண்ணாம்பும் பூசி கயிறு இழுப்பதை அரசு இனியாவது நிறுத்திக் கொள்ளுமா?

# தென்னிலங்கைப் பயணிகளின் அதிகரித்த வருகையே கடலுணவுகளின் விலையேற்றத்துக்கு முக்கிய காரணம்

## கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஓக.27

தினசரி நுகர்வுக்கும் அதிகமான கடலுணவுகளைத் தென்னிலங்கைப் பயணிகள் கொள்வனவு செய்வதன் காரணமாகவே யாழ்.மாவட்டத்தில் அவற்றின் விலைகள் தற்போது அதிகரித்துக் காணப்படுகிறது என யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வழமையான பருவகால மாற்றமானது மீன் உற்பத்தியை கணிசமான அளவு பாதித்துள்ளது. அத்துடன் யாழ்ப்பாணம் நோக்கிப் படையெடுக்கும் தென்னிலங்கைப் பயணிகள் தமது தினசரி தேவைக்கும் அதிகமாகக் கடலுணவுகளைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரபல ஆலயங்களில் வருடாந்த திருவிழா இடம்பெற்றுவருகிறது. அதே வேளை நாடளாவிய ரீதியாகப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இவை காரணமாக தென்னிலங்கைப் பயணிகளின் வருகை தற்போது அதிகரித்துள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணம் வரும் தென்னிலங்கைப் பயணிகள் தமது பகுதிக்கும் கடலுணவுகளைக் கொண்டு செல்லும் நோக்குடன் அளவுக்கு அதிகமாக அவற்றைக் கொள்வனவு செய்து வருகின்றனர். இதன் காரணமாக நல்ல நிலையிலுள்ள கடலுணவுகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்த நிலையானது கடலுணவுகளின் விலை அதிகரிப்புக்குக் காரணமாக இருக்கிறது.

இதற்கு கிராம மட்டத்திலுள்ள கடற்றொழிலாளர் சங்கங்கள் தமது அங்கத்தவர்களின் கடல் உணவுகளை தாமே கொள்வனவு செய்து நிறுவன ரீதியாக விற்பனையில் ஈடுபடும் போது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். இதற்குரிய வசதிகள் கிராம மட்ட சமாசங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. 14 குளிரூட்டி வாகனங்களும், 04 குளிரூட்டல் அறைவசதிகளும் யாழ்.மாவட்டத்தில் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கியுள்ளன. இந்த வழிமுறையை கைக்கொள்வதானது கடலுணவு விலையேற்றத்தை குறைக்க உதவும்.

இதேவேளை,

கடற்றொழில் தடை சட்டம் நீக்கப்பட்டு சுயாதீனமாகக் கடற்றொழில் செய்ய அனுமதிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டுன் இறுதிப் பகுதியில் ஒரு கிலோ மீனின் சராசரி விலை 400 ரூபா ஆகும். ஆனால் தற்போது அது 600 ரூபாவாக அதிகரித்துள்ளது. இதற்கு யாழ்.மாவட்டத்தில் பிடிக்கப்படும் கடலுணவுகளில் கணிசமான அளவு ஏனைய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதும் ஒரு காரணமாக இருக்கலாம் - என்றார். (த-14)

# மந்திகை முதல் பருத்தித்துறை வரையான வீதியை அகலிக்கும் அளவு இரு மருங்கும் ஒரு மீற்றரால் குறைப்பு

வடமராட்சி,ஓக.27

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலமாக்கும் பணியில் மந்திகை - தொடக்கம் பருத்தித்துறை வரையிலான வீதி அகலிப்பதற்கான அளவு இரு மருங்கும் ஒரு மீற்றர் வரை குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வீதி அகலமாக்குவதற்கு வீதியின் நடுமையத்திலிருந்து இரு பக்கமும் சுமார் 7 மீற்றருக்கு அதிகமான தூரம் வீதி அகலிப்பதற்கான எல்லையாக நிர்ணயிக்கப்பட்டு அகலமாக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மந்திகை தொடக்கம் நீர்வேலி வரையிலான வீதியில் இப்பணி துரிதமாக நடைபெற்று வருகின்றது.

இப்பணியின் வல்லை அச்சுவேலி சந்தி தொடக்கம் ஆவரங்கால் வரையிலான சுமார் இரண்டுமைல் நீளமான வீதியின் அகலிப்புப் பணி நிறைவடைந்துள்ளன.

இந்நிலையில் மந்திகை தொடக்கம் பருத்தித்துறை வரையிலான வீதி அகலமாக்கும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வீதி அகலமாக்குவதற்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டதை விட வீதியின் இரு மருங்கிலும் சுமார் ஒரு மீற்றர் நீளம் வரை குறைத்தே அகல மாக்கும் பணிமேற்கொள்ளப்படுகிறது.

மந்திகை - பருத்தித்துறை வீதி நெருக்கமான குடிமனைகளைக் கொண்டதும். போக்குவரத்து நெருக்கடி அதிகரித்த வீதியாகும். அகலத்தைக் குறைப்பது மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இப்போதே சரியான முறையில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட சரியான தூர அளவில் மந்திகை - பருத்தித்துறை வீதியை அகலமாக்கப்படாது போனால் எதிர்காலத்தில் இவ்வீதியை அகலமாக்க முடியாத நெருக்கடி நிலை தோன்றலாம். அத் துடன் வீதி விபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்புகள் அதிகரித்து விடும் என பொது மக்கள் தரப்பில் அஞ்சப்படுகிறது.

இதன் காரணமாக மந்திகை - பருத்தித்துறை வீதியையும் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியின் அகலமாக்கும் அதே அளவில் அகலமாக்க வேண்டும் என பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

(த-236)

# ஒரே அலுவலகத்தில் 5 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் கட்டாய இடமாற்றம்

கொழும்பு,ஓக.27

ஒரே சேவை நிலையத்தில் 5 ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றும் இணைந்த சேவை அரச ஊழியர்களில் ஒரு தரப்பினர் தமது நிறுவனத் தலைவர்களது ஒத்துழைப்புடன் வருடாந்த இடமாற்றப் பட்டியலில் தமது பெயர் உள்ளடக்கப்படாதிருக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றனர். ஒரே சேவை நிலையத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் சேவையாற்றும் இணைந்த சேவை அரச ஊழியர்கள் வருடாந்த இடமாற்றத்துக்கு கட்டாயமாக விண்ணப்பிக்க வேண்டுமென்ற விதி அமுலில் இருந்து வருகிறது.

இதன்படி இம்முறை அத்தகையோரை இனம் கண்டு அவர்களுக்கு எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் கட்டாயமாக இடமாற்றம் வழங்குவதென பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இணைந்த சேவைகளின் கீழ் வரும் முகாமைத்துவ உதவியாளர்கள், சாரதிகள், அலுவலக உதவியாளர் தரத்தைச் சேர்ந்த ஊழியர்களில் குறிப்பிடத்தக்க ஒரு எண்ணிக்கையினர் இவ்விதம் வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்காது தொடர்ச்சியாக ஒரே நிலையத்தில் 15 ஆண்டுகள் வரை கூட கடமையாற்றி வருவதாகத் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

அந்த வகையில் இம்முறை குறிப்பிட்ட வருடாந்த இடமாற்றப்பட்டியல் உரியவகையில் தயாரிக்கப்பட்டு இடமாற்ற உத்தரவுகள் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படுமெனவும், இத்திட்டத்துக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில் செயற்பட விழையும் ஊழியர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள் மீது ஒழுங்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அமைச்சின் செயலாளர் டி.திஸ்ஸநாயக்கா தெரிவித்துள்ளார். (ஒ-22)

## வடமராட்சியிலும் வெங்காயம் சேதம்

வடமராட்சி,ஓக.27

கடந்த சில தினங்களாகப் பெய்த பெரும் மழையினால் வடமராட்சிப் பிரதேசத்திலும் வெங்காயப் பயிர்கள் நாசமடைந்துள்ளன.

இங்குள்ள பெரும்பாலான தோட்டங்களில் மழைவெள்ளம் மூடியதால் வெங்காயப் பயிர்கள் அழுகி அழிவடைந்துள்ளன.

பயிர் அழிவினால் விவசாயிகள் பலரும் பெரு நஷ்டத்தை அடைந்துள்ளனர்.

சிற்சில தோட்டங்களில் வெங்காயப் பயிரை மூடியிருந்த வெள்ளம் நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டன. சில விவசாயிகள் வெள்ளத்துக்கு மத்தியில் வெங்காயத்தைஅறுவடை செய்து வாகனங்களில் தத்தமது வீடுகளுக்கு எடுத்துச் சென்றனர். (த-236)

## நாளை

ஆவணி 12 : 28.08.2010
: சனிக்கிழமை
திதி : சதுர்த்தி
பி.இ. 05.40வரை
நட்சத்திரம் : ரேவதி
முழுவதும்
சுபநேரம் : 03.05 - 04.35
ராகுகாலம் : 09.05 - 10.35

# ஐந்து 'இசுறு' பாடசாலைகளின் கட்டடப் பணிகள் விரைவில்

யாழ்ப்பாணம்,ஓக.27

வடக்கில் 'இசுறு' திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ள 5 பாடசாலைகளுக்கான புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இதுவிடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'இசுறு' திட்டத்தின் கீழ் வடக்கிலுள்ள ஐந்து பாடசாலைகள் புதிய கட்டடங்கள் அமைப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டன.

இதில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி,சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, வரூணி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே தெரிவுசெய்யப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் தலா 35 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடங்கள் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவங்கள் கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்தன.

தற்போது கட்டடங்களை அமைப்பதற்காக ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

புதிய கட்டடங்கள் அமைக்கும் பணிகள் பெரும்பாலும் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படும் - என்றார். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி
## கேள்வி அறிவித்தல் - 2010
### கரைச்சிப்பிரதேச சபையினால் கீழ் குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

1. நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தினால் (இக்ராட்) பதிவு செய்யப்பட்ட தகுதிவாய்ந்த பதிவுத்தரமுடைய ஒப்பந்தகாரர் கீழ் குறிப்பிடப்படும் தொகைகளைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களை 2010.09.05ஆம் திகதி பி.ப. 3.00 மணிவரை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அதற்கு முத்திரை வைத்து செயலாளர், கரைச்சிப்பிரதேச சபை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும், இரண்டாம் பிரதியைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம், கிளிநொச்சி என்ற முகவரிக்கும் 2010.09.07 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
3. கேள்விகள் 2010.09.08ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அவ்வேளையில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
4. மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| தொ.இல. | வேலையின் பெயர் | இக்ராட் பதிவுத் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விவைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத பெறுமதிசேர் வரி NBT (3%) (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | மாவடியம்மன் வீதி திருத்தம் | C9 | ரூபா 10,000 | ரூபா 750 | 112.5 |
| 02 | முரசுமோட்டை உபஅலுவலகம் மீள்நிர்மாணம் | C9 | ரூபா 10,000 | ரூபா 750 | 112.5 |

கரைச்சிப்பிரதேச சபை,
கிளிநொச்சி.
25.08.2010.

திரு.பொன். நித்தியானந்தம்,
விசேட ஆணையாளர் / செயலாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(சி/570180)

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் தொடர்ச்சியாக 3 வருட கட்டட வேலைக்காக மேசன், கூலியாள்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0779788781, 0779116207, 0778001987

## தேவை

ராஜா கிறீம் ஹவுஸுக்கு அனுபவம் வாய்ந்த காசாளர் ஆண் உடன் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.

ராஜா கிறீம் ஹவுஸ், இல.36,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 0212228437, 0716357267

## திருமண சேவை

யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமக்கள் வெளிநாட்டில் உள்ளவர்களும் உள்நாட்டில் உள்ளவர்களும் தெரிவுசெய்யலாம்.

நல்லூர் மணியம், 55/2, அம்மன் றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P.: 0776510434, 0777840769

## காணி விற்பனைக்கு

வல்வெட்டித்துறை, மாணாங்கானை N.Y.S.C. Grounds க்குச் செல்லும் முச்சந்தியில் 5 பரப்புக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 0718383309, 0777881726, 0112363197

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வியாபார ஸ்தாபனத்துக்கு A/L படித்த கணக்கு (Account) எழுதக்கூடிய பெண் வேலையாள் தேவை. சுயவிவரப் படிவத்தைக் கீழ்க்காணும் முகவரிக்கு தபால்மூலம் அனுப்பவும்.

P.G. Samy,
No - 06 (155), Kannathiddy Road,
Jaffna.

## இலவசத் தையல் பயிற்சி வகுப்புகள்

இளம் யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்புக்கள், டக்கா றோட், நெடுங்குளம், மானிப்பாய், அராலி, அச்சுவேலி, பருத்தித்துறை ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் 06.09.2010 அன்று ஆரம்பிக்கப்பட உள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கு நேரில் வரவும்.
திகதி : 28.08.2010 சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 2 மணி
இடம்: 140, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (UNOPSமுன்பாக)

## Diploma in Web Development

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!!
இணையத்துறையில் வல்லுனராகுங்கள்

குறுகியகாலத்தில் சிறந்த உயர்கல்வி வாய்ப்புக்களையோ அல்லது கௌரவமான வேலைவாய்ப்புக்களை தேடி நிற்கும் மாணவர்களின் சிறந்த தெரிவு....

1000 மணித்தியாலங்கள்
கல்விப்போதனை/செய்முறைப்
பயிற்சிகளைக் கொண்ட உயர்தர
Diploma கற்கை நெறியாகும்




New Batch Starts on 10.09.2010

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna
Tel:-021 222 8060 Fax:-021 222 6933
Web:- iis.edu.lk

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை பிலிப்புப்பிள்ளை (தம்பித்துரை)



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பிலிப்புப்பிள்ளை 17.08.2010 செவ்வாய்க்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பிலிப்புப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற திரு.திருமதி டொமினிக் செல்லையா தம்பதியரின் மருமகனும் அன்னம்மாவின் (கண்மணி) அன்புக் கணவரும் ராசாத்தி (இந்தியா), தங்கராணி (கனடா), தவம் (கனடா), தேவி (கனடா), அன்ரன் தேவராஜா ஒஸ்ரின் (கனடா), காலஞ்சென்ற தும்பன் மரியதுரை ஆகியோரின் அன்புத் தந்தையும் யேசுதாசன் (இந்தியா), ஞானதாஸ் (கனடா), அரியதாசா (கனடா), காலஞ்சென்ற மரியதாஸ் மற்றும் ராஜி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற அன்ரன் மற்றும் ரஞ்சன், நெல்சன், சுதா, கலா, சுஜி, றீசா, விஜி, சுகந்தன், அனு, லிஜி, ஆஷா, அஜந்தன், யஜினா, எர்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் மெலினா, ஜோடன், நிரோஜன், செறினா, டிலக்ஷன், ரிவானியா, அஸ்வின், ஜோசுவா, டொறினா செலினா, மிதுஷன், சபினா, ஜோன், மைறன், ஜேடன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 25,26,27.08.2010 ஆகிய தினங்களில் மாலை 5 மணியிலிருந்து இரவு 9 மணிவரை 420, Dundas st, E Mississauga இல் அமைந்துள்ள Scott Funeral Home இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, நாளை (28.08.2010) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு 30, Bristol Road West, Mississauga, Ontario L5R 3K3, இல் அமைந்துள்ள Savior of the World Chinease Catholic Church இல் திருப்பலி நடைபெற்று, 6933 Tomken Rd (Tomken & Derry) இல் அமைந்துள்ள Assumption Cemetery இல் அடக்கம் செய்யப்படும்.

நாளை (28.08.2010) சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கேணிக்கட்டு ஒழுங்கை,
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. (102474)

தகவல்:
பிள்ளைகள்.

## வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடர விரும்புவர்களுக்கான இலவச நேர்முகத் தேர்வு

**Express International Studies and Consultants**

ஆகிய நாம் இதுவரை ஆயிரக்கணக்கான மாணவர்களை வெளிநாடுகளில் உயர் கல்வியினைக் கற்று பட்டதாரியாவதற்கு (Degree) அனுப்பியுள்ளோம். அந்த வகையில் யாழ் மாணவர்களின் நன்மை கருதி மாணவர்களின் எதிர்காலக் கல்வி சம்பந்தமான அறிவுரைகளுக்கும், ஆலோசனைகளுக்காகவும் இவ் நேர்முகத் தேர்வை நடாத்துகின்றோம்.

இத் தேர்விலே எதிர்வரும் **December – January Intake** இற்கான அனுமதிகளைப் பெற விரும்பும் மாணவர்களும், A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் பயனடையமுடியும். இந்நேர்முகத்தேர்விலே பங்குபற்றுவதன் மூலமாக மாணவர்கள் தங்கள் தகுதியினை, சுயமதிப்பீடு செய்து, உயர் கற்கைநெறிகள் சமபந்தமான பூரண அறிவை அடைவார்கள்.

மாணவர்களுக்கான ஆலோசனைகளும், வழிகாட்டுதல்களும் துறைசார் அனுபவமுள்ள பிரபல சட்டத்தரணிகளினால் வழங்கப்பட உள்ளது

திகதி : 28.08.2010 , 29.08.2010
நேரம் : 10.00 - 04.00 வரை
இடம் : British College of Higher Studies (Cosy Hotel இற்கு மேலே)
*No:15, 2/1, Sirampiyady Lane, Off Stanley Road, Jaffna.*

தொலைபேசி.இல:
0777222422, 071429935,

குறிப்பு: நேர்முகத்தேர்விற்கு வருபவர்கள் தமது சுயவிவரக்கோவை மற்றும் கல்விச்சான்றிதழ்களைக் கொண்டு வருவது வரவேற்கத்தக்கது.

### திருவிழா திருப்பலி

குருநகர் புனித ஆரோக்கியநாதர் ஆலய வருடாந்தத் திருவிழாத் திருப்பலி இன்ற காலை 6.30 மணிக்கு இடம்பெறும்.

திருச்சொரூப பவனி இன்று மாலை 4.45 மணிக்கு நடைபெற்று புனிதரின் ஆசீருடன் நிறைவு பெறும். (ஒ-135)

## 45ஆம் நாள் நினைவலைகள்



### அமரர் யோகராசா யோகாம்பிகை

தோற்றம்
22.01.1955

மறைவு
18.07.2010

அல்வாய் வடக்கு, ஆலங்கட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி யோகராசா யோகாம்பிகை அவர்கள் 18.07.2010 சுவிற்சர்லாந்தில் இயற்கை எய்தினார். அமரரின் 45ஆம் நாள் நினைவு நாளான இன்று (27.08.2010) காலை 7 மணியளவில் அமரரின் அஸ்தி பாக்கு நீரிணையில் (இன்பருட்டி) கரைக்கப்பட்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் சபிண்டீகரண நிகழ்வும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

நாளைமறுதினம் (29.08.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அமரரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி விசேட அபிஷேகமும் அன்னதான நிகழ்வும் அல் வாய் வடக்கு அரசடி விநாயகர் தேவஸ்தானத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

ஆலங்கட்டை,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

தகவல்:
கணவர்-கா.யோகராசா (சைவம்)
பிள்ளைகள்- மேகலா, காசினி, கிருஷா.
(982445)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் உள்ள நாவலர் மணிமண்டபத்தை சுற்று வீதியிலிருந்து பின்னகர்த்தி அமைக்க இணக்கம்

## வீரசிங்கம் மண்டபத்தில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக.27

நல்லூர் ஆலயத்துக்கு அருகிலுள்ள நாவலர் மணிமண்டபத்தை ஆலய சுற்று வீதியிலிருந்து பின்னகர்த்தி அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மணல் சேவையில் ஈடுபடும் பாரவூர்தி உரிமையாளர்களுக்கான கலந்துரையாடலின்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு,

நல்லூர் ஆலயத்தின் வெளிவீதியில் அமைந்துள்ள இந்த மணிமண்டபம் அங்கப்பிரதிட்டை செய்வோர், அடியழிக்கும் அடியார்கள் போன்றோருக்கு இடையூறாக அமைந்துள்ளதால் இம்மணி மண்டபத்தை சற்றுப் பின்நகர்த்தி அமைப்பது எனவும் நாவலர் பெருமானின் திருவுருவச்சிலையை மட்டும் உரிய இடத்தில் நிறுவுவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக மணிமண்டபத்தைச் சுற்றியுள்ள மதிலை அகற்றுவதுடன் மதிலுக்குப் பதிலாக கம்பி வேலிகளினால் அழகுபடுத்தப்படும்.

நான் அரசியலுக்காக எதையும் செய்ய வரவில்லை. நானும் அரசியலை நோக்காகக் கொண்டு செயற்படவும் இல்லை.

எமது உரிமைப் போராட்டமே என்னை அரசியலுக்குள் தள்ளிவிட்டுள்ளது.

என்னைப் பற்றி எவர் விமர்சித்தாலும் அதை நான் ஏற்றுக்கொள்வேன். நல்ல முறையில் விமர்சித்தாலென்ன, தவறாக விமர்சித்தாலென்ன எவரும் நான் செய்வது சரியோ அல்லது தவறோ என என்னிடம் சுட்டிக் காட்ட முடியும்.

மணல் விநியோகம் தொடர்பாக உங்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல்களை என்னிடம் தெளிவாக எடுத்துக் கூறுங்கள். அது தொடர்பில் உரிய வசதிகளைச் செய்துதர நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (த-16-23)



சிங்கப்பூர் வாழ் யாழ் தமிழர்கள் அண்மையில் யாழ்.நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்தனர். சிங்கப்பூர் வாழ் யாழ் தமிழர்களின் சார்பில் சிங்கராஜா நூலகர் தனபால சிங்கத்திடம் நூல்களைக் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

## அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் விநியோகம் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக.27

அரியாலை, கொழும்புத்துறை பகுதிகளுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு யாழ்.மாநகர சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கென அரியாலையில் பெரிய தண்ணீர் தாங்கி ஒன்றை விரைவாக அமைக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இந்தத் தண்ணீர் தாங்கி ஊடாக இப் பகுதி மக்களுக்கு குழாய் மூலம் குடி தண்ணீர் வழங்கப்படவுள்ளது.

தற்போது கொழும்புத்துறைப் பிரதேசத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் துண்டிசந்தி வரை இடம்பெற்று வருகின்றது.

துறைமுகச் சந்தி வரை குழாய் மூலம் குடிதண்ணீரை விநியோகிப்பதற்குப் போதிய அமுக்க வசதி இல்லையென்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று அரியாலையின் சில இடங்களுக்கும் இந்த நிலை காணப்படுகின்றது.

இதனை நிவர்த்தி செய்யும் முகமாக யாழ்.மாநகரசபை அரியாலையில் குடிதண்ணீர் தாங்கி ஒன்றை அமைத்து மக்களுக்கு குழாய் மூலம் விரைவாகக் குடிதண்ணீரை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (த-26)




## 'ஞானச்சுடர்' ஆவணி இதழ் வெளியீடு

வடமராட்சி,ஒக.27

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை,பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகையின் ஆவணிமாத இதழின் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேரவையின் நிர்வாக உறுப்பினர் கே.அருணகிரிநாதன் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை ஆசிரியர் இரா.ஸ்ரீ நடராசாவும், மதிப்பீட்டுரையை எழுத்தாளர் தெணியானும் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து லண்டன் நாதவித்தியாலய மாணவர்களான செல்வி சஹானா சாந்தகுணம், சேயோன் சாந்தகுணம் வழங்கும் வயலின், மிருதங்க வாத்திய இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (த-6-236)

## பூநகரிக்கான படகில் குறைந்தளவு பயணிகள்

யாழ்ப்பாணம்,ஒக.27

கொழும்புத்துறை - பூநகரி இடையிலான பயணிகள் படகில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பயணிகளின் வருகை குறைவாகக் காணப்படுவதால் சில சமயங்களில் இரண்டு, மூன்று பயணிகளுடன் படகு பூநகரி நோக்கிச் செல்ல வேண்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் அரச உத்தியோகத்தர்கள் சிலர் காலையில் இப்படகில் பூநகரி சென்று மாலையில் மீண்டும் படகில் திரும்புகின்றனர்.

இந்தப் பயணிகள் படகுச் சேவைக்கென 75 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய புதிய படகு ஒன்று சேவையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-26)

## அமலமரித் தியாகிகள் திருத் தொண்டர்கள்

கொழும்புத்துறை,ஒக. 27

அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த ஐந்து குருமட மாணவர்கள் யாழ். ஆயரால் திருத்தொண்டர்களாக திரு நிலைப்படுத்தப்படவுள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி கொழும்புத்துறை புனித சூசையப் பர் ஆலயத்தில் நடைபெறவுள்ள திருப்பலிச் சடங்கில் தே.ஜெனோகரன்ஸ், போ.மத்தியூஸ் மதன்ராஜ், ச.பிலிப் றஞ்சன் குமார், மி.ஜெகன்குமார் கூஞ்ஞ, யே.லெபோண் சுதன் ஆகியோரே யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் புதிய தியாகக்கோள்களாக திருநிலைப்படுத்தப் படவுள்ளனர். (த-135)

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் 30 ஆம் திகதி

யாழ்ப்பாணம்,ஒக. 27

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்துக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-16)

# சிற்றூழியர்கள், சுத்திகரிப்புப் பணியாளர்கள் பற்றாக்குறை யாழ்.ஆஸ்பத்திரியில் தொடர்கிறது

## நிவர்த்தி செய்யுமாறு அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக.27

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 150 சிற்றூழியர்கள், மேலதிக சுத்திகரிப்புப் பணியாளர்கள் ஆகியோருக்கான பற்றாக்குறை நிலவுவதாகவும், இப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக விரிவாகக் கேட்டறிந்தார்.

இதன்போதே வைத்தியசாலைப் பணிப்பாளர் அமைச்சரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது குடாநாட்டில் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுகின்றது. அத்துடன் தொற்றுநோய்கள் பரவுவதையும் தடுப்பது அவசியமாகின்றது. இதனால் முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்ற சுத்திகரிப்புப் பணியாளர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், சிற்றூழியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இது தொடர்பாக பதிலளித்த அமைச்சர், சுகாதார அமைச்சுடன் தொடர்பு கொண்டு முதற்கட்டமாக 100 சிற்றூழியர்களுக்கான நியமனங்களைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும், மேலும் பல்வேறு தேவைகள் குறித்து விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக சுகாதார அமைச்சருடனும் உரிய தரப்பினருடனும் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது அமைச்சருடன் யாழ்.நகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும், வைத்தியசாலை நிர்வாகத்தினரும் கலந்து கொண்டனர். (த-16)



அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையின் புத்தூர் விரிவாக்கல் அலகுத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களை தமிழ் மரபுப்படி ஆரத்தி எடுத்து வரவேற்பதை முதலாவது படத்திலும்,


மக்கள் வங்கித் தலைவர் டபிள்யூ கருணாஜீவ , வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்ட புத்தூர் விரிவாக்கல் அலகுப் பெயர்ப் பலகையையும் அடுத்த படங்களில் காணலாம்.

(படங்கள்: அச்சுவேலிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 27 ஆவது ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
11 - 04 - 1936



மறைவு
26 - 08 - 1983

# திருமதி தியாகராசா மாணிக்கம்

(சின்னாலடி, காரைநகர்)

**திதி: திருதியை 27.08.2010**

இருபத்தேழு ஆண்டுகள் இன்றோடு
கடந்து போனதம்மா - ஆனால்
இன்றும் உங்கள் நினைவுகளோடு...
மனிதரில் மாணிக்கமாய்
மிளிர்ந்து எம் வாழ்வுக்கு
ஒளியூட்டிய உத்தமியே!
நீங்கள் அணைந்துபோனதால் - இன்று
ஒளியின்றித் தனியாய்த் தவிக்கிறோம்
வாழ்வின் பாதைக்கு வழிகாட்டிய எங்கள் அன்னையே! இன்று
கனத்த நெஞ்சத்தோடு உங்களைத் தேடுகின்றோம்
மீண்டும் வருவீர்கள் என்ற நம்பிக்கையில்
மறு ஜென்மத்திலாவது உங்களைச் சீராட்டும்
தாயாக நாம் பிறக்கவேண்டும்.

குறிப்பு : அன்னாரின் ஞாபகார்த்தமாக இன்று (27.08.2010) வெள்ளிக்கிழமை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அன்பர்கள், முருகன் அடியார்கள் அனைவரையும் பங்குகொள்ளுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

ஈஸ்வரன் ரேடர்ஸ்
69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0212222813

**திரு. திருமதி**
**தியாகராசா**
**துவாரகேஸ்வரன்**
**குடும்பத்தினர்**

ஈஸ்வரன் றான்ஸ்போட்
அன்ட் எக்ஸ்பிரஸ்
ஈஸ்வரன் ரேடிங் கம்பனி
201B, டாம் வீதி,
கொழும்பு -11
0112433889

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுநரின் அறிவிப்பைத் தொடர்ந்து

# ஆசிரியர் இடமாற்றம் மீள்பரிசீலனை; கல்வி வலயங்கள் தோறும் ஆரம்பம்

## விரைவில் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும்

யாழ்ப்பாணம்,ஓக.27

வன்னிக்கான ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான மீள் பரிசீலனையை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையிலான உயர்மட்டக் குழு மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கல்வி வலயங்கள் தோறும் சென்று மேற்கொண்டு வருகின்றது.

வன்னிப் பெருநிலப்பரப்புக்கு யாழ்ப்பாண மாவட்டம், மன்னார், வவுனியா மாவட்டங்களில் இருந்து ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டு அவர்கள் மூன்றாம் தவணை ஆரம்பத்தில் பாடசாலைகளில் கடமையைப் பொறுப்புக்களை ஏற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த இடமாற்றங்கள் தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு அமைய மேற்கொள்ளப்படவில்லை. ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகளை உள்ளடக்கிய இடமாற்றச் சபையின் ஊடாக மேற்கொள்ளப்படவில்லை என ஆசிரியர் தொழிற்சங்கங்களினால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதுடன் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் பணிப்புக்கு அமைய இடமாற்றங்கள் இடைநிறுத்தப்பட்டு மீள்பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தற்பொழுது மீள்பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வலயங்களின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், வலயங்களின் நிர்வாக பிரிவு பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட குழு மீள் பரிசீலனைகளை மேற்கொண்டு வருகின்றது.

மீள்பரிசீலனை செய்யப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றப் பட்டியல்கள் மீள் பரிசீலனைக் குழுவில் இடம்பெற்ற அனைவரினதும் கையொப்பங்களுடனும் வடக்கு மாகாண ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளன என்று வடக்கு மாகாண கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் மீள் பரிசீலனைக்குழு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களின் மேன்முறையீடுகள் மற்றும் விடயங்கள் தொடர்பாக கல்வி வலய ரீதியாக ஆராயவுள்ளது.

இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடுகள் பரிசீலனையின்போது ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உள்ளடங்கிய இடமாற்ற சபையின் உறுப்பினர்களும் கலந்து கொள்ளுவதோடு அவர்களின் ஒப்புதலுடன் இறுதிப் பட்டியல் தயார் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-11)

## மாணவர் உடல், உள மேம்பாடு; விழிப்புணர்வுச் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக.27

மாணவர் உடல், உள வள மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு அடுத்த மாதம் 3ஆம், 4ஆம் திகதிகளில் காலை 8.30மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ்.வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தினால் நடத்தப்படும் இவ் விழிப்புணர்வுச் செயலமர்வில் அடுத்த மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண கோட்டப் பாடசாலைகளும், 4ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளும் பங்குபற்றவுள்ளன.

இச்செயலமர்வில் மேற்படி பாடசாலைகளின் அதிபரும், ஆசிரியர் ஒருவரும் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ஓ-16)




## தபால் திணைக்களத்தின் நடனப் போட்டி:

## அகில இலங்கை ரீதியில் யாழ்.தபாலக உத்தியோகத்தர் உதயகுமாரன் முதலிடம்



யாழ்ப்பாணம்,ஓக.27

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு தபால் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட நடனப் போட்டியில் யாழ்.பிரதம தபாலக உத்தியோகத்தர் எம்.ஏ.உதயகுமாரன் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

கொழும்பு பிரதம அஞ்சல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் கடந்தவாரம் உலக அஞ்சல் தினத்தையொட்டிப் பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

இதில் பிரதம தபாலகத்திலிருந்து நடனப் போட்டியில் பங்குபற்றிய அஞ்சல் உத்தியோகத்தர் உதயகுமாரன் அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டார். முதலாம்இடத்தைப் பெற்றுக்கொண்ட இவருக்கு தபால்மா அதிபர் எம்.கே.திஸநாயக்கா பரிசில் வழங்கிக் கௌரவித்தார். (த-26)

## தென்பகுதி யாத்திரிகர்களின் வரவு திடீர் அதிகரிப்பு

வண்ணை,ஓக.27

இவ்வாரத்தில் வழமையை விடவும் தென்பகுதி யாத்திரிகர் மிகவும் அதிகமாகவே குடாநாட்டுக்கு விஜயம் செய்திருந்தனர்.

நயினாதீவு மற்றும் கந்தரோடை, யாழ். நாகவிகாரைகளுக்கு சென்று வழிபட்டதுடன் நல்லூர், மாவிட்டபுரம், தெல்லிப்பழை, தொண்டைமானாறு இந்து ஆலயங்களுக்கும் தென்பகுதி யாத்திரிகர்கள் சென்று வழிபட்டதைக் காண முடிந்தது.

பாடசாலைகளில் விடுமுறையும் தெற்கு மக்களின் படையெடுப்புக்கு ஒரு காரணமாக இருக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-160)

## குடிதண்ணீர் விநியோகம் தாமதமாவதால் மக்கள் பெரும் சிரமம்

வேலணை,ஓக.27

வேலணைப் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் குழாய் நீர் விநியோகம் காலை வேளையில் தாமதமாவதால் மக்கள் சிரமப்படுகின்றனர்.

காலையில் 7.30 மணிக்கு பின்னர் நீர் விநியோகிக்கப்படுவதால் வீடுகளில் சமையல் வேலைகள் தாமதமாவதுடன் கடமைகளுக்குச் செல்வோர் தாமதமாகவே வெளிக் கிளம்ப நேரிடுகிறது என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வே[illegible]ணை பிரதேசசபையினர் குடிதண்ணீர் விநியோகத்தை காலை 6மணிக்கு முன்னர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோருகின் றனர். (ஓ-267)

## முதியோர் சங்கக் கூட்டம்

நவாலி,ஓக.27

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களின் கூட்டமும் விசேட தேவைக்குரியோரின் கூட்டமும் நாளை சனிக்கிழமை காலை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

காலை 9 மணிக்கு முதியோர் சங்க கூட்டமும் 10 மணிக்கு விசேட தேவைக் குரியோரின் கூட்டமும் இடம்பெறும்.

இக் கூட்டத்திற்கு அனைத்து விசேட தேவைக்குரியோரையும் தவறாது சமுகந்தருமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (த-100)

# நெடுந்தீவு, சுன்னாகம் சங்கங்களின் அபிவிருத்திக்கு 15 லட்சம் ரூபா கடன்

யாழ்ப்பாணம்,ஓக.27

நெடுந்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 'யசுபி' பழரசத் தொழிற்சாலை ஆகியவற்றின் அபிவிருத்திக்கென கூட்டுறவுத் திணைக்களத்தின் கடன் திட்டத்தின்கீழ் கடன்வசதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் இத்தகவலைத் தெரிவித்தார்.

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் 'ஜசுபி' பழரசத் தொழிற்சாலைக்கு வாகன வசதியை ஏற்படுத்துவதற்காக வடமாகாணக் கூட்டுறவுத் திணைக்களத்தின் உதவியுடன் குறைந்த வட்டியுடன் 10 லட்சம் ரூபா கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் நெடுந்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அத்தியாவசிய சேவைக்கெனத் திணைக்களத்தினால் 5 லட்சம் ரூபா கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதெனவும் அவர் கூறினார். (த)

# பல்கலைக்கழகத்தை அண்டியுள்ள ரயில் பாதையில் டெங்கு அபாயம்

நல்லூர்,ஓக.27

கொக்குவில் பகுதியில் யாழ்.பல்கலைக்கழகத்தை அண்டியுள்ள புகையிரத வீதியில் பொதுமக்கள் குப்பைகளைக் கொட்டுவதாகவும் இதனால் டெங்கு நோய்க்கான நுளம்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுதாகவும் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு டெங்கு ஒழிப்பு கட்டுப்பாட்டுக் கூட்டத்தில் நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் குறிப்பிட்டார்.

பொது மக்களுக்கு இப்பகுதியில் குப்பைகளைக் கொட்ட வேண்டாம் என பல தடவைகள் அறிவிப்புக்களை வழங்கிய போதும் மக்கள் அதில் அக்கறை கொள்வதில்லை எனவும், இதனால் டெங்கு நுளம்பு உற்பத்திப் பெருக்கம் ஏற்படும் அபாயம் இப்பகுதியில் காணப்படுவதாகவும், பொது மக்கள் இந்தப் பகுதியைச் சுத்தமாக வைத்திருக்க உதவுமாறும் அவர் கேட்டுள்ளார். (த-11)




வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகளில் ஒரு பகுதியாக ஈவினை பூவலடி வீதி அபிவிருத்தித் திட்டம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. ஆளுநர் பெயர்ப்பலகையைத் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும், விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உரையாற்றுவதை அடுத்துள்ள இரு படங்களில் காணலாம்.

(படங்கள்:- குமரன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1977 இல் பிறந்த உயர் வருமானம் பெறும், கொம்பனி இயக்குநருக்கு (Director) (B.Com), அழகான படித்த மணமகள் தேவை. நட்சத்திரம் உத்தரட்டாதி பாவம் குறைந்த சாதகம் உடையவர்.

C/O: 4061
361, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம். (102472)

## முக்கிய அறிவித்தல்
## துனுக்காய் பிரதேசசபை
### மாங்குளம் - வெள்ளாங்குளம் வீதியின் அளவுப் பிரமாணம்

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட மேற்படி வீதி அளவு பின்வருமாறு அமையவேண்டுமென முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளரால் அறியத்தரப்பட்டது. எனவே இதற்கமைவாக நடவடிக்கைகளை மக்கள் மேற்கொள்ளும்போது வீதி எல்லைக் கோட்டை பாதிக்காதவாறு உரிய அளவுத் திட்டத்திற்கேற்ப கட்டட விண்ணப்பங்களை சமர்ப்பித்து எம்மிடம் அனுமதி பெற்றே கட்டடங்கள், கடைகளை அமைத்துக் கொள்ளுமாறு வேண்டப்படுவதுடன் இச் செயற்பாட்டிற்கு மக்களின் பூரண ஒத்துழைப்பும் வேண்டப்படுகின்றது.

வீதியின் மத்தியில் இருந்து 15 மீற்றர்
வீதியின் மொத்த அகலம் 30 மீற்றர்

கு.விக்ரர் ஜெயசிங்கம்
விசேட ஆணையாளர்,
பிரதேசசபை, துணுக்காய். (சி/570168)

## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 525
சீட்டிழுப்பு திகதி: 25.08.2010

வெற்றி எழுத்து: I வெற்றி இலக்கங்கள்: 02 27 39 54

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ.18,442,013.60 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 223 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 436 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 10617 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6187 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 154423 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 24751 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,174,660.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.18,634,669.60

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12 ★ 12 ★ 1944
உதிர்வு 19 ★ 08 ★ 2008

திருமதி
### லீலறோஜினி இராசகோபாலு
திதி- 27.08.2010

எங்கள் அன்புத் தெய்வமே
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்புக் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/570165)




## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஒக.27

யாழ். சுண்டுக்குழி, கொய்யாத் தோட்டம், புதுவீதி ஞான செல்வ விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.20 மணி தொடக்கம் 7.20 மணிவரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 6மணி தொடக்கம் பிற்பகல் 3மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம் பெறும். (204)

## கட்டடப் படவரைஞர்களைப் பதிவு செய்தல்
## துனுக்காய் பிரதேசசபை

துணுக்காய் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள/திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ள கட்டடங்களுக்கான வரைபடங்களை வரைவதற்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப் படுகின்றது.

தகைமைகள்

1. NDT/NCT (சிவில்) சான்றிதழ் அல்லது NDT/NCT (Draughtsman) சான்றிதழ் பெற்றவர்கள்.
அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் கடமை புரியும் தொழில் நுட்ப அலுவலர்கள்/படவரைஞர் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.
2. பதிவுக் கட்டணமாக ரூபா ஆயிரத்து ஐநூறு செலுத்துதல் வேண்டும். (ரூபா.1500)
3. பிரதேச சபையினரால் எடுக்கப்படும் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு செயற்படுதல் வேண்டும்.
4. விண்ணப்ப முடிவுத் திகதி 15.09.2010 விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களைச் சுயமாகத் தயாரித்து தமது மூல ஆவணப் பிரதியுடன் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுடனும் துணுக்காய் பிரதேச சபைக்குக் கையளித்தல் வேண்டும். பரிசீலனைக்கு மூல ஆவணங்கள் கொண்டு வருதல் வேண்டும்.

ஒருவருட காலத்திற்கு பின் தங்கள் சேவையானது புதுப்பிக்கப்படல் வேண்டும்.

கு.விக்ரர் ஜெயசிங்கம்
விசேட ஆணையாளர்,
பிரதேச சபை, துணுக்காய். (சி/570167)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### நாகசுந்தரம் ஏகாம்பரம்

பிறப்பு 01-03-1943
இறப்பு 18-08-2000

திதி : திருதியை

எங்கள் அருமை அப்பாவே!
எத்தனை வருடங்கள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
ஒருபோதும் எம்மை விட்டு அகலாது

82, செல்லர் வீதி,
நல்லூர்.

- குடும்பத்தினர்.

## மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நடராசலிங்கம்
### கேமவன் (மயூரன்)
(புடைவைக் கடை)

அன்னையின் மடியில் 14.08.1981
முருகனின் அடியில் 31.08.2007

திதி: திருதியை

புன்னகை வீச பூமுகமும் மலர உன்னைக்
கருவிலே சுமந்து நான்காவதாய்ப்
பெற்றெடுத்தாள் உன் அன்னை
அப்பா என்றும் அம்மா என்றும்
அண்ணன் மார் என்றும் அக்கா என்றும்
பண்ணிசை வளர்த்தாய்
சித்தப்பா, மாமா என பச்சிளம் குழந்தைகள்
உன்னை ஆசையாக கூப்பிட
இன்முகத்துடன் வலம் வந்தாய்
மருமகன் மச்சினன் என
உன் உறவுகள் அழைக்க
இன்முகத்துடன் வரவேற்றாய்
சிட்டுக்குருவியாய்ச் சிறகடித்து வாழ்ந்த உன்னைப்
பாதி வழிதனில் உன் உயிரைக் குடிக்க
வந்தான் நண்பன் போல் அந்தக் காலனவன்
அவன் செய்த கொடுமையால் நாம்
இன்று தவிக்கிறோம் மடிந்த
எம் அப்பாவே உங்கள் ஆத்மா
சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

முகவரி:
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு லட்சம் தருவதாகக் கூறி ஏமாற்றிவிட்டார்கள் வட்டிக்குப் பெற்ற கடனை அடைக்க முடியாது திண்டாட்டம்

## பியசேன எம்.பியிடம் பொதுமக்கள் முறையீடு

அம்பாறை, ஓக.27

''வீடு கட்டுவதற்கென அரச நிறுவனமொன்று 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவைக் கட்டம் கட்டமாகத் தந்தது. இறுதியில் சுயதொழிலுக்கும், தளவாடக் கொள்வனவிற்குமென ஒரு லட்சம் ரூபா தரப்படும் எனக் குறிப்பிட்டது. அதை நம்பி வட்டிக்குக் கடன் பெற்று வீட்டைக் கட்டி முடித்தோம். ஆனால், இன்னும் அந்த ஒரு லட்சம் ரூபா பணம் கிடைக் கவில்லை. கேட்டால் அப்பணம் இல்லை என அந்நிறுவனம் கைவிரிக்கிறது. வட்டி யையும் கட்டமுடியாமல், கடனையும் அடைக்க முடியாமல் திண்டாடுகின்றோம்''.

இவ்வாறு ஆலையடிவேம்பு சின்னக்குள தமிழ்மக்கள் அம்பாறை மாவட்டத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பொ. பியசேனவிடம் அழுது புலம்பி உதவுமாறு கோரினர்.

சின்னக்குள மக்களுடனான சந்திப்பு அண்மையில் அப்பகுதியில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் வருமாறு:-

சின்னக்குளம் என்பது மிகவும் பின்தங்கிய வறுமையான பகுதி. இங்கு 325 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அவற்றுள் மிகவும் வறுமைப்பட்ட 123 குடும்பங்களுக்கு 'நேர்ப்' அரசசார்பு அமைப்பு வீடு கட்டுவதற்கு கட்டம் கட்டமாக 3லட்சத்து 25ஆயிரம் ரூபாவை வழங்கி, இறுதியில் ஒரு லட்சம் ரூபா தரப்படும் எனக் கூறி ஏமாற்றிவிட்டது என மக்கள் முறைப்பாடு செய்கின்றனர்.

இவ்வீடுகளை அமைப்பதற்கென ஆரம்பத்தில் காணி உறுதிகளை அம்மக்கள் மேற்படி 'நேர்ப்' நிறுவனத்திடம் வழங்கியிருந்தனர்.

வீட்டை முழுமையாகக் கட்டி முடித்தவர்களுக்கு உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், வீடுகள் கட்டிமுடித்த 30 பேருக்கு இன்னும் உறுதிகள் மீளக் கையளிக்கப்படவில்லை என்பது மற்றுமொரு சாராரின் குற்றச்சாட்டாகும்.

சகல ஆவணங்கள் கையளிக்கப்பட்டும் இன்னும் வீடுகள் வழங்கப்படவில்லை என்பது இன்னும் சிலரின் முறைப்பாடாகும்.

வீடு வேண்டுமென்றால் ஒன்றரை லட்சம் ரூபா லஞ்சம் தரவேண்டுமென்று ஓர் உத்தியோகத்தர் கேட்டார் என ஒரு பெண் அழுத்தமாக, உறுதியுடன் தெரிவித்தார்.

அப்படி எம்மிடம் கேட்கவில்லை. அப்படிக் கேட்டாலும் கொடுப்பதற்கு எம்மிடம் ஒன்றுமில்லை. வட்டிக்குக் கடன்பட்டே வீடுகளைக் கட்டினோம். இன்று ஓட்டாண்டியாய் தெருவில் நிற்கிறோம் என்று பலர் நியாயம் கூறினர்.

1,800 ஓடுகளைத் தந்துவிட்டு இன்னும் 300 ஓடுகள் தரப்படும் என்றும் நிறுவனத்தினர் உறுதியளித்தார்கள். எனினும், அவையும் வழங்கப்படவில்லை. இதனால், வீடுகள் அரைகுறையாக இருக்கின்றன. ஏழைகளுக்கு ஏனிந்த கொடுமை செய்கிறார்கள் என்று மற்றொரு பெண்மணி அழுது புலம்பினார்.

22 விதவைகள் இருக்கிறோம். சுய தொழிலின்றி அல்லல் படுகிறோம். 7 பேர் மக்களை இழந்து நிற்கின்றோம். நிறுவனங்கள் உதவுமா- எனக் கேட்கின்றார் 3 பிள்ளைகளின் தாயான கே. சர்மிளா.

''நான் யாழ்ப்பாணத்திலிருந்து 2007இல் இங்கு வந்து கணவருடன் குடியேறினேன். 'நேர்ப்' அமைப்பு வீடுகட்ட நிதி தந்தது. ஒரு லட்சம் ரூபா இறுதியில் தரப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால், தராமல் ஏமாற்றி விட்டார்கள். பட்ட கடனை அடைக்க முடியாமல் திணறுகின்றோம். நீங்கள்தான் அதனைப் பெற்றுத் தரவேண்டும்'' என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பதிலுக்கு பா.உ. பியசேன, ''நான் உங்களது பிரச்சினைகளுக்கு அரச அதிபரோடு பேசித் தீர்வு பெற்றுத் தருவேன்'' என உறுதியளித்தார். அடுத்த, மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்திலும் இதைப்பற்றித் தாம் பேசுவார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ளி)




# வெல்லாவெளிப் பிரதேசத்தில் யானைகள் பெரும் அட்டகாசம்

நாவிதன்வெளி, ஓக.27

வெல்லாவெளிப் பிரதேசச் செயலகப் பிரிவைச் சேர்ந்த சின்னவத்தை பிரதேசத்தில் யானைகளின் அட்டகாசத்தால் விவசாயிகளின் அறுவடைசெய்த உப்பட்டிக் கட்டுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

குறித்த வயல் பிரதேசத்திற்குள் நேற்று முன்தினம் இரவு நுழைந்த யானைகள் விவசாயிகள் சூடு போடுவதற்காகக் குவியலாக வைத்திருந்த உப்பட்டிக் கட்டுகளை சேதப்படுத்தியுள்ளன.

இதனால் அப்பிரதேசத்தைச் சேர்ந்த பல விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள், விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு, யானைகள் அப்பிரதேசத்திற்கு வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தோடு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

# கிளிவெட்டியில் மீள்குடியேறியவர்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டு உதவி அளிப்பு

திருகோணமலை, ஓக.27

மூதூர் தெற்குப் பிரிவிலுள்ள கிளிவெட்டியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீளக்குடியேறியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்றிட்டம் ஒன்றை திருகோணமலை மாவட்ட கரித்தாஸ் நிறுவனம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக அண்மையில், மூதூர் பிரதேச செயலாளர் என். செல்வநாயகம் தலைமையில் 36 பயனாளிக் குடும்பங்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டு உதவிகள் கையளிக்கப்பட்டன.

கோழி வளர்ப்புக்கான உதவிகள் 15 குடும்பங்களுக்கும், 21 பயனாளிக் குடும்பங்களுக்கு கறவைப் பசுக்களும் கையளிக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட கரித்தாஸ் திட்டமுகாமையாளர் ஜி.ஏ.பிரான்ஸிஸ், திட்ட அலுவலர் பே. மரியநாயகம், மூதூர் கால்நடை வைத்தியர் திருமதி நௌஷாத், குமாரபுரம் கிராம அலுவலர் எஸ்.சதீஸ்வரன், எஹெட் கரித்தாஸ் நிறுவனத்தின் வாழ்வாதார அலுவலர் கே.செல்வகுமார் உட்படப் பல உயர் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ளி)

# அரசுடன் இருந்தால்தான் நன்மை கிட்டும் எனக் கூறிக்கூறியே மலையக அரசியல்வாதிகள் தம்மை வளமாக்கிக் கொண்டனர்

## தொ.வி.மு.தலைவர் அய்யாத்துரை விசனம்

கொழும்பு, ஓக.27

''மலையகத்தின் அரசியல்நிலை இன்று கொள்கை - இலட்சியம் இல்லாது தறிகெட் டுச் செல்கின்றது. அரசியல்வாதிகள் சுய நலம்பேணுவதிலேயே குறியாக உள்ளனர். மக்களின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் அபிவிருத்தி என்று கூறிக் கூறியே மலையக அரசியல் தலைமைகள் ஆளும் கட்சியிடம் சரணாகதியடைந்துவிட்டன.''

- இவ்வாறு ஆதங்கம் வெளியிட்டுள்ளார் தொழிலாளர் விடுதலை முன்னணியின் தலைவர் டி.அய்யாத்துரை.

முன்னணியின் ஹட்டன் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு இளைஞர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மலையக அரசியல்வாதிகளின் செயற்பாடுகளால் மக்களின் உரிமைகள் படிப்படியாகப் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. இது குறித்து அவர்களுக்கு கவலையில்லை.

மலையகத் தமிழ் அரசியல்வாதிகள் ஆளும்கட்சியோடு சேர்ந்தால்தான் மக்களுக்குச் சேவைசெய்யமுடியும் என்ற போலிக் காரணங்களைக் காட்டி ஒட்டுமொத்த அரசியல்வாதிகளும் ஆளும்கட்சியிடம் சரணடைந்து தங்களின் சுகபோக வாழ்வுக்கு வழியமைத்துக் கொண்டுள்ளனர்.

ஆளும்கட்சியில் தொழிலாளர் பிரதிநிதிகள் இணைவது என்பது வாக்களித்த மக்களைக் காட்டிக்கொடுத்து பச்சோந்தி அரசியல் நடத்துவதாகும்.

ஆளும்தரப்புடன் இருந்துகொண்டு தொழிலாளரின் பிரச்சினைகளுக்காகக் குரல்கொடுக்கமுடியாது. மக்களுக்கு ஏற்படும் அநீதிகளையும் தடுக்க முடியாது போய் விடும்.

மாறாக ஆளும்தரப்பின் தீர்மானங்களுக்கு ஆதரவாக கைதூக்க மட்டுமே முடியும் என்பது சரித்திரம். - இப்படி அய்யாத்துரை தெரிவித்தார். (ளி)




# சிறுத்தையின் தாக்குதலுக்கு இலக்காகி சிறுமி படுகாயம்

## நாவலப்பிட்டிப் பகுதி மக்கள் பீதியில்

கொழும்பு, ஓக.27

சிறுத்தை ஒன்றின் தாக்குதலுக்கு இலக்கான சிறுமி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டி இம்புல்பிட்டிய தோட்டத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுத்தைப்புலியின் தாக்குதலுக்கு உள்ளான குறித்த சிறுமி, தனது சித்தியுடன் பீலிக்கரையில் குளித்து விட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது திடீரென வந்த சிறுத்தை ஒன்று சிறுமி மீது பாய்ந்து தாக்கியுள்ளது.

இதன்போது சிறுமியின் சித்தி கூக்குரலிடவே சிறுத்தை ஓடிவிட்டதாகக் கூறப்பட்டது. சிறுத்தையின் தாக்குதலுக்கு உள்ளாகிய சிறுமியின் இடுப்புப் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்புல்பிட்டிய தோட்டத்தைச் சேர்ந்த ஒன்பது வயதான ரூபக்கா என்ற சிறுமியே இவ்வாறு சிறுத்தையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

சிறுத்தையின் நடமாட்டம் குறித்து இப்பகுதி மக்கள் ஏற்கனவே பலமுறை பிரஸ்தாபித்திருந்தனர்.

தற்போது சிறுமி தாக்குதலுக்கு இலக்காகியதையடுத்து அவர்கள் மத்தியில் பெரும் பீதி நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது (ளி)

# தண்ணீர் ஏற்றிச்சென்ற பவுஸர் வாகனம் வட்டவளைப் பகுதியில் குடைசாய்வு

கண்டி, ஓக.27

தண்ணீர் எடுத்துச்சென்ற பவுஸர் வாகனம் ஒன்று நேற்றுமுன்தினம் வட்டவளைப் பகுதியில் குடைசாய்ந்துள்ளது.

வட்டவளை [illegible] காடன் பகுதியில் [illegible] தண்ணீரை மாலைதீவுக்குக் கொண்டு செல்வதற்காக கொழும்புத் துறைமுகத்தை நோக்கிச் சென்ற பவுஸர் வாகனமே இவ்வாறு குடைசாய்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை ஹற்றன் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ளி)

# கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முஸ்தீபு

## இ.தொ.ஐ.மு. தலைவர் சதாசிவம் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.27

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராக இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான எஸ்.சதாசிவம் வழக்குத் தாக்கல் செய்வது குறித்து சட்டத்தரணிகளுடன் ஆராய்ந்து வருகின்றனர்.

தொழிலாளர்களின் வேதனம் தொடர்பிலான கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்க உறுப்பினர்களின் உரிமைகள் இந்த ஒப்பந்தத்தால் மீறப்படுகின்றன என்று அவர் தெரி வித்தார்.

குறிப்பிட்ட சில தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் கூட்டு ஒப்பந்தம் இதில் அங்கம் வகிக்காத தொழிற்சங்கங்களைச் சார்ந்த தொழிலாளர்களை எந்த வகையிலும் கட்டுப்படுத்த முடியாதென்று தெரிவிக்கும் மாகாணசபை உறுப்பினர் எஸ். சதாசிவம், எதிர்த்து வழக்கு தாக்கல் செய்வது குறித்து தாம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறார் என 'உதயனு'க்குத் தெரிவித்தார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் மழைக்கு முன்னால் தறப்பாள் தாக்குப் பிடிக்குமா? மாரிகாலத்தை நினைத்துப் பயங்கொள்ளும் மக்கள்!



தன் வாழ்நாளில் வன்னியின் அதன் எழுச்சியையும் வீழ்ச்சியையும் கண்முன்னே கண்ட அந்த முதியவர் சொன்ன அவருடைய இன்றைய அவலநிலை இதுதான்.

''நான் முந்தி 'ரிங்கர்' வேலை செய்தனான். ஆகா ஓகோ எண்டு இல்லாட்டியும் ஓரளவு வருமானம் கிடைச்சுது. இதைவிட என்ர மனிசியும் கிளிநொச்சிச் சந்தையில மரக்கறி யாவாரம் செய்தவா. ஒருநாளைக்கு இருநூறு முன்நூறு பிடி கீரையாவது விப்பா. இதால எங்கட சீவியம் எந்தக் குறையும் இல்லாமப் போச்சுது. இப்ப 'ரிங்கர்' வேலை செய்யிறத்துக்கு ஆயுதங்கள் ஒண்டும் இல்ல. எல்லாம் ஓடிப்போகேக்க துலைஞ்சுபோச்சு. சனங்களும் இஞ்ச குறைவு. அதால இப்ப மரக்கறி யாவாரத்துக்குப் போற என்ர மனிசிக்கும் ஒரு நாளைக்கு கையில இருநூறு ரூபா மட்டில தான் கிடைக்கும். அதைவைச்சு அஞ்சு சீவன் - நான், மனிசி, மகள், மூண்டு பேரப்பிள்ளையள்- என்னெண்டு சீவிக்கிறது.

குடுக்கக் கூடியதாயிருக்குது என்று நினைக்க என்னிலேயே எனக்கு ஆத்திரமா வருகுது. இண்டைய நிலையில கிளிநொச்சியில ஒரு தொழிலும் ஒழுங்காச் செய்து பிழைக்க ஏலாது. பாருங்கோ! அவங்கள் தந்த சிலாகைகளை. ஒரு தண்ணி பட்டாலே உக்கிப் போகும். உதைவச்சு என்னெண்டு வீடு கட்டுறது. காட்டுக்குள்ள போய் நல்ல தடி வெட்டவும் இன்னும் அனுமதி இல்ல. அதுதான் வேலிக் கட்டையை வைச்சு ஒரு மாதிரி மழைக்கு தாக்குப் பிடிக்கற மாதிரி ஒழுங்கு பண்ணிக் கொண்டிருக்கிறன்.'' அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மழை இலேசாகத் தூறத் தொடங்கியது. முதியவருக்கு நம்பிக்கை வார்த்தைகள் சொல்லிவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்றோம்.

சாந்தபுரம் செல்லும் வழியோரம் பெரியதொரு மலைப்பாம்பு கிடப்பதைப்

அங்கையும் எத்தினை நாளைக்கெண்டுதான் அடைபட்டுக் கிடக்கிறது. முந்தி உடம்பிலை தெம்பு இருந்தது. இப்ப எல்லா இடமும் ஓடியோடி. களைச்சுப்போட்டம். அதாலை முந்தினமாதிரி ஓடியாடி வேலை செய்யேலாமைக் கிடக்கு. எண்டாலும் குடும்பத்தைப் பாக்க வேணுமே. அவருக்கும் ஏலாது. (இப்படிக் கூறியவாறு சற்றுத் தொலைவில் சம்மணமிட்டமர்ந்தபடி தூண்டிலில் மீன்பிடித்துக்

# இன்னமும் கண்ணீரில்தான் வன்னி மக்களின் வாழ்வு

பதிவு 2



ஓடுமீன் ஓடி உறு மீன் வரும்வரை உறுதியுடன் காத்திருப்பு...

தறப்பாளும், சிலாகையும் தந்து வீடுகட்டச் சொன்னாங்கள் உதை வைச்சு கொட்டில் கூடிப் போடேலாது. இப்ப மழை பெரிசாப் பெய்யேல்ல. அதால ஓரளவுக்கு தப்பிட்டம். ஆனால் மாரி மழை தொடங்கினால் இந்தத் தறப்பாள் இருந்த இடம் தெரியாமல் பறந்திடும். தண்ணியும் முழங்கால் அளவுக்கு வந்திடும். அதை நினைக்கத்தான் பயமாக் கிடக்கு. நாங்கள் சாகிற சீவன்கள். ஆனால் என்ர பேரப்பிள்ளையள் உதுகளையெல்லாம் அனுபவிக்க வேண்டிக்கிடக்கே எண்டு நினைக்கத்தான் கவலையாக் கிடக்கு. அதுகள் பிறந்ததில இருந்து இப்படியான துன்பத்தைத் தவிர வேறொண்டும் அறியேல்ல. எங்கள சொந்த இடத்தில இருத்திப் போட்டு ஒரு உதவியும் ஒழுங்காச் செய்யிறாங்களில்லை. எல்லாம் அரைகுறைதான். நிவாரணம் கூட ஏதோ கடமைக்குத் தான் தாறாங்கள். இஞ்ச பாருங்கோ இந்த முறை தந்த கோதுமை மாவை'' என்று கோதுமை மாப் பையை எம்மிடம் நீட்டினார். மூக்கைப் பொத்த வைக்கும் அளவுக்குஒரு வித துர்நாற்றம் 'பக்' என அந்தப் பையில் இருந்து எழுந்தது. நாய்கூட அந்த மாவை முகர்ந்துபார்த்துவிட்டு முகம் சுழிக்கும் அளவுக்கு இருந்தது அதன் வாசனை. இதனைத்தான் நிவாரணம் என்ற பெயரில் மக்களுக்கு கொடுப்பதாகவும் அந்த முதியவர் மேலும் சொன்னார்.

அந்த மாவுக்குள் உற்றுப் பார்த்தபோது சிறிய அளவுகளில் புழுக்கள் கபடி விளையாடிக் கொண்டிருந்தன.

''நிவாரணத்துக்குத் தந்த அரிசி மட்டும் பரவாயில்லை. அதால சோத்தைக் காய்ச்சி சம்பலோடையோ கீரையோடையோ சாப்பிட்டு வயித்தக் கழுவுறம். ஆனால் விதவிதமா சாப்பிட வேண்டிய வயசில என்ர பேரப்பிள்ளையளுக்கும் இந்த உப்புச் சப்பில்லாத சாப்பாட்டைத்தான் என்னால



வெள்ளம் நிரம்பிய பாதையில் பெரிசுக்கு வழிகாட்டும் சிறிசு.



சனங்களால் கைவிடப்பட்ட தேவாலயங்களில் ஒன்று.

போல வளைந்து நெளிந்தவாறு இரணைமடுக் குளத்திலிருந்து கிளிநொச்சிக் குளம்வரை நீண்டு சென்றுகொண்டிருந்தது பெரியதொரு வாய்க்கால். வழமையாக பச்சை நிறத்தில் தோன்றுகின்ற வாய்க்கால் தண்ணீர் மழையால் அடித்து வரப்பட்ட வெள்ளம் காரணமாக கலங்கிய தன்மையாக மாறியிருந்தது. இவையொன்றையும் பொருட்படுத்தாது ஆங்காங்கே சிறுசிறு குழுக்களாக ஒன்றிணைந்து இளைஞர்கள் சிலர் நீந்திக் கொண்டிருந்தனர். வழமையை விடவும் நீரோட்டம் அதிகம் என்பதால் ஓரளவு எச்சரிக்கையோடு அவர்கள் நீராடியதைக் காண முடிந்தது.

சலசலத்தபடி வேகமாய் நீர் விரைந்து கொண்டிருக்கும் அந்த வாய்க்கால் கரையோரம் சில உருவங்கள் தூண்டிலோடு காத்திருப்பது தெரிந்தது. அருகே சென்றோம். நாம் அருகில் வந்ததைக் கூடக் கவனிக்காதவர்களாக மீன் கிடைக்கிறதா என்பதிலேயே அவர்கள் குறியாக இருந்தனர். அவர்களில் அனேகர் பெண்கள். எல்லோருமே 50 வயதைத் தாண்டியவர்கள். இந்த வயதிலும் கூர்ந்த அவதானிப்புடன் கண்கொத்திப் பாம்புகள் போல வாய்க்கால் நீரையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். வற்றி உலர்ந்து போயிருந்தாலும் அவர்களின் கைகளில் ஒருவித உறுதி தென்பட்டது. தூண்டில் கயிறு மீன் சிக்குண்டுவிட்டதை உணர்த்துவது போல மெலிதான அசைவைக் காட்டியதும் கண்ணிமைக்கும் நேரத்தில் தூண்டிலை மேலே இழுத்து மீனை அதிலிருந்து விடுவித்து அருகிலிருந்த சிறிய உரப்பைக்குள் அதனை இட்டபடி இருந்தனர். எவ்வளவு நேரம் தான் நாங்களும் காத்திருப்பது? மெதுவாகப் பேச்சுக் கொடுத்தோம். வேதனையும் நம்பிக்கையும் ஒருங்கே இழையோடும் குரலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த யோகராசா இந்திராணி (வயது 42) என்ற பெண்மணி எங்களோடு தன் துயரங்களைப் பகிரத் தொடங்கினார்.

''எங்கடை சொந்த இடம் சாந்தபுரம். இன்னும் எங்களுக்குக் காணி காட்டேல்லை. (சொந்தக் காணிகளில் மீளக்குடியமர இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதைத்தான் இப்படிச் சொன்னார்.) பள்ளிக்கூடத்திலைதான் தங்கியிருக்கிறம்.

கொண்டிருந்த கணவரைச் சுட்டிக்காட்டுகிறார்.) அதாலை நான்தான் வேலைக்குப் போகோணும். இப்ப கிடுகு பின்னப் போறனான். ஒரு நாளைக்கு இருவது, முப்பது மட்டை கிடுகு பின்னுவன். ஒரு மட்டைக்குப் பத்து ரூவாப்படி தருவினம்.

அதை வைச்சுத்தான் குடும்பம் ஓடுது. முந்தி மீன்பிடிதான் எங்கடை தொழில். இரணைமடுக் குளத்திலை இவர் மீன்பிடிக்கேக்கை நல்ல வருமானம். இப்ப பள்ளிக்கூடத்திலை தார சாப்பாடு எங்களுக்கேத்த மாதிரி இல்லை. ஒரு மச்சம் இருந்தாத்தான் இவருக்குச் சோறு இறங்கும். எங்களை மாதிரி கொஞ்சப்பேர் சேர்ந்துவந்து இப்பிடித் தூண்டிலிலை மீன்பிடிக்கிறம். எங்கடை கறிக்குத் தேவையானது போக மிச்சத்தைப் பள்ளிக்கூடத்திலை இருக்கிற ஆக்களுக்கு விப்பம். முந்தி வள்ளத்திலை மீனை அள்ளியள்ளி எடுத்தம். இப்ப வாய்க்கால்லை நிண்டுகொண்டு ஒரு மீனுக்காகத் தவமிருக்கிறம்.''

என்று பெருமூச்சொன்றை உதிர்த்தபடி தன் கதையைச் சொன்னார் அந்த அம்மா. அவரைப் போலவே தூண்டிலில் மீன்பிடிக்க வந்தவர்கள் எல்லோருமே சிறு மீனுக்காக மிக நீண்ட நேரமாகக் காத்திருப்பது அவர்களின் முகங்களில் தெரிந்தது. தண்ணீர் வழமையை விடவும் கலங்கியிருந்த படியால் மீன்கூட்டங்களின் வருகையை அவர்களால் சரிவரக் கணிக்க முடியாமலிருந்தது. ஏதோ கைவந்த பாட்டுக்குத் தூண்டிலை வீசிவிட்டு மீன் சிக்கும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள்.


இப்படித்தானே தமது நிலங்களுக்குத் திரும்பு வதற்காக எவ்வித இலக்கற்ற நிலையில் ஒருவித குருட்டு நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள் வன்னி மக்கள். தாம் பிறந்து வளர்ந்து விளையாடிய மண்ணை - தமக்கு ஆதாரமாக இருந்து வாழ்வளித்த நிலத்தை - ஒவ்வொரு கணமும் எண்ணியெண்ணி, ஏங்கித் தவித்த படி சின்னஞ்சிறிய கூடாரங்களுக்குள் முடங்கிக்கிடக் கிறார்கள் இவர்கள். போர் முடிந்த பின்னரும் இவர்களுக்கு ஏன் இன்னமும் சபிக்கப்பட்ட வாழ்வு?

**ஊன்யன் ——— தமிழரசன்**

வாய்க்கால் கரையோரமாக நீண்டுசென்ற பாதையிலே பயணம் தொடர்ந்தது. நெடுந்தூரத்துக்கு ஆளரவம் குறைவாக இருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக எப்போதாவது ஒருசில மனிதத் தலைகள் மட்டுமே தென்பட்டன. மற்றும்படி ஒருபுறம் சலசலக்கும் வாய்க்கால் நீரும், மறுபுறம் ஓங்கியுயர்ந்த மரங்களும்தான் எங்களோடு கூடவந்தன. கிரவல் பரப்பப்பட்ட வீதியில் மழை தன் கைவரிசையைக் காட்டியிருந்தது. கண்ணுக்குத் தெரியாதபடி வெள்ளத்துக்குள் மறைந்திருந்த சிறுசிறு குட்டைகள் பயணத்துக்கு இடையூறு செய்துகொண்டிருந்தன. அவற்றை விலகி, வெட்டிச் செல்வதற்கு சாமர்த்தியமும், அந்த இடம் பற்றிய புரிதலும் நிறையத் தேவை. இவை எம்மிடம் இல்லாததால் சேற்றுக்குள் புதைந்தபடி சில இடங்களில் நடக்கவேண்டியும் ஏற்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் கிரவல் கற்கள் பாதங்களைப் பதம் பார்க்கவும் தவறவில்லை. ஒரு நாளிலேயே இத்தனை சீரழிவு நமக்கு. ஆனால் இந்த மக்கள் இத்தகைய சவால் நிறைந்த பாதையில் தானே பயணிக்கிறார்கள். (பயணம் தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருக்கோயில்



(சென்றவாரத் தொடர்ச்சி)

கருவறை ஒன்பது அடி நான்கு அங்குலம் (9' 4'') அளவுக்கு மடாலய அமைப்புக்கேற்ப சுண்ணாம்புக் கல்லினால் அமைக்கப்பட்டது. இந்தக் கருவறையின் மேற்குப் பக்கச்சுவரில் கல்வெட்டு பதிக்கப்பட்டிருந்தது. இந்தக் கல்வெட்டு 1985 வரை அந்த இடத்திலேயே மக்களால் பாதுகாக்கப்பட்டது.

கருவறை நிர்மாணிக்கப்பட்ட பின்னர் அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியவை கல்லினாலும் தரிசன மண்டபம் மரத்தினால் செய்யப்பட்ட தூண்களினாலும் தாங்கப்பட்டு நின்றன. நந்தி, பலிபீடம் அலங்கார மண்டபம் ஆகியவை மூன்று அடிவிட்டம் கொண்ட ஆறு தூண்களுடன் அமைக்கப்பட்டிருந்தன. ஸ்தாபகர் சிவனடியாரின் மகன் தம்பு என்பவர் தனது காணியை விற்று தரிசன மண்டபத்தின் கூரையை நீட்டி தரிசன மற்றும் அலங்கார மண்டபங்களுக்கு ஒரே கூரையாகக் கட்டினார். தரிசன மண்டபமும் அலங்கார மண்டபமும் ஒன்றாக அமைக்கப்பட்டு ஓலையால் வேயப்பட்டிருந்தன. குமரையா என்பவர் அங்கு பாடசாலை கட்டட வேலையின் போது எஞ்சிய மரங்களும் ஓடுகளும் இருப்பதாக கூறியதையடுத்து செல்லத்துரை செல்லம்மா என்பவர் அவற்றை வாங்கி ஓலையால் வேயப்பட்டிருந்த தரிசன அலங்கார மண்டபத்தினை தனித்தனியாக பிரித்து ஓடுகளால் வேயப்பட்ட மண்டபமாக மாற்றினார்.

1989இல் செல்லத்துரை புவிபாலசிங்கம் என்பவர் அலங்கார மண்டபத்தைப் புனரமைப்புச் செய்து ஆறு தூண்களுக்குப் பதிலாக சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய தூண்களை அமைத்து மண்டபத்தை அழகுபடுத்தியதுடன் 1997 இல் உள்வீதி மண்டபத்திற்கும் சித்திரத் தூண்களை நிறுவினார். பின்னர் தம்பிப்பிள்ளை சிவசம்பு என்பவரால் களஞ்சிய அறையும் மடப்பள்ளியும் நிர்மாணித்து வழங்கப்பட்டது. சாவகச்சேரி நகை மாட உரிமையாளர் இராசையா தர்மதுரை என்பவரால் அமைக்கப்பட்ட மணிக்கோபுரத்தில் 360 இறாத்தல் எடையுடைய மணி பொருத்தப்பட்டு 1967ஆம் ஆண்டு மாசிமாதம் கோபுரக் கலசம் வைக்கப்பட்டது. ஆலயத்திற்கான வசந்த மண்டபத்தினை செல்லையா சபாரத்தினம் என்பவர் 1968 இல் நிர்மாணித்துக் கொடுத்தார்.

1987இல் சிவனடியார் வழித் தோன்றலான சின்னத்தம்பி வல்லிபுரத்தின் மகன்களான நவரத்தினம், தங்கராசா ஆகியோர் ஆலய தென்மேற்கு மூலையில் பிள்ளையார் ஆலயத்தினையும் ஆலயத்தின் மேற்குப் புறத்தில் வசிக்கும் வல்லிபுரம் கிருஷ்ணசாமி என்பவர் வடமேற்கு மூலையில் முருகன் ஆலயத்தையும் அமைத்துக் கொடுத்தனர். இதுதவிர ஆலய நிர்வாகத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வைரவ ஆலயத்திற்கு பிரதிஷ்டை செய்யவென வைரவமூர்த்தி சிலையினை நாகமணி கயிலாயபிள்ளை என்பவர் வழங்கினார். இதேவேளை ஆலயத்தில் உள்ள கொண்டல் மரத்தின் கீழ் ஆசிரியர் இளையகுட்டி சுப்பிரமணியம் என்பவரால் வைத்துப் பூசிக்கப்பட்ட வைரவ சூலம் இன்றும் அதே இடத்தில் வைத்து ஆலயத்தின் இரண்டாவது வைரவர் ஆலயமாகப் பூசிக்கப்பட்டு வருகிறது.

1967 ஆம் ஆண்டு இராசையா தர்மதுரை என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இராஜகோபுர வாசல் நிர்மாண வேலைகள் அவரது தம்பியான இராசையா தெய்வேந்திரன் என்பவரால் 1992ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டது.கோபுர வாசலுக்கான கதவினை சிற்பாசிரியர் இளையதம்பி நடராசா என்பவர் சிற்ப வேலைகளுடன் அமைத்து பொருத்தினார். வீனஸ் மரக்காலை உரிமையாளரான மார்க்கண்டு சந்திரசேகரம் என்பவர் கோபுர வாசலுடன் இணைத்து '' ஓம் சக்தி'' என்னும் மின் விளக்கையும் வழங்கினார்.

ஆலயத்தில் கொடியேற்றத்திருவிழா நடாத்த வேண்டுமென அடியார்களின் விருப்பத்திற்கமைய சபாரத்தினம் நவரத்தினம் என்பவர் 1998 இல் கொடிக்கம்பத்தினை உபயமாக வழங்கினார். 1999 தொடக்கம் ஆலயத்தில் கொடியேற்றத் திருவிழா நடத்தப்பட்டு வருகிறது. உள்வீதி மண்டபம் அமைப்பதற்கு அடியார்கள் முன்வந்து நிதி வழங்கி ஆறு தூண்கள் அமைக்கப்பட்டன.

பொதுமக்கள் வழங்கிய நிதியில் உட்பிரகார வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் போது ஆலயத்தில் பாரிய சேதங்கள் ஏற்பட்டன.

(தொடரும்)

---

தொகுப்பு: ஜயந்தன்

# கோயிற் குடியிருப்பு கிராம அபிவிருத்தி அமைப்பு மீள் எழுச்சித்திட்டம்

நாட்டு மக்கள் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளான நிலையில் மூன்று தசாப்த காலமாக பெரும் கஷ்டங்களுக்கு முகம்கொடுத்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர். பட்டினிச் சாவின் விளிம்புக்கே பல குடும்பங்கள் தள்ளப்பட்டிருந்தன. இந்த நிலைக்குக் காரண கர்த்தாக்களும் இவர்கள் தான் எனவும் கூறலாம். ஏனெனில் கையில் கிடைப்பதை உடனேயே எந்த வகையிலாவது அழிக்க வேண்டுமென்ற ஒரு நோக்கம் இவர்களது மனதில் இருந்ததே தவிர கிடைப்பதை ஏதாவது ஒரு வழியில் சேமிக்கவோ முதலிடவோ தெரியாமல் வாழ்ந்துள்ளனர். இவ்வாறு வாழ்ந்த குடும்பங்களை தட்டி எழுப்ப தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் உருவாக்கப்பட்டதே கிராம மீள் எழுச்சித் திட்டமாகும்.

முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட மக்களை அதிகாரமளிக்கப்பட்ட வீரியம்மிக்க சமூகமாக உருவாக்கி நீடித்து நிலைத்திருக்கக் கூடியது நல்லாட்சியுடையதுமான வாழ்வாதார செயற்றிட்டத்தின் மூலம் அவர்களது வாழக்கைத் தரத்தை உயர்த்தி அம் மக்களே அவர்களை நெறியாள்கை செய்வதாகும் என்ற தொலை நோக்குத் திட்டத்துடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அதாவது ஒருவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமாயின் அவரது திறமையை வெளிக்கொணர உரிய பயிற்சியினை வழங்கினால் அது அவரது எதிர்காலத்தை அவர் மூலமே பிரகாசிக்கச் செய்ய முடியுமென்ற நம்பிக்கையை வெளிக்கொணர்வதே இந்தத் திட்டம். தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் கோயிற்குடியிருப்பு பகுதி 2008ஆம் ஆண்டு மீள்எழுச்சி கிராமமாக தெரிவு செய்யப்பட்டது.

கிராமத்தின் ஆரம்பக் கூட்டம் 2008 ஓகஸ்ட் ஏழாம் திகதி சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன் தலைமையில் நடைபெற்றது. மீள் எழுச்சித் திட்ட யாழ்.மாவட்ட பிரதி திட்டப் பணிப்பாளர் வே.விஸ்வலிங்கமும் திட்டத்தின் அலுவலர்களும் கலந்து கொண்டு இதன் செயற்பாடுகள் குறித்து விளக்கமாகத் தெளிவுபடுத்தப்பட்டது. அத்துடன் பொருளாதார ரீதியில் மிகவும் வறிய மற்றும் பின்தங்கிய நிலையில் உள்ள குடும்பங்கள் வாழும் மூன்று கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டன. உதயசூரியன், புனித லிகோரியார், வீரசிங்கம் ஆகிய குக்கிராமங்களில் வாழும் வறிய மற்றும் பின்தங்கிய மக்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டன.

இந்தக் குக்கிராம மக்களின் நன்மதிப்பினைப் பெற்ற இறப்பியல் தேவசகாயம்பிள்ளையின் தலைமையில் கோயில் குடியிருப்பு கிராம அபிவிருத்தி அமைப்புக்கு நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிர்வாகிகளுக்கு நிதி முகாமைத்துவம் தொடர்பான பொதுவான விடயங்கள், வாழ்வாதார உதவி போன்ற பயிற்சிகள் 2008 ஒக்ரோபர் 10ஆம் திகதி வழங்கப்பட்டது.

மீள் எழுச்சித் திட்டம் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போது ஒரு தனிநபருக்கு 6ஆயிரம் ரூபா என்ற விகிதத்தில் மொத்த சனத்தொகைக்கு எற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மூன்று குக்கிராமங்களில் உள்ள 238 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து ஆறு மக்கள் வசித்தனர். இந்த சனத் தொகையைக் கருத்தில்கொண்டு 60 இலட்சத்து 36 ஆயிரம்ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

இந் நிதியானது நலிவுற்ற மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த கிராமத்தின் உட்கட்டுமான வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு பயன்படுத்த வேண்டும் என்பது மீள் எழுச்சித் திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. இந்த நிதியில் இயலளவு விருத்தி, வாழ்வாதார விருத்தி உட்கட்டுமான விருத்தி ஆகிய தேவைகளுக்கு பங்கீடு செய்ய வேண்டும்.

அந்த வகையில் மீள் எழுச்சிக் கிராமத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதியில் (60 லட்சத்து 36 ஆயிரம் ரூபா) வாழ்வாதார விருத்திக்கு 50 வீதமும் உட்கட்டுமான விருத்திக்கு 40 வீதமும் இயலளவு விருத்திக்கு 10 வீதமும் நிதி ஒதுக்கப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட்டு வருகிறது.

கோயிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவு சாவகச்சேரி நகரை அண்டியதாக உள்ளதால் தெரிவு செய்யப்பட்ட மூன்று குக்கிராம மக்களும் வெவ்வேறு வகையான தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

வீரசிங்கம் குக்கிராமம் விவசாயத்திலும் புனித லிகோரியார் குக்கிராமம் மீன்பிடித் தொழிலிலும் உதயசூரியன் கிராமம் வளவசதியின்மையால் இப்பகுதி மக்கள் சாவகச்சேரி சந்தையில் பல்வேறு சிறு வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதியின் 50 வீத நிதியில் வாழ்வாதாரக் கடனாக ஆகக் கூடியதாக 30 ஆயிரம் ரூபா வரை வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2009 ஏப்ரல் ஏழாம் திகதி தொடக்கம் 2010 ஜூன் 30ஆம் திகதி வரை 89 பேருக்கு வாழ்வாதாரக் கடன்களாக 24 லட்சத்து 65 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு மாதாந்த தவணைக்கட்டணம் மூலம் அறவிடப்படுகின்றது.

இந்தக் கடன்கள் கால்நடை வளர்ப்பு, விவசாயம், கோழி வளர்ப்பு சிறுகடை வியாபாரம், மீன் விற்பனை, மரக்கறி வியாபாரம், கடற்றொழில், தொலைக்காட்சி வானொலி திருத்தம்,பன்னவேலை, சுண்ணாம்பு உற்பத்தி, தையல், தச்சுவேலை, பொறியியல், சிறுகைத்தொழில் ஆகிய சுயதொழில்களை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்டன.

இக்கடன் பெற்றவர்கள் தமது தேவைகளை நிறைவேற்றி உச்சப் பயனைப் பெற்றுள்ளதுடன் பெற்ற கடனை மீளச் செலுத்து வதிலும் அக்கறையுடன் செயற்படுவதால் அமைப்பின் நிதிச் செயற்பாடு திறம்பட இயங்குகிறது.

(தொடரும்)

தென்மராட்சி வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2011 A/L Model Paper
# General Information Technology

## Part - I

01. The octal equivalent of the binary number 10010110 is
a) 235 b) 246 c) 226 d) 216

02. Which of the following is the charecteristics of Information?
a) Intelligence b) Versatile
c) Speed d) Accuracy

03. Which of the following device is used as Input / Output Device ?
a) Motior b) Printer
c) Touchscreen d) RAM

04. PMCIA stands as
a) Personal Computer Memory International Association.
b) Personal Code Memory International Associate.
c) Public Code Main International Association.
d) None of the above.

05. Select the Logical operation corresponding to the following truth table

| Input A | Input B | Output X |
|---|---|---|
| 0 | 0 | 1 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 1 |

a) AND b) OR c) XOR d) XNOR

06. In MS WORD, what is the shortcut key that can be used to insert a Hyperlink object?
a) CTRL + K b) CTRL + S
c) CTRL + K d) CTRL + F

07. GUI stands for
a) Graphical User Interaction. b) Graphics User Interaction
b) Graphic User Interface. d) Graphical User Interface.


08. What is the other name of MARK I
a) ENIAC b) UNIVAC
c) ASCC d) Tabulating Machine

09. ASCII stands for,
a) American Standard Code for Information Interchange.
b) American Standard Code for Interact Information.
c) American Standard Code for International Information.
d) None of the above.

10. How many bits that UNICODE will represent for a character?
a) 7 b) 8 c) 16 d) 9

11. Which type of topology is easy to find faults?
a) Star b) Bus c) Ring d) Peer to peer

12. In flowchart, the **a** value will be
a) 10 b) 11 c) 9 d) N/A




13. Which of the following phase will be occured after the System Development ?
a) Implementation b) Testing
c) Maintenance d) Problem Definition

14. Which of the following is an port in a system ?
a) Mic in b) Joystick
c) COM 1 d) PS/2

15. Identityfy the three sucessive phase of the SDLC?
a) Planning, Development, Implementation.
b) Analysis, Development, Implementation.
c) Planning, Development, Testing.
d) Analysis, Design, Development.

16. Which of the following is not an **invalid** operator in Pascal ?
a) => b) = = c) : = d) =<

17. Which pascal statement will correctly display the text string "Approved" if the value of the variable marks is greater than 55 and the value of the age should be 20 and 40 inclusive ?
a) if ((marks > 55) AND ( (age >= 20) AND (age <=40)) then write('Approved');
b) if ((marks > 55) AND ( (20 <= age <= 40)) then write "'Approved');
c) if ((marks > 55) AND ( ( age > 20) AND (age <40)) then write('Approved');
d) if((marks > 55) AND (20 < age < 40)) then write('Approved');

18. In Pascal, if the program is required to input data into the program, the firstline should be,
a) Programs Firstprogram(Input,Output).
b) Program FirstProgram(Input,Output).
b) Program First program(output). c) Program (Input,Ouput)

19. In Ms-Word, what is the short cut key to create a new document?
a) Ctrl + O b) Ctrl + S
c) Ctrl + N d) Ctrl + V

20. URL Stands as
a) Universal Resource Location.
b) Universe Resouce Locator.
c) Universal Resource Locator. d) Universal Read Locator.

21. which of the following information system type supports the top management level?
a) Transaction Processing System (TPS)
b) Expert System (ES)
c) Decision Making System (DSS)
d) Executive Support System (ESS)

22. One Megabyte is equivalant to
a) 1024 x 1024 x 8 bits b) 1024 x 8 bits
b) 1024 x 1024 x 1024 x 8 bits d) None of the above

23. Which of the following does not produce computer executable machine code as its output ?
a) Translator b) Compiler
c) Debugger d) Interpretor

24. Each Pascal program statement terminated with a
a) semi-colon b) colon
c) comma d) fullstop

25. Which of the following is not a system utility?
a) Anti Virus b) Word processor
c) Disk Cleaner d) back up

26. A term that is not realted to computer networks is
a) Server b) IP Address
c) PS/2 d) URL

27. ASCII can represent _______ bits
a) 8 b) 7 c) 16 d) 32

28. TPS can be called as
a) TSS b) DPS c) MIS d) N/A

29. Which of the following is the correct statement?
a) A floppy disk has much higher capacity than compact disk.
b) CRT gives good picture quality than the LCD
c) Hard Disk is much faster than CD ROM to snd data into the memory
d) Many type of devices can be connected using the USB port than the parrelel port.

30. Which of the following is the correct costant declaration that defines the constant variable called **Highest** with a value of 50?
a) type Highest = 50; b) var Highest=50;
c) cost Highest::=50; d) const Highest=50;

* Answer for the 31, 32 and 33 using the information in the spreadsheet shown below.

**Product Sales Report**

| | A | B | C | D | E | F |
|---|---|---|---|---|---|---|
| 1 | Product | Qty | Rate | Gross | Disc Amt | Net Amt |
| 2 | Rice | 100 | 125.50 | 12,550.00 | 1,255.00 | 11,295.00 |
| 3 | Dhall | 75 | 256.25 | 19,218.75 | 1,921.87 | 17,296.88 |
| 4 | Onion | 43 | 62.75 | 2,698.25 | 269.82 | 2,428.43 |
| 5 | | | | | Total | **31,021.31** |
| 6 | | | | | Average | **10,340.10** |

31. The formula in the D2 is
a) = B2 * C2 b) =Sum(B2:D2)
c) =B2 * B3 d) =Sum(C2:C4)

32. Cell F1 contains a
a) Label b) Value
c) Heading d) Formula

33. The formula in F5 is
a) =Sum(B2:F4) b) =Sum(F2:F4)
c) =B4+C4+D4 d) =Sum(F2:F3)

34. Which of the following statement is correct Field Name?
a) Area.Name b) Area-Name
c) AreaName d) Area=Name

35. Who invented the Tabulationg Machine?
a) Bill Gates b) Charles Babbage
c) Herman Hollerith d) Eckert & Mauchy

36. Which of the follwing is a valid email address?
a) http://pinnacleinstitute@eureka.lk
b) ftp:// file.amzaon.com
c) gmail@mailaddress
d) pinnacle-institute@eureka.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

37. Colection of fields in a database is called
   a) form    b) Table
   c) Record    d) Query

38. Which of the following will not adversely affect the use of a computer?
   a) Virus    b) Firewall
   c) Worm    d) Trojan Horse

39. Which of the following device is an impact printer?
   a) Inkjet    b) Bubble Jet
   c) Daisy Wheel    e) Laser

40. Economical feasibility look at,
   a) Acceptance of the system within the organization.
   b) The quality of the final product.
   c) The financial aspects of the system.
   d) Performance aspects of the system.

## Part - II

01. a) Find the octal equivalant of the hexadecimal number 4A2.
   b) i) Using the following truth table find the Boolean expression for the output X in terms of the three inputs A, B and C.

| A | B | C | X |
|---|---|---|---|
| 0 | 0 | 0 | 1 |
| 0 | 0 | 1 | 0 |
| 0 | 1 | 0 | 1 |
| 1 | 0 | 0 | 1 |
| 1 | 1 | 0 | 1 |
| 1 | 0 | 1 | 0 |
| 0 | 1 | 1 | 0 |
| 1 | 1 | 1 | 0 |

   ii) Simplify the above Boolean expression of X using the laws in Boolean Algebra
   iii) Design a logical circuit corresponding to the Boolean expression obtained in part (ii)

02. a) Explain what is Virus.
   b) Describe the difference between LAN and WAN
   c) Describe that how can you protect the computer from the virus.
   d) What are the advantages, create a table using database system than data sheet in spreadsheet software?

03. a) Write a Pascal variable declaration to declare the to variable A and B as type integer and the variable X as type real and Y as type char.
   b) Write a Pascal statement to assign the charecter 'g' to the 6[th] component of an array variable Z of element type char.
   c) Find the number of the iterations performed by each of the following loops:
   i)
```
s:= - 5 ;
repeat
s := s + 5
until s > 20;
```
   ii)
```
x : = 25;
y : = 5;
while (x > 1) do x := x + y;
```

04. The following document is reated by using a word processing software. Read the document and answer the question given below.

D — ABC COMPUTER CENTRE

Our computer centre provides — A
computer education not only for — B
educated students but also to the
**person** who has the basic knowledge,

C — Course Details are as follows :
1. Dip. in Com. Studies    2. Desktop Publishing
3. Web Designing    4. PC Assemble

   a) Write down the steps needed to formatting the text box (shown as A) in the document.
   b) Write down the steps needed to underline the words "educated students" (shown as B) in the document.
   c) Write down the steps needed to make the text shown in C as a Number List.
   d) What is the tool that used to create the heading (Shown as D).

05. a) Draw a flow chart to display odd number from 1 to 15.
   b) Write a short note about the Implementation phase in SDLC.
   c) Explain the importance of the ICT.

06. a) Explain the use of an Operating System.
   b) Explain the topologies (BUS, RING and STAR)
   c) Explain the main types of viruses.

Teacher:- R.Nandakumar, Colombo.

# கல்விச்சாலைக் காட்சிகள்





உடுப்பிட்டி கொத்தணி முன்பள்ளிகளின் கலை விழா அண்மையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் வடமராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன் முன்பள்ளி ஆசிரியை ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் முன்பள்ளி மாணவிகளின் கலைநிகழ்வின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம். (படங்கள் : கர்ணன்)





சுன்னாகம் அறிஞர் ஐயன்னா சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் சி.சிவகுமார், அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையத் தலைவர் ந.அரசரத்தினம், நிலையத் தலைவர் ம.ஞானவேல்ராசா, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.லம்போதரன், சுன்னாகம் பிரதேச சபை அலுவலகப் பொறுப்பதிகாரி, ஆசிரியர் நந்தீஸ்வரன், டாக்டர் ந.கிருஷ்ணராசா, ஆசிரியை [illegible] ஆசிரியை ந.சிவராஜினி நிலையச் செயலாளர் கனகசபாபதி ஆகியோர் வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும் [illegible] காட்சியை இறுதிப் படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்



நண்பர்கள் பாராட்டும் வகையில் சில காரியங்களைச் செய்வீர்கள். இதுவரை உங்களை கண்டு கொள்ளாமல் இருந்த சிலர் வீடு தேடி வரலாம். புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் கைகூடி வரலாம். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. சுகமான அனுபவம் உண்டு.

### இடபம்



தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். தவறு என தெரிந்தும் ஆதாயம் பெறுவதற்காக சில காரியங் களைச் செய்வீர்கள். மனதில் பதட்டம், படபடப்பு உருவாகலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளிடம் வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்கு செல்லும் சூழ்நிலை உருவாகும்.

### மிதுனம்



பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். மாமன், மைத்துனர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்கலாம். சிலரை சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம். உங்களின் பிரச்சினை ஒன்றை நண்பர்களிடம் சொல்லி ஆலோசனை கேட்பீர்கள்.

### கடகம்



எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று முடியாமல் போகலாம். வெளியிடங்களில் யாரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். குடும்ப உறுப்பினர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். விருந்தினர்கள் சிலரின் வருகையால் உங்களின் வேலைகளில் தடை, குறுக்கீடு ஏற்படலாம்.

### சிங்கம்



பழைய நண்பர் ஒருவரைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். பிறருக்காக யாரிடமும் உத்தரவாதம் கொடுப்பதை தவிர்க்கவும். புதியவர்கள் அறிமுகம் கிடைக்கும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். பெற்றோர் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவிகள் கிடைக்கும். ஆடை, ஆபரணம் வாங்கலாம்.

### கன்னி



சவால்களைச் சந்தித்து சாதனை படைக்கும் நாள். தொல்லையாக இருந்த கடன் மிகுதி ஒன்றை தீர்ப்பீர்கள். பொலீஸ் தொடர்பான பணியில் இருப்போருக்கு வேலைப்பளு அதிகரிக்கும். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். மாற்று மத நண்பர்கள் மூலம் மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைக் கும். குடும்ப நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

### துலாம்



தொலைபேசியில் மட்டும் பேசிக் கொண்டிருந்த ஒருவரை இன்று நேரில் சந்திக்கலாம். மருந்துப் பொருள்கள் வாங்க கணிசமான பணத்தை செலவிடலாம். மறதியால் அவதிகளுக்கு ஆள்படலாம். பிள்ளைகள் வழியில் சிறு சிரமங்களுக்கு ஆள்படலாம். உறவினர்களை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம்.

### விருச்சிகம்



நாடி வந்த ஒருவருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். சில வேலைகளில் தீவிரமாக இறங்கி விட்டு, பின்னர் அதிலிருந்து பின்வாங்கலாம். உறவினர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம். உடன் பிறப்புக் கள் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். எதிர்பாராத செலவு நேரும்.

### தனுசு



நண்பர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்கள் உங்களை பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சி கள் நடக்கலாம். வீண் செலவுகளை குறைத்து சேமிப்பை அதிகரிப்பீர்கள். நடக்குமோ, நடக்காதோ என சந்தேகத்தில் இருந்த காரியம் ஒன்று நல்லவிதமாக நடந்து விடலாம். சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம்.

### மகரம்



சோர்வு, சோம்பல் அதிகரிக்கும் நாள். குடும்ப உறுப்பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பொழுதுபோக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். சிலரிடம் வீண் வம்பு பேசி அவர்களை நோகடிப்பீர்கள். உங்களின் குடும்ப பிரச்சினைகளை மற்றவர்களிடம் சொல்ல வேண்டாம். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம்.

### கும்பம்



திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்திற்கு நடக்கும் நாள். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் எச்சரிக்கை அவசியம். அரசியல்வாதிகள் கடும் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். ஒருவர் கேட்ட உதவியை செய்ய மனமில்லாமல் சாக்குப் போக்கு சொல்லி சமாளிப்பீர்கள். கடந்த கால தவறு ஒன்றை நினைத்து வருத்தம் அடைவீர்கள்.

### மீனம்



நட்பாக பழகிய ஒருவர் உங்களிடம் கோபத்துக் கொள்ளலாம். குடும்ப உறுப்பினர்களுடன் ஆலோசித்து சில காரியங்களைச் செய்வீர்கள். திட்டமிட்ட காரியம் ஒன்று மட்டுமின்றி, திட்டமிடாத ஒரு காரியமும் முடிவிற்கு வரும். சில பிரச்சினைகளை நினைத்து தேவையில்லாமல் கவலைப்படுவீர் கள். கனவுத் தொல்லையுண்டு.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் இன்பர்சிட்டியை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்
**நல்லையா தங்கவேலாயுதம்**
(பெரியதம்பி)

அன்னை மடியில்
09.06.1952



இறைவன் அடியில்
29.07.2010

அன்பிற்கு இலக்கணமாய்
பாசத்திற்கு இருப்பிடமாய்
அறிவிற்கு வழிகாட்டியாய்
குடும்பத்திற்கு ஒளிவிளக்காய்
வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
ஆற்றாத நோயாக காலனவன்
உனை அழைத்தானோ!

கனிவான உன் சிரிப்பும்
கபடமற்ற முகவழகும்-இன்று
எம் கண் முன்னே
கலந்து நிழலாடுகிறதே
இளகிய நெஞ்சுடனும்
இன்பமான பேச்சுடனும்
என்றென்றும் எம்முடனே
நீர் இருப்பீர் தெய்வமாகி...

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் இவரது 31ஆம் நாள் அந்தியேட்டி நிகழ்வுகள் நாளை (28.08.2010) சனிக்கிழமை எமது தற்போதைய இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

போருட் அருகாமை,
இன்பர்சிட்டி, பருத்தித்துறை. (102404)

குடும்பத்தினர்

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஓக. 27

"ஆறுதல்" நிறுவனம், சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் அங்கீகாரத்துடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறியை ஒக்ரோபர் மாதத்திலிருந்து கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் நடத்தவுள்ளது.

மேற்படி கற்கைக்கான விண்ணப்பங்கள் வலிகாமம் வலயம் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலிருந்து கோரப்படுகின்றன. பயிற்சிநெறிக்கான வளவாளர்களாக பேராசிரியர்களும், சிரேஷ்ட விரிவுரையாளர்களும், மூத்த கல்வியாளர்களும் பங்குபற்றுவர். அனுமதி பெறுவதற்கான இறுதித் திகதி செப். 15. மேலதிக விவரங்களையும் விண்ணப் பப் படிவங்களையும் அந்தந்தப் பகுதி இணைப்பாளர்களுடன்தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகின்றது. (9-10)

நல்லூரான் உற்சவ தினங்களில் அதிரடி மலிவு விற்பனையில்...

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை சாதனங்கள், சகல மாபிள் வகைகள், கொமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், காஸ்மீதி பேசன்கள் போன்றவற்றை தரமான, மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

போக்குவரத்து வசதி இலவசம்.

ஸ்ரார் செராமிக்ஸ்
இல.05, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0215672061, 077 7578277.

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பாமஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
புங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

## அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம்**
**ஆதனப் பெயர் மாற்றம்**
**வட்டாரம் 06**
**யாவில் ஒழுங்கை**
**ஆதன இல.05**

வட்டாரம் 06 யாவில் ஒழுங்கை ஆதன இலக்கம் 05 இல் அமைந்துள்ள ஆதனமானது தம்பிஐயா மகரதேவா கைம்பெண் பத்மாவதி என்பவரால் அறுதியாக விற்கப்பட்டு நாகராசா பெண் வீரவர்த்தனி என்பவரால் குறித்த ஆதனம் 7032/26.05.2004ஆம் திகதி எழுதப்பட்ட உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து நாகராசா பெண் வீரவர்த்தனி எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக் கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்
வலி.தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். (சி/570169)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனைத் தாயாகக் கண்டது இந்து மதம்

சமயம் என்ற சொல்லின் பொருள் திருநெறி அல்லது செந்நெறி என்று கொள்ளலாம். இந்து சமயம் தொன்மையான ஒரு சமயம்.

இறைவனைத் தாயாகவே கண்டது எங்கள் சமயம். உயிர்களைப் பக்குவப்படுத்தி முத்தியை வழங்கும் நிலையில் இறைவன் முதலில் எடுப்பது தாய் வடிவம் என்று எழுதுகிறார் சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள்.

''சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'' என்று கூறும் சைவ சித்தாந்தம். இறைவன் தாயாக நின்று ஆன்ம கோடிகளைப் பற்றருக்கின்றான் என்று கருதுகிறது. தாயை அணுகித் தமது தேவைகளைக் கேட்பதற்குக் குழந்தைகள் ஒரு போதும் அஞ்சுவதில்லை. அதேபோலவே ஆன்ம விடுதலை என்ற தமது தேவையை உயிர்கள் எப்போதும் தாய்மையாகிய இறையிடம் வேண்டலாம் என்பதால் தான்.




''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து'' என்றும்

''தாயாய் முலையைத் தருவானே'' என்றும்

''தாயாகி என்னை வளர்த்தனை போற்றி'' என்றும் மணிவாசகர் உருகினார்.

''ஈன்றாளுமாய் எனக் கெந்தையுமாய்'' என்றும்

''தாயானைத் தலமான தன்மையானை '' என்றும் அப்பர் பெருமான் ஒரு உயர் நிலையில் நின்று பேசினார். இதே சிந்தனையே ''தாயாகித் தந்தையுமாகித் தாங்குகின்ற எனது தெய்வம்'' என்று வள்ளலாரைப் பாட வைத்தது.

எமது சமயத் தத்துவத்தின்படி தீயும் வெப்பமும் போலச் சிவமும் சக்தியும் வேறாகக் கலந்து நிற்பார்கள் என்பதை,

''சத்தன் அருள் தரின் சத்தி அருளுண்டாம்''

சக்தி அருள் தரின் சத்தன் அருளுண்டாம்''

என்று தெளிவுபடுத்துகிறது திருமந்திரம்.

இறைவனைத் தாயாகப் பார்க்கின்ற இந்தப் பண்பு வாழ்வியலில் பெண்களின் உளச் சக்தியை அசைக்கவல்லது.

எம்மிடத்திலே ஒரு இறைசக்தி இருக்கிறது என்று எண்ணச் செய்து அவர்களின் சுய மதிப்பீட்டை உயர்த்தவல்லது. இறை குணங்களைக் கொண்ட ஆளுமையோடு அவர்களை வளரத் தூண்டுவது. சீர்காழியில் ஞானசம்பந்தர் ''அம்மா'' என்றழைத்து ஞானப் பால் உண்டார்.

காஞ்சிபுரத்தில் 1500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சீகர் என்ற பேச்சு வலுவிழப்பைக் கொண்ட அடியார் சக்தியை வழிபட்டுப் பேசும் திறன் பெற்றதோடன்றி 'ஸ்ரீ முகபஞ்ச துதி' யையும் பாடினார்.

300 ஆண்டுகளுக்கு முன் திருக்கடலூரில் வாழ்ந்தவர் அபிராமிப்பட்டர். அபிராமி அந்தாதியில் 'விழிக்கே அருளுண்டு' என்ற பாடலைப் பாடி அமாவாசை தினத்தில் ஒளி தோன்றச் செய்த அருளாளர்.

கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த காளி உபாஷகர் இராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றி அறியாதார் இல்லை.

இந்துக்கள் துறவறம் பூண்ட நிலையிலும் தாயின் அன்பினால் திணறிப் போன வரலாறுகளையும் எமது சமயம் கண்டுள்ளது.

# ஐயாயிரம் இலங்கையர்களுக்கு கொரியாவில் வேலைவாய்ப்பு

கொழும்பு, ஒக. 27

கொரியாவில் வேலைவாய்ப்புப் பெற இலங்கையிலிருந்து 5000 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொரியாவில் பணியாற்றுவதற்காக நாடு முழுவதிலுமிருந்து 29 ஆயிரத்து 732 பேரின் விண்ணப்பங்கள் தமக்குக் கிடைக்கப் பெற்றுள் என என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

கொரியாவில் பணியாற்றுவதற்காக கடந்த 3 நாள்களில், நாடு முழுவதிலுமிருந்து பல மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டு விண்ணப்பங்கள் சேகரிக்கப்பட்டன.

இதன் அடிப்படையில் கடந்த வருடத்தை விடவும், இவ்வருடம் அதிகமானோர் கொரியாவில் பணியாற்ற விண்ணப்பித்துள்ளனர் என பணியகம் தெரிவித்துள்ளது.

கொரிய மொழியிலான பரீட்சையை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு நடத்தப்படும் பரீட்சை மூலம் 5000 பேர் தெரிவு செய்யப்பட்டு, கொரியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் எனப் பணியகம் தெரிவித்துள்ளது. (சி)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஒக.27

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு திருமதி வாசஸ்பதி ரஜீந்தனின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

செல்வி பாக்கியலட்சுமி நடராசா வயலினும், ரி.வரோதயன் மிருதங்கமும், சதாவேல்மாறன் கடமும் வாசிப்பர்.(201)

* * *

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் சமயச்சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு 'உதித்தனன் உலகம் உய்ய' என்னும் தலைப்பில் துரை இளங்குமரனின் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறும்.

காரைநகர் புகழி சிவசுப்பிரமணிய அறநெறிப் பாடசாலை, காரைநகர் கிழவன் காடு கலாமன்ற அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறும். (201)

* * *

நல்லைக்கந்தன் ஆலய உற்சவத்தை யொட்டி நல்லூர் சைவ மகாசபை நல்லை திருஞான சம்பந்த ஆதீன குரு மூர்த்தி ஆலய மண்டபத்தில் நடத்தும் தெய்வீக தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு முத்தமிழருவி பிரம்மஸ்ரீ வை.நித்தியானந்தசர்மா 'குருகுல [illegible] பில் உரையாற்றுவார். (201)






# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## வல்லவினை தீர்க்க வருவான்

வெல்லவினை தீர்த்திடவே கந்தன்
வருவானே மயிலேறி எங்கும்
நல்லவனாய் ஆக்கிடவே நம்மை
நலம் நாடித் தருவானே நாளும்
பல்புகழும் நிறைந்திருக்கும் தெய்வம்
பார்புகழும் இளயவனாம் என்றும்
நல்லூரம் பதியினிலே அமர்ந்து
நல்லபடி காப்பானே நம்பு.

கந்தரனு பூதியிலே மகிழ்வான்
காவடிகள் ஆடிவரச் சிரிப்பான்
வந்தனைசெய் அடியாரைக் காப்பான்
வருந்துயர்கள் அத்தனையும் தீர்ப்பான்
தந்தமுடை ஆனைமுகன் தம்பி
தக்கபடி காப்பானென நம்பி
பந்தமுடன் வந்திடுவாய் நல்லை(ப்)
பதியினிலே பெற்றிடுவாய் நன்மை.

-சின்மயி -
கோப்பாய்.

## கந்தனே வருவாய்!

நல்லையிலே கோயில் கொண்ட குகனே!
சங்கரன் புதல்வா! சண்முக சுந்தரா!
வள்ளி தேவ குஞ்சரி நாதா!
சூரனை வதைத்த வீரக் குமரா!
அமரரைக் காத்த அற்புத வேலா!
அல்லல்கள் தீர்த்திடத் தாமதம் ஏனோ!
தவித்திடவிடுதல் தகுமோ! தலைவா!
காத்தருள் புரிந்திடக் கந்தனே வருவாய்!

ப.மகேந்திரதாசன்
நாயன்மார்கட்டு.

## தோத்தரித்து நாம் தொழுவோம்

அகிலமெங்கும் போற்றுமெங்கள் அருட்பெருஞ்சோதி
அன்புக்கு இனியவனவன் அடியவர் துயர் துடைப்பவன்
அவனி தன்னை அவனருளால் அனுதினமும் காப்பவன்
அல்லல்கள் நீக்கியே அருட்கிருபை தருபவன்

நல்ல ஊராம் நல்லூரில் நாம் பாடும் திருமுருகன்
நாவாரப்பாடி தினமவனைத் தொழுதெழுவோமெம்
துன்பங்கள் அகல தூயவனும் அருளிடுவான்
திருப்புகழால் அவன்புகழை தோத்தரித்து நாம் தொழுவோம்

காரை. எஸ்.கெங்கா.

## செம்மை நெறி காட்டியருள் தா

நாடும் மொழியும் நமதுயிராய் எந்நாளும்
பாடு பலசுமந்து வாழ்ந்தோம் - ஆடுமயில்
ஆறுமுக வேலா அருள்வாய் நீயெமக்கு
தேறுதல் மிக்கநல் வாழ்வு

எத்தனையோ புலவர் ஏத்தும் முருகப்பா
அத்தனையும் நீ தருநற் பாவாம் - இத்தரையில்
எம்மினம் தலைநிமிர்ந்(து) ஏற்றங்கள் காணவினிச்
செம்மை நெறி காட்டியருள் தா

ச.லலீசன்
அச்சுவேலி.

## காலன் எமை அணுகாமல் கார்

ஓடி ஓடிக் களைத்து வாடி நிற்கும் தமிழர்கள்
நாடி வந்து உம்மிடம் நல்லை நகரில் கூடுவர்
பாடியாடி மகிழ்ந்துமே தம் பாவம் தீர்க்க கூடிடும்
வாடி நிற்கும் தமிழரை வாழ்விப்பது உன் கடன்


குன்றக் குமரனே குறவள்ளிக் காந்தனே
என்றும் வழிபாட்டுக் குரியவனே - சந்ததமும்
கோலமயில் ஏறிவரும் குகனே குருபரனே
காலன் எமை அணுகாமல் கார்

சங்கிலியன் ஆண்ட தமிழ் மண்ணில் வீற்றிருந்து
எங்கள் துயர் போக்கி நிற்கும் எழில் வீரா - சந்ததமும்
கோலமயில் ஏறிவந்து குறைதீர்க்கும் வேலவனே
பாரினர்ரஉ படும் துயரம் பார்.

நாகம்மா - மாணிக்கம்
அளவையூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## சின்னத்தம்பி தியாகராசா

மலர்வு 05.05.1947

உதிர்வு 07.09.2009

ஆண்டொன்று கழிந்திட்ட போதினிலும்
ஆறவில்லை எங்கள் மனதின் சோகங்கள்
இவ்வுலக வாழ்வில் உங்கள் பணி முடித்து
இறைவனடி சென்று ஓராண்டு இன்று ஆனபோதும்
நீங்கள் எமக்காக ஆற்றிய பணிகளை இந்நினைவுநாளில்
நீள நினைந்துருகி உள்ளம் துடிக்கின்றோம்
அன்புடனே எம்மை அரவணைத்து
ஆதரவாய் நம் குடும்பத்தின் நாயகனாய்
நாங்கள் நல்லுயர்வுடன் வாழ்ந்திடவே
நாளுமே பாடுபட்ட நம் குடும்ப குலவிளக்கே!
வாழ்வில் என்றும் வளமுடன் எம்மை வாழவைத்து
வையகத்தில் உயர்த்திவிட்ட உத்தமரே!
தவழ்ந்து மகிழ்ந்து வளர்ந்த உம் ஊரைவிட்டு
தாங்கி வளர்த்த உம் உறவுகளைத்
தரணியிலே தவிக்கவிட்டுச் சென்றதேனோ?
கண்ணகையம்மன் தாளினை நீங்கள் பற்றி இன்றுடன்
காலத்தின் நீரோட்டத்தில் கழிந்ததுவே ஓராண்டு
காலமெல்லாம் நினைத்து புலம்புகின்றோம்
கண்ணீரால் உம்மை அர்ச்சித்து வணங்குகின்றோம்
ஆசையுடன் எம்மை வளர்த்த தலைவனே உங்கள்
ஆத்மா என்றும் சாந்திபெற்றிடவே
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம் முதலாண்டு நினைவு நாளினிலே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (27.08.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எங்கள் குடும்பத் தலைவனின் முதலாண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.)

இல. 100, சீனிவாசகம் வீதி,
கொட்டடி.

- குடும்பத்தினர்.

(102475)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கியின் கிளிநொச்சிக் கிளையில் தொலைந்த தங்க நகைகளுக்கான நஷ்டஈடு

## கொட்டும் மழையிலும் காத்திருந்தனர் மக்கள்





கிளிநொச்சி,ஓக.27

மக்கள் வங்கியின் கிளிநொச்சி கிளையில் கடந்த 24 ஆம் திகதி தொலைந்த தங்க நகைகளுக்காக நஷ்டஈடு வழங்கப்பட்டது. அதனைப் பெறுவதற்காக கொட்டும் மழையிலும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

வன்னிப் பகுதியிலுள்ள மக்களால் இறுதிப் போருக்கும் முற்பட்ட காலங்களில் அடகு வைக்கப்பட்ட நகைகளில் எஞ்சியுள்ளவை மீளளிக்கப்படுவதுடன் தொலைந்த அல்லது களவுபோன நகைகளுக்கான இழப்பீட்டினையும் பவுணில் மத்திய வங்கியால் வெளியிடப்படும் இன்றைய பெறுமதியின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 24 ஆம் திகதியில் இருந்து இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற்று வருவதாக மக்கள் வங்கியின் கிளிநொச்சிக் கிளை முகாமையாளர் சிறிகௌரிபாலா உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த அடகுக்கான வட்டி 31.12.2008 ஆம் ஆண்டு வரை மட்டுமே அறவிடப்படுவதாகவும் அதன் பின்னரான காலத்திற்கு வட்டியிலிருந்து விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை ஆறாயிரம் பேர் வரையிலானோருக்கு அடகுநகை அல்லது நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் பன்னிரண்டாயிரம் பேர் வரையிலானோருக்கு வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது போன்ற செயற்பாடுகள் மக்கள் வங்கியின் பரந்தன், மாங்குளம், முல்லைத்தீவு ஆகிய கிளைகளிலும் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போயா விடுமுறையான இன்றும் இச்செயற்பாடுகள் இடம்பெறுவதானது வரவேற்கத்தக்கது என பொதுமக்கள் தெரிவித்தனர். அத்துடன் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் இதற்காக மக்கள் வங்கியின் முன் நீண்ட வரிசையில் பொதுமக்கள் காத்திருந்தனர். திடீரென காலை வேளையில் பெய்த மழையினால் அவர்கள் பெரிதும் அவதிப்பட்டனர். வங்கியினுள் இவ்வளவு மக்களையும் விடுவதற்கு இடம் போதாமையால் வெளியில் வரிசையில் நிற்கும் ஒழுங்கில் பொலிஸரின் உதவியுடன் மக்கள் வங்கியினுள் அனுமதிக்கப்படுவதனைக்காண முடிந்தது. (த-405)

## மீளக்குடியமர வந்த மக்களுக்கு கிளி.மத்திய கல்லூரியில் விசாரணை

கிளிநொச்சி,ஓக.27

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமரப் பதிவு செய்ய வந்த மக்களை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நீண்ட நேரம் விசாரணைகளுக்காக தடுத்து வைத்ததால் அவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் தெற்கு, சிவநகர், கனகபுரம், ஜெயந்திநகர் கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த வெளி




மாவட்டங்களில் வசித்த மக்கள் மீளக்குடியமர்வதற்காக கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அழைக்கப்பட்டனர்.

இவ்வாறு மீளக்குடியமர வந்த சுமார் 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பதிவுகள் செய்வதற்காகக் காத்திருந்த மக்கள் உணவுக்காகவோ, வேறு தேவைக்காகவோ வெளியில் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதேபோன்று வெளியிலிருந்தும் எவரும் உள்ளே செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

பல மணி நேரங்களாக இந்த மக்கள் இராணுவம், பொலிஸாரால் விசாரணை செய்யபட்டிருந்ததுடன் இந்த விசாரணையில் வேறு சில அமைப்புகளின் உறுப்பினர்களும் ஈடுபட்டிருந்தனர்.

அதன் பின்னர் அவர்கள் குடும்பங்களாகப் புகைப்படம் எடுக்கப்பட்டு அடையாள இலக்கங்கள் வழங்கப்பட்ட பின்னரே மீளக்குடியமர்வதற்கான அனுமதி அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-6)

## வாய்க்கால் புனரமைப்பு

கிளிநொச்சி,ஓக.27

இரணைமடுக்குளத்திலிருந்து கிளிநொச்சி குளத்திற்கு தண்ணீர்வரும் வாய்க்காலின் வேகத்தடுப்பு அணை மற்றும் கதவு அமைப்புக்கள் கோவிந்தன் கடைச்சந்திப் பகுதியில் புனரமைப்பட்டு வருகின்றன.

நீண்டகாலமாக புனரமைக்கப்படாதிருந்த இந்த வேகத்தடுப்பு அணை மற்றும் கதவுப் பகுதிகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன. இக்கதவின் மூலமே கிளிநொச்சிக் குளத்திற்குச் செல்லும் நீரின் அளவும், 3ஆம் வாய்காலூடாகச் செல்லும் நீரின் அளவும் கட்டுப்படுத்தப்படுகின்றது.

இத்திருத்த வேலைகளின் போது கிளிநொச்சி குளத்திற்கு நீர் செல்வதற்காக அருகில் தற்காலிக வாய்க்கால் அமைக்கப்பட்டு அதனூடாக நீர் செல்வதும் குறிப்பிடத்தக்கது.

(த-405)

## அடிக்கடி செயலிழக்கும் ஏ.ரி.எம். இயந்திரங்கள்

### வங்கி வாடிக்கையாளர்கள் விசனம்

கிளிநொச்சி,ஓக.27

கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையின் தன்னியக்கப்பணம் பெறும் இயந்திரம் (ஏ.ரி.எம்) அடிக்கடி இயங்க மறுக்கின்றதாக வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 21 ஆம், 22ஆம் திகதிகளில் இந்த இயந்திரத்தில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்ற வாசகம் காணப்பட்டது. அந்த நாள்கள் சனி, ஞாயிறு தினங்கள் ஆகையால் வங்கியும் இயங்காததால் வாடிக்கையாளர்கள் பணத்தினை மீளப்பெறுவதில் பெரும்சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறு இந்த ஏ.ரி.எம் இயந்திரம் இயங்காதிருந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அடிக்கடி வாடிக்கையாளர்கள் வங்கியில் முறைப்பாடு செய்வதும் அது மீள இயங்குவதும் வழமையான செயலாகிவிட்டது.

இது போன்று கடந்த 21 ஆம், 22 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளையின்ஏ.ரி.எம்இயந்திரமும்செயற்படாமல் இருந்தது. அவ் இயந்திர வாசலில் மக்கள் வங்கி; பரந்தன் கிளையை நாடுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. (த-405)

# மன்னார் மாவட்டத்தில் இதுவரை 12,180 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அமைச்சர் பஸில்

கடந்த காலங்களில் இடம்பெற்று வந்த யுத்தத்தின் காரணமாக மன்னார் மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் 145 குடும்பங்களைத்தவிர 12 ஆயிரத்து 180 குடும்பங்கள் மீளக்குடியேற்றப்பட்டிருப்பதாகவும் எஞ்சியவர்கள் துரிதகதியில் மீளக்குடியேற்றப்படுவார்கள் எனவும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் தலைமையில் கடந்த 22 ஆம் திகதி மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் இதுவரையில் 12ஆயிரத்து180 குடும்பங்கள் தமது சொந்தப்பிரதேசங்களில் மீளக்குடியேற்றப்பட்டிருப்பதாகவும் 145 குடும்பங்களே இன்னும் மீளக்குடியேற்றப்படவுள்ளதாகவும் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கு தலைமைதாங்கிய அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் கடந்த வருடம் ஏப்ரல் 30ஆம் திகதி தொடக்கம் கட்டங்கட்டமாக மீளக்குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். அன்றிலிருந்து இன்று வரையான காலப்பகுதியினுள் 12ஆயிரத்து180 குடும்பங்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

கடந்த ஒரு வருட குறுகிய காலகட்டத்தில் 46,774 பேர் மீளக்குடியேற்றப்பட்டுள்ள நிலையில் தற்போது 145 குடும்பங்களைச் சேர்ந்த 543 பேரே மீளக்குடியேற்றத்திற்காக காத்திருப்பதாகவும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் 153 கிராம சேவையாளர் பிரிவுகள் இருக்கின்றது. இவற்றில் இன்னும் 12 கிராமசேவகர் பிரிவுகளில் மட்டுமே கண்ணிவெடியகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டியிருப்பதாகவும், இப்பிரிவுகளில் 60 வீதமான கண்ணி வெடியகற்றும் நடவடிக்கைகள் முடிவடைந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கிய அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விரைவில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை நிறைவு செய்து எஞ்சியுள்ள மக்களையும் துரிதகதியில் அவர்களது இடங்களில் மீளக்குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் படியும் அனைத்து அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்திருக்கின்றார்.

அதேவேளை மக்களை மீளக்குடியேற்றுவதற்கு வசதியாக காடுகள் துப்பரவு செய்யும் பணிகளையும் கண்ணிவெடிகள் அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளையும் படைத்தரப்பினரின் ஒத்துழைப்புடனும் வழிகாட்டலுடனும் முன்னெடுக்கும் படியும் அரச அதிகாரிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி கலந்துரையாடலின் போது சமூகமளித்திருந்த வன்னி இராணுவ கட்டளை அதிகாரி பிரிகேடியர் கமால் குணரத்தின, தள்ளாடி படைத்தலைமையகத்தின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் மைத்திரி டயஸ் ஆகியோருக்கும் இது தொடர்பில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

(த-80)







அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறிதரன் 'லங்காசிறி' நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு போட்டோ பிரதி இயந்திரம் ஒன்றை அன்பளிப்புச் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

உறுப்பினர் சி.சிறிதரனுடன் நிகழ்வில் கலந்துகொண்ட கிளிநொச்சி வலயத்தின் ஆரம்பக்கல்விச் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பொ. விஜயநாதன், தமிழ்ப்பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எஸ். கிருஷ்ணமூர்த்தி [illegible] போட்டோப் பிரதி இயந்திரத்தை சிறிதரன் எம்.பி , பாடசாலை அதிபர் எஸ். கண்ணபிரான் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் [illegible] கையளிப்பதை இரண்டாவது படத்திலும்,கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: கிளிநொச்சிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

ஐஸ்கிறீம் தயாரிக்கும் இயந்திரம், ஐஸ்பழம் தயாரிக்கும் இயந்திரம் என்பவற்றுடன் குளிர்சாதனப் பெட்டிகளும் (Depriezer) விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் காலை 7 மணி தொடக்கம் 11 மணிவரை

தொடர்பு: 0774147213

## கேற் விற்பனைக்குண்டு

கம்பிக் கேற்றுகள் 3 உடன் விற்பனைக் குண்டு.

தொடர்பு:- 0770770529 (சிறி)

# விளை நிலத்திற்கு பாரிய சக்தி

**Kaushalya Motor Trading (Pvt)Ltd. Colombo 08.**

இலங்கைக்கு அறிமுகப்படுத்தும் விவசாய மன்னன்

**GN 12 Super Fang**



விலை 198,000/=

இலவசம்



**GN 12 Super Fang**

கை உழவு இயந்திர விற்பனை நிலையம் கிளிநொச்சியிலுள்ள கரடிப்போக்கில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. உழவு இயந்திரத்துடன் பல உப உபகரணங்கள் இலவசமாக கிடைப்பதுடன் செப்டெம்பர் 15 ஆம் திகதிக்கு முன் கொள்வனவு செய்பவர்களுக்கு புத்தம்புதிய சைக்கிள் இலவசமாக வழங்கப்படும். இந்த உழவு இயந்திரத்திற்கு 6 மாத உத்தரவாதம் வழங்கப்படும். இலகுதவணைக்கொடுப்பனவுமுறையிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

கிளைகள்:

கரடிப்போக்கு சந்தி
யாழ்ப்பாண வீதி, கிளிநொச்சி.
தொ.பே: 077 1746182
பக்ஸ்: 011 2684247

இல: 162, யாழ்ப்பாண வீதி,
வவுனியா. (கமத்தொழில் மத்திய நிலையத்திற்கு முன்னால்)
சிவா - 078 613 6613


# மனித உரிமைகளை மதித்தே அரசு செயற்பட வேண்டும்

## ஐ.தே.கவின் பொதுச்செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 27

நாட்டில் ஜனநாயகம் மனித உரிமைகள், நாட்டின் சட்டத்தின் ஆட்சி என்பன மதிக்கப்படுவதும் நடைமுறைப்படுத்தப்படுவதும் அரசின் கடமையாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனை விதித்துள்ளமைக்காக அன்றி ஜனநாயக நாடென்ற வகையில் இவற்றைப்பாதுகாப்பதும் கடைப்பிடிப்பதும் முக்கியமானதெனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கொழும்பில் நேற்றுக் காலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகள் தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசுடன் ஐக்கிய தேசியக்கட்சி பேச்சு நடத்துகின்றதென்பதற்காக அரசின் வீண்விரயங்கள், ஊழல்கள் ஜனநாயக விரோத செயற்பாடுகள் என்பவற்றிற்கு எதிராக நடத்துகின்ற போராட்டங்களையோ தெரிவித்துவருகின்ற எதிர்ப்பு நடவடிக்கைகளையோ நிறுத்தப்போவதில்லை எனவும் அவர் கூறினார். (சி)


## ජාතික සම්පත

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 50
திகதி - 25.08.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **R** அதிர்ஷ்ட இலக்கம் **05** வெற்றி இலக்கம் **6 0 1 0 3**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | R 05 6 0 1 0 3 | ரூ. 16,050,550.00 | - |
| 1 பரிசு | 05 6 0 1 0 3 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 6 0 1 0 3 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 0 1 0 3 | ரூ. 10,000.00 | 25 |
| 4 பரிசு | 1 0 3 | ரூ. 1,000.00 | 251 |
| 5 பரிசு | 0 3 | ரூ. 50.00 | 2494 |
| 6 பரிசு | 3 | ரூ. 20.00 | 24011 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசு | 6 0 1 0 | ரூ. 1,000.00 | 27 |
| 8 பரிசு | 6 0 1 | ரூ. 100.00 | 244 |
| 9 பரிசு | 6 0 | ரூ. 50.00 | 2521 |
| 10 பரிசு | R | ரூ. 20.00 | 9906 |
| 11 பரிசு | R 05 | ரூ. 100.00 | 1144 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,795,890.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ. 16,471,754.00


# ஆறாம் மாத நினைவஞ்சலி

திருமதி
**தண்டாயுதபாணி வசந்தாதேவி B.Sc**



மண்ணில் 30.07.1939

விண்ணில் 27.02.2010

**ஆசிரிய சேவை**

1972-74- கல்முனை, காரைதீவு விபுலானந்தர் ம.வி.
1976- புத்தளம், இஸ்லாமிய ம.வி.
1976-77 சிலாபம் R.C.T.பெண்கள் பாடசாலை
நசிறியா ம.வி.
St.MARY'S COLLEGE
1978-84 யா/கைதடி C.M.S.
கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.
1985-99 மட்டுவில் தெற்கு சரஸ்வதி ம.வி.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

கணவர், பெறாமக்கள்,
சகோதர, சகோதரிகள், மைத்துனர்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (சி/570156)

தொ.பே: 0213217998


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2150 திகதி 25-08-2010

ஆங்கில எழுத்திற்கும் **P**

வெற்றி எண்கள் **06 16 28 49** போனஸ் இல: **51**

ஜக்பொட் பரிசு ரூ. 10,470,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 184758 | 20/- | 3,695,160/- |
| 2 இல | 13220 | 100/- | 1,322,000/- |
| 3 இல | 268 | 1,000/- | 268,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7437 | 40/- | 297,480/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 565 | 1,000/- | 565,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,470,400/- | - |
| 1 இல + போனஸ் இல | 8813 | 100/- | 881,300/- |
| 2 இல + போனஸ் இல | 418 | 500/- | 209,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 333 | 200/- | 66,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,818,540/- |
| [illegible] டிக்கட்டுகளுக்காக [illegible] பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 215852 | | 9,418,540/- |

[illegible]0,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற [illegible] டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 202225180-2-28 |
| அம்பாறை | 202225665-6-42 |
| மட்டக்களப்பு | 202241709-9-48 |
| கண்டி | 202223651-5-11 |
| கொழும்பு | 202228039-7-27 |
| இரத்தினபுரி | 202226033-7-43 |
| அம்பாந்தோட்டை | 202222151-7-37 |
| கொழும்பு | 202227309-2-41 |
| அநுராதபுரம் | 202229354-6-25 |
| குருநாகல | 202220937-1-04 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 10,974,600/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஒகஸ்ட் 28 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


# கோதுமை மா விலை அதிகரிப்பு

கொழும்பு,ஒக.27

கோதுமை மாவின் இறக்குமதியின் பொருட்டு வழங்கப்பட்டு வந்த மானியம் குறைக்கப்பட்டதன் காரணமாக கோதுமை மாவின் மொத்த விலை ஒரு ரூபா 50 சதத் தினால் அதிகரித்துள்ளது.

வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் நிமல் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த மானியம் குறைக்கப்பட்டதன் காரணமாக 50 கிலோ கோதுமா மூடை ஒன்றின் விலை 75 ரூபாவால் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக வெதுப்பக உற்பத்திகளிலும் அதிகரிப்பை மேற்கொள்வது குறித்து கலந்துரையாடல்கள் இடம் பெறுகின்றன என நிமல் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

(சி)


## கடை வாடகைக்கு

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0775371631

## மொழி பெயர்ப்பு வேலைகள்

ஆங்கிலம்-தமிழ்-ஆங்கிலம் மொழி பெயர்ப்பு வேலைகள் திறம்படச் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:- ஆனந்தமூர்த்தி
0771041759
27, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்தில் தொடர்ச்சியாக கட்டட வேலைக்காக மேசன், கூலியாள்கள், தச்சுவேலை தெரிந்தோர் தேவைப்படுகிறார்கள். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 0776171663, 0213219911


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**நடராசா குமாரதேவன்**

அன்னை மடியில் 24.10.1955

ஆண்டவன் திருவடியில் 28.07.2010



கடந்த 28.07.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.08.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் மரணச் செய்தியறிந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

A.P.C வீதி,
கைதடி தெற்கு, கைதடி. (102481)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணப் பாடசாலை அணிகளின் சதுரங்கப் போட்டி நீர்கொழும்பில்

## யாழ். மாவட்டத்திலிருந்து 12 அணிகள்

வலி.வடக்கு,ஒக.27

இலங்கை கல்வி அமைச்சு மாகாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் ஆண்கள், பெண்களுக்கான சதுரங்கப்போட்டிகள் அடுத்த மாதம் 11ஆம், 12ஆம், 13 ஆம் திகதிகளில் நீர்கொழும்பு தளுவகொட்டுவ லொயலா கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இதில் யாழ். மாவட்டத்திலிருந்து பாடசாலைகளின் 12 அணிகள் கலந்து கொள்கின்றன.

இப்போட்டிகளில் ஆண்கள், பெண்கள் பிரிவில் 15,19 வயதுப் பிரிவு அணிகளைச் சேர்ந்த 600 வீரர்கள், வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

நீர்கொழும்பு தளுவகொட்டுவ சாந்த மகா வித்தியாலயம், கொச்சிக்கடை மகா வித்தியாலயம் என்பவற்றில் வீரர்கள், வீராங்கனைகள் தங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் வடமாகாணத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளாக யாழ். மாவட்டப் பாடசாலைகள் கலந்து கொள்கின்றன.

15 வயது ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றின் அணிகளும்,

19 வயது ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணிகளும் கலந்து கொள்ளவுள்ளன.

பெண்களுக்கான 15 வயதுப் பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணிகளும்,

19 வயதுப்பிரிவில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணிகளும் கலந்துகொள்ளவுள்ளன. (த-86)

# புத்தூர் கலைமதி வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக.27

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் கனகரத்தினம் பாலகிருஸ்ணா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

இதில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துப் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை 25:22, 28,26 செற் கணக்கில் வெற்றிகொண்டது. (த-23)

# தாச்சிப்போட்டி

யாழ்ப்பாணம்,ஒக.27

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 2010 ஆம் ஆண்டுக்கான தாச்சிச் சுற்றுப்போட்டித் தொடரில் நாளை சனிக்கிழமை உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

பிற்பகல் 3.30 மணி

கொக்குவில் காந்திஜி விளையாட்டுக்கழகம் எதிர் கொக்குவில் வராகி விளையாட்டுக்கழகம்.

பிற்பகல் 4.30 மணி

நவாலி சென்றோக் விளையாட்டுக்கழகம் எதிர் சுதுமலை யுவசக்தி விளையாட்டுக்கழகம். (த-23)

# கரம் போட்டியில் 3 பாடசாலைகள் வெற்றி

வலி.வடக்கு ,ஒக.27

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரம் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:

* முதலாம் இடம்- யாழ். இந்து மகளிர் கல்லூரி.
* இரண்டாம் இடம்- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
* மூன்றாம் இடம்- வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி. (த-86)




# சுண்டுக்குளி சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவு விழாப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக.27

சுண்டுக்குளி சனசமூக நிலையத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நாளை சனிக்கிழமை காலை தொடக்கம் மாலை வரை விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

காலை நிகழ்வாக காலை 6 மணியளவில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான சைக்கிள் ஓட்டப்போட்டியும், அதனைத் தொடர்ந்து கழகத்தின் 40 வயதிற்கு மேற்பட்ட அங்கத்தவர்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும், அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மரதன் ஓட்டப்போட்டியும் நடைபெறவுள்ளன.

மாலை நிகழ்வாக சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி, கயிறு இழுத்தல் (ஆண், பெண்), சங்கீதக் கதிரை (ஆண்,பெண்), முட்டி உடைத்தல் (ஆண்), கிறீஸ் கம்பம் ஏறுதல் (ஆண்) போட்டிகள் இடம்பெறவுள்ளன என போட்டி ஏற்பாட்டாளர் அறிவித்துள்ளார். (த-23)

# உத்தமக்குமரன்,ராகுலன் சிறப்பான ஆட்டம்; 137 ஓட்டங்களால் வென்றது கே.ஸி.ஸி.ஸி

யாழ்ப்பாணம்,ஒக.27

உத்தமக்குமரன், ராகுலன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டம் கைகொடுக்க 137 ஓட்டங்களால் வெற்றிகொண்டது கே.ஸி.ஸி.ஸி அணி.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக அவையினரால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கே.ஸி.ஸி.ஸி அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 318 ஓட்டங்களைப் பெற்றது.

உத்தமக்குமரன் 80 ஓட்டங்களையும், ராகுலன் 82 ஓட்டங்களையும், உமாநாத் 34 ஓட்டங்களையும், சசிகரன் 32 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக வீரர்களான கோகுலன் 4 விக்கெட்டுக்களையும், திவாகர் 3 விக்கெட்டுக்களையும்,விதுஷணன், அலன்குமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

319 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் கோகுலன் 41 ஓட்டங்களைத் தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் கே.ஸி.ஸி.ஸி அணி வீரர்களான றொபேசன் 4 விக்கெட்டுக்களையும், நிரேசன், கிருபவன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் உமாநாத், ராகுலன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக.27

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் அமரர் கனகரத்தினம் பாலகிருஸ்ணா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள கால் இறுதியாட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

மாலை 6.30

அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி எதிர் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம்.

இரவு 8 மணி

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் எதிர் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம். (த-23)

# 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் மேசியின் சாதனை பதிவாகிறது

வலி.வடக்கு,ஒக.27

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய தடகள விளையாட்டுப் போட்டிகளில் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியின் சாதனையாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த என்.மேசியின் சாதனையை வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் பதிவு செய்யவுள்ளது.

முதற் தடவையாக வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தின் சாதனைகள் பதிவு செய்யப்படுவதனால் 2007, 2009, 2010 ஆம் ஆண்டுகளின் சிறந்த பெறுபேறுகளின் அடிப்படையில் இப்பதிவு மேற்கொள்ளப்படவுள்ளது.

2007 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த என்.மேசி 44:56:7 செக்கன்களிலும், 2009 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஈ.எம்.சி.எல் ஹேரத் 47:40 செக்கன்களிலும், 2010 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.மதுரா 46:12 செக்கன் களிலும் 10 ஆயிரம் மீற்றரை ஓடியுள்ளார்கள்.

இந்நிலையில் வடமாகாணத்தின் சாதனையாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த என். மேசியின் சிறந்த பெறுபேறான 44:56:7 செக்கன் சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது. (த-86)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினரால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஹொக்கிப் போட்டியில் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்ட யாழ். மாவட்ட ஆண்கள் அணியையும், இரண்டாம் இடத்தைப் பெற்ற வவுனியா மாவட்ட ஆண்கள் அணியையும் படங்களில் காணலாம். (படங்கள்:தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜம்மு காஷ்மீர் வன்முறைக்கு தீர்வு காண விரைவில் பேச்சு

## அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு



புதுடில்லி,ஓக.27

காஷ்மீர் வன்முறைக்குத் தீர்வு காண்பதற்காக விரைவில் மீண்டும்பேச்சு தொடங்கப்படும் - என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.

மாநிலங்களின் தலைமைப் பொலிஸ் அதிகாரிகள் மாநாடு நேற்றுமுன்தினம் புதுடில்லியில் நடைபெற்றது.

மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசிய சிதம்பரம் மேலும் கூறியவை வருமாறு -

காஷ்மீரில் நிலவி வரும் 'கல்லெறி' போன்ற வன்முறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அனைத்துப் பிரிவு மக்கள், அனைத்துக் கட்சி மற்றும் அனைத்துக் குழுக்களின் பிரதிநிதிகளுடனும் மீண்டும் பேச்சு நடத்துவதற்கு மத்திய அரசு தயாராக இருக்கிறது. அடுத்த சில நாட்களில், அங்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நல்ல தொடக்கமாக அமை யும் என்று நம்புகிறேன்.

கடந்த 2009 மற்றும் 2010 இல் முதல் 8 மாதங்களில், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுள்ள தீய சக்திகளினாலும் நமது பாதுகாப்புக்கு பெரிய அளவில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டன. அவற்றை நம்பிக்கையுடனும், தைரியத்துடனும் எதிர்கொண்டோம்.

குறிப்பாக கடந்த 21 மாதங்களில் பயங்கரவாதத் தாக்குதல் எதுவும் நடைபெறவில்லை என்பதை உதாரணமாகக் கூறலாம். புனே ஜெர்மன் பேக்கரியில் நடைபெற்ற தாக்குதல் ஒரு களங்கமாக அமைந்தாலும், அதில் தொடர்புடைய குற்றவாளிகளை விரைவில் கைது செய்வோம்.

நக்ஸலைட் பிரச்சினையை பொறுத்த வரை சில பின்னடைவுகள் ஏற்பட்டாலும், மாவோயிஸ்ட்டுகள் ஆதிக்கம் நிறைந்த சில மாவட்டங்களில் படையினர் தங்கள் நிலையை மீண்டும் உறுதி செய்துள்ளனர்.

இந்த ஆண்டில் மட்டும் நக்ஸலைட்டுகளால் 424 அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 192 பேர், பொலிஸாரின் கையாட்கள் என்ற பெயரில் தீர்த்துக் கட்டப்பட்டுள்ளனர். பேச்சுக்கு முறைப்படி அழைத்தும் மாவோயிஸ்ட்டுகளிடம் இருந்து சரியான பதில் வராதது வருந்தத்தக்கது.

வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாதத்தை ஒடுக்குவதில் சாதனை புரிந்துள்ளோம். 2010ஆம் ஆண்டில் இருந்து அங்கு வன்முறைகள் கணிசமாகக் குறைந்து வருகின்றன. பேச்சை தவிர்த்து வரும் அமைப்புகள், தாக்குதலை நிறுத்தி அரசுடன் பேச்சு வர வேண்டும்.

உள்நாட்டுப் பாதுகாப்புத் தொடர்பாக மாநில அரசுகளின் கருத்துகளை மத்திய அரசு வரவேற்கிறது. இவ்வாறு ஒருங்கிணைந்து செயற்படுவ்தன் மூலம்தான் நம்மை அச்சுறுத்திவரும் தீவிரவாதத்தை இந்த நாட்டை விட்டு விரட்ட முடியும்.

- இப்படி அவர் கூறினார்.

**இந்தியச் செய்திகள்**

# இலங்கைக்குச் சர்வகட்சிக் குழுவை அனுப்பி உண்மையைக் கண்டறிக!

## அ.தி.மு.க. வலியுறுத்து

சென்னை,ஓக.27

இலங்கைக்கு சர்வகட்சி எம்.பி.க்கள் அடங்கிய குழுவை அனுப்ப வேண்டும் - என்று அ.தி.மு.க. எம்.பி. தம்பித்துரை வலியுறுத்தினார்.

மக்களவையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றது. விவாதத்தில் பங்கேற்று பேசிய தம்பித்துரை மேலும் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களுக்காகவே ராஜீவ் உயிரை விட்டார். அப்படிப்பட்ட ராஜீவ் போட்ட ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமல் கிடப்பில் கிடக்கிறது. அதை நிறைவேற்றாமல், வெறும், 500 கோடி ரூபாவை அளிப்பதால் தமிழர்கள் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடாது. தமிழர்களுக்குச் சம உரிமை கிடைத்தால் மட்டுமே தீர்வு கிடைக்கும்.

தமிழர் பிரச்சினையை ஒதுக்கி வைத்து விட்டு இலங்கையைப் பார்க்கும் போக்கை மத்திய அரசு கைவிட வேண்டும். ஆளும் கூட்டணி எம்.பிக்களை மட்டும் அழைத்துச் சென்று அந்நாட்டு ஜனாதிபதியிடம் நினைவுப்பரிசுகளை வாங்கி வரச் செய்வதை விட பத்திரிகையாளர்கள், சர்வகட்சி எம்.பிக்கள் அடங்கிய குழுவை அனுப்பி உண்மை நிலைவரத்தை அறிந்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

# தமிழக அரசியலில் மிகப் பெரிய தலைவராக வருவார் விஜயகாந்த்

## காங். இளங்கோவன் கூறுகிறார்



சென்னை,ஓக.27

தமிழக அரசியலில் மிகப்பெரிய தலைவராக தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வருவார் - என்று தமிழகக் காங்கிரஸ் முன்னாள் தலைவர் இளங்கோவன் கூறினார்.

விஜயகாந்துக்கு நேற்றுமுன்தினம் 58 ஆவது பிறந்த நாள். சாலிகிராமத்தில் உள்ள விஜயகாந்தின் இல்லத்திற்கு நேரடியாகச் சென்று இளங்கோவன் வாழ்த்துத் தெரிவித்தார். விஜயகாந்துடன் 10 நிமிடம் பேசித் திரும்பிய இளங்கோவன் செய்தியாளர்களிடம் கூறுகையில் -

எதிர்வரும் காலத்தில் தமிழக அரசியலில் விஜயகாந்த் மிகப்பெரிய தலைவராக வருவார். அவரது கட்சி வேகமாக வளர்ந்து வருகிறது - என்று கூறினார்.

தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, இந்தியக் கம்யூனிஸ்ட், கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் ராமகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் தொலைபேசியில் தொடர்புக் கொண்டு விஜயகாந்திற்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். காங்கிரஸ் எம்.பி. ஆரூண் நேரில் வாழ்த்துத் தெரிவித்தார்.

தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் விஜயகாந்தை நேரடியாகச் சந்தித்து இளங்கோவன் வாழ்த்துத் தெரிவித்துள்ளமை அரசியல் வட்டாரத்தில் ஆர்வமாகப் பேசப்படுகிறது.

# காங்கிரஸுடன் இணையமாட்டோம்

## சிரஞ்சீவி தெரிவிப்பு

விசாகப்பட்டினம், ஓக. 27

பிரஜாராஜ்யம், காங்கிரஸுடன் இணையாது - என்று அக்கட்சியின் தலைவரும், நடிகருமான சிரஞ்சீவி புதன்கிழமை கூறினார்.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற கட்சி நிகழ்ச்சியில் பங்கேற்ற பின் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில் -

பிரஜாராஜ்யம் காங்கிரஸுடன் இணையப் போவதாக எழுந்துள்ள செய்திகளில் உண்மை இல்லை. எங்களோடு லட்சக் கணக்கான தொண்டர்கள் இருக்கும்போது நாங்கள் ஏன் மற்றவர்களுடன் இணைய வேண்டும் என்று கூறினார்.

## இலங்கை மீனவர்களின் அறிவுரையின் படி

# மீன்பிடி லாபப் பங்கீட்டில் புதியமுறை; தமிழக விசைப்படகு மீனவர்கள் முடிவு

இராமநாதபுரம்,ஓக.27

இந்தியா வந்த இலங்கை மீனவப் பிரதிநிதிகளின் வேண்டுகோளை ஏற்ற விசைப்படகு மீனவர்கள், நாளை 28 ஆம் திகதி மீண்டும் கடலுக்குச் செல்கின்றனர். மீன்பிடியில் கிடைக்கும் இலாபத்தில் உரிமையாளரும், தொழிலாளர்களும் சமமாகப் பிரித்துக் கொள்ளும் புதிய வருவாய் பங்கீடுக்கும் முடிவுசெய்யப்பட்டது.

தடைசெய்யப்பட்ட வலைப் பயன்பாடு காரணமாக மீன்பாடு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால், நஷ்டத்தை சரி செய்ய வேண்டிய கட்டாயத்தில் இராமநாதபுரம், புதுக்கோட்டை உட்பட சில மாவட்டங்களை சேர்ந்த விசைப்படகு மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்தனர்.

தமிழக மீனவர்களின் தடை செய்யப்பட்ட பயன்பாட்டால் தங்களுக்கு இருக்கும் பிரச்சினைகளைத் தெரிவிக்க, கடந்த 16 ஆம் திகதி இலங்கை மீனவப் பிரதிநிதிகள் குழு தமிழகம் வந்து, இங்குள்ள மீனவ பிரதிநிதிகளைச் சந்தித்தது. இதில், தமிழக மீனவர்கள் பின்பற்ற வேண்டியவை குறித்து சில கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

இதற்கிடையில், விசைப்படகுகளின் அனைத்து அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டம் நேற்றுமுன்தினம் இராமேஸ்வரத்தில் நடந்தது. இந்திய தேசிய மீனவர் சங்கம் தலைவர் அருளானந்தம் தலைமை வகித்தார்.

இலங்கைக் கடல் எல்லையில் மீன்பிடித் தடையை முழுவதுமாகத் தவிர்க்கவும், தடை செய்யப்பட்ட வலைப் பயன்பாட்டை நிறுத்தவும், ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், மீன்பிடியில் கிடைக்கும் இலாபத்தில் செலவு போக மீதத்தை உரிமையாளரும், தொழிலாளிகளும் சமமாக பிரித்துக் கொள்ளும் புதிய வருவாய் பங்கீடுக்கும் முடிவு செய்யப்பட்டது. இலங்கை மீனவர்களின் அறிவுரையின்படிதான் இந்தத் திடீர் முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதுகுறித்து தமிழ்நாடு விசைப் படகு மீனவர் நலச்சங்க மாநிலப் பொதுச்செயலாளர் போஸ் கூறுகையில் -

இலங்கை மீனவர்களின் வருகைக்குப் பின்னர் தமிழக மீனவர்கள் மத்தியில் நிறைய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதன் வெளிப்பாடுதான், நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள். புதிய முடிவைத் தொடர்ந்து எதிர்வரும் 28 ஆம் திகதிமுதல் விசைப்படகுகள் மீண்டும் கடலுக்குச் செல்கின்றன, - என்று கூறினார்.

# நான் பேசியது தவறெனில் அதைத் தூண்டிய மஹிந்தவுக்கு தண்டனை வழங்குவது யார்?

## அக்கினிப்புயல் சீமான் ஆவேசம்



சென்னை, ஓக.27

சீமானை சிறையில் அடைத்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று தமிழக அரசு பகல் கனவு காண்கிறது. நான் பேசியது தவறு என்றால் இந்தக் குற்றத்தைத் தூண்டிவிட்ட மஹிந்த ராஜபக்ஷவிற்குத் தண்டனை வழங்குவது யார்? மக்களுக்காக நடத்தப்படும் போராட்டம் தவறு என்றால் அதே தவறை மீண்டும், மீண்டும் செய்வேன்.

- இவ்வாறு ஈழத் தமிழ் ஆதரவு அக்கினிப்புயல் சீமான் ஆவேசமாகக் குமுறினார்.

நாகை மீனவர் ஒருவர் இலங்கைக் கடற்படையால் அடித்துப்படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து சென்னையில் நாம் தமிழர் இயக்கத்தின் சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சீமான் இந்திய இறையாண்மைக்கு எதிராகவும், வன்முறையைத் தூண்டும் வகையில் பேசினார் எனவும் பொலிஸார் வழக்குப் பதிவுசெய்தனர்.

இதைத்தொடர்ந்து தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்ட சீமான், வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் உள்ள சீமான் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க அறிவுரைக் கழகம் உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் சீமான் நேற்றுமுன்தினம் அறிவுரைக் கழகத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

பின்னர் வெளியே வந்த சீமான், பலத்த பொலிஸ் பாதுகாப்பையும் பொருட்படுத்தாமல் செய்தியாளர்களிடம் பேசினார்.

அவர் அப்போது கூறியவை வருமாறு -

இறையாண்மைக்கு எதிராக நான் என்ன பேசி விட்டேன், நான் பேசியதால் இரு நாட்டு உறவுகளும் பாதிக்கப்படும் என்றால் ஒரு லட்சத்து 75 ஆயிரம் நமத் தமிழர்களை கொன்று குவித்த மஹிந்த ராஜபக்ஷவின் செயலால் இரு நாடுகளின் உறவும் ஏன் பாதிக்கப்படவில்லை.

நான் பேசியது தவறு என்றால் இந்தக் குற்றத்தை தூண்டி விட்ட மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தண்டனை வழங்குவது யார்? சீமானை சிறையில் அடைத்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று தமிழக அரசு பகல் கனவு காண்கிறது.

மக்களுக்காக நடத்தப்படும் போராட்டம் தவறு என்றால் அதே தவறை மீண்டும், மீண்டும் செய்வேன்.

தமிழகத்தில் வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் எங்களுக்கு இல்லை. அரசியலில் லாபம் அடைவதற்காக நான் அரசியல் இயக்கத்தை தொடங்கவில்லை.

இந்திய சட்டம் 21 இன் படி தமது கருத்துக்களை சுதந்திரமாகத் தெரிவிக்க எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. அந்த உரிமை தமிழனுக்குக் கிடையாதா?

- இப்படி அவர் ஆவேசமாக கேள்விகளை எழுப்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரப் பகுதிகளுக்கு இடம்பெயரும் அல் குவைதா இயக்கத் தீவிரவாதிகள்

இஸ்லாமாபாத், ஓக. 27

பாகிஸ்தானின் வடமேற்கிலுள்ள பழங்குடிகள் வாழ் பகுதிகள் இனியும் பாதுகாப்பானவை அல்ல என்ற முடிவுக்கு வந்துள்ள அல்-குவைதா தீவிரவாதிகள் அங்கிருந்து தமது முகாம்களை, பாதுகாப்பான நகர பகுதிகளுக்கு மாற்றத் தொடங்கிவிட்டனர்.

பழங்குடிகள் பகுதிகளில் அமெரிக்காவின் ஒற்றர்கள் எங்கும் நிரம்பிவிட்டனர். போதாக்குறைக்கு அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் அடிக்கடி அல்-குவைதா தீவிரவாதிகளை இலக்கு வைத்து வேட்டையாடுகின்றன.

இப்படி கடந்த இரு ஆண்டுகளில் நடந்த ஆளில்லா விமான குண்டுத் தாக்குதலில் மிக முக்கிய பொறுப்புகளை வகித்து வந்த ஏராளமான அல்-குவைதா அமைப்பினர் பலியாகிவிட்டனர்.

இப்படியே சென்றால் தமது இயக்கத்தினர் அடியோடு அழிக்கப்பட்டுவிடுவார்கள் என்னும் அச்சம் காரணமாக அந்த இயக்கத்தினர் கராச்சி உட்பட பாதுகாப்புமிக்க நகரங்களில் தமது முகாம்களை மாற்றிவருகின்றனர் என 'டெய்லி ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேலை நாட்டு முன்னாள் உளவுத்துறை அதிகாரிகள் இந்தத் தகவலை தெரிவித்துள்ளனர் என அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. கராச்சி போன்ற நகரங்களுக்கு சென்றுவிட்டால் அமெரிக்க விமானங்களால் தாக்க முடியாது. மேலும் கராச்சியில் பட்டாணியர் பிரிவைச் சேர்ந்த முஸ்லிம்கள் ஏராளம் வசிக்கின்றனர். அவர்கள் தமக்கு ஆதரவு தருவார்கள் என அல்-குவைதா தீவிரவாதிகள் தமக்குள் கணக்கு போடுகின்றனர்.

ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டி பாகிஸ்தானின் வடமேற்கில் பழங்குடிகள் வசிக்கின்றனர். இங்கே இருந்து பதுங்கி ஆப்கானிஸ்தானில் செயல்படும் அமெரிக்க கூட்டணிப் படைகளை தாக்குவது என்ற நோக்கில் அல்-குவைதா தீவிரவாதிகள் அங்கு குழுமினர். உள்ளூர் மக்களும் அவர்களுக்கு அரவணைப்பும், ஆதரவும் தந்து வந்தனர். இதனால் 2001 முதல் 2008 வரை பிரச்சினை இல்லாமல் காலம் தள்ளினர்.

இந்நிலையில், அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் அவ்வப்போது குண்டுவீச்சு நடத்துவதால் அந்த தாக்குதலில் அல்-குவைதா அமைப்பைச் சேர்ந்தவர்களில் முக்கால்வாசி பேர் கொல்லப்பட்டுவிட்டனர். இதன் காரணமாக அல்-குவைதா அமைப்பினரால் அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகள் மீது மிகப் பெரிய அளவில் தாக்குதல் நடத்த வாய்ப்பே கிடையாது என்று பாகிஸ்தான் உளவு அமைப்பைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அல்-குவைதா அமைப்பைச் சேர்ந்த முதல்நிலைப்பிரிவு தலைவர்கள், ஆப்கன் தலிபான் அமைப்பைச் சேர்ந்த மூத்த நிர்வாகிகள், குவெட்டாவிலிருந்து இயங்கும் சுரா என்ற அமைப்பின் தலைவர்கள் என பல தீவிரவாதிகள் கராச்சியில் வசிக்கின்றனர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.



வடகொரிய பியாங்யாங் விமான நிலையம் வந்தடைந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்டரை (மத்தியில்), சிறுமி ஒருத்தி அன்போடு வரவேற்கிறாள்.

உலக அரங்கில்

## விமானம் விழுந்து நொறுங்கியது; கொங்கோவில் 19 பேர் உயிரிழப்பு!

கின்ஷசா, ஓக. 27

கொங்கோவில் விமானம் கீழே விழுந்து நொறுங்கியதில் 19 பயணிகள் பலியானார்கள்.

கொங்கோவில் இயங்கும் 'பிளோர் ஏர்' என்ற தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான ஒரு பயணிகள் விமானம், மத்திய கொங்கோவிலிருந்து பன்டுன்டு என்ற மாகாணத்திற்கு புதன்கிழமை சென்று கொண்டிருந்தது. அங்கிருந்து அந்த விமானம் மீண்டும் தலைநகர் கின்ஷசாவுக்குச் செல்லவேண்டும்.

ஆனால், பன்டுன்டு மாகாணத்தில் சென்றுகொண்டிருந்தபோது, அந்த விமானம் திடீரென்று தரையில் விழுந்து நொறுங்கியது. இதில் பல பயணிகள் பலியானார்கள்.

உடனடியாக அந்த இடத்துக்கு மீட்புக் குழுவினரும், பொலிஸாரும் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். அவர்கள் 19 பயணிகளின் சடலங்களை மீட்டனர். 2 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். இந்தத் தகவலை பன்டுன்டு மாகாண தலைமை பொலிஸ் அதிகாரி கேர்னல் ஜோலி லிமெங்கோ தெரிவித்தார்.

எனினும், அந்த விமானத்தில் மொத்தம் எத்தனை பேர் பயணம் செய்தனர்? அவர்களில் எத்தனை பேர் பலியாயினர்? எத்தனை பேர் உயிர் பிழைத்தனர்? என்ற விவரங்கள் முழுமையாக வெளியாக வில்லை.

மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

## 10 இடங்களில் குண்டுவெடிப்பு: ஈராக்கில் 52 பேர் பரிதாபப் பலி!

பக்தாத், ஓக. 27

ஈராக்கின் 10 நகரங்களில் பொலிஸாரை குறிவைத்து தீவிரவாதிகள் புதன் கிழமை மேற்கொண்ட கார்க் குண்டுத் தாக்குதல்களில் 52 பேர் உயிரிழந்தனர். 250 பேர் காயமடைந்தனர்.

ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் திரும்பப் பெறப்பட்டுவரும் நிலையில், மீண்டும் தீவிரவாதிகள் தீவிரவாதத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

14 கார்க் குண்டுகளைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. ஈராக்கிலிருந்து முழுவதுமாக அமெரிக்கப் படைகளைத் திரும்பப்பெற வலியுறுத்தியே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

தென்கிழக்குப் பக்தாத்திலுள்ள கடவுச்சீட்டு அலுவலகம் அருகே நடந்த குண்டு வெடிப்பில் 15 பொலிஸார் உட்பட 20 பேர் இறந்தனர். 90 பேர் காயமடைந்தனர்.

காஹிரா பகுதியில் நடந்த குண்டு வெடிப்பில் 15 பேர் உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கூட்டத்திற்குள் புகுந்தது லொறி : 10 பேர் மரணம்; 2 பேர் காயம்!

பீஜிங், ஓக. 27

சீனாவில் வீதி ஓரத்தில் நின்றுகொண்டிருந்த மக்கள் கூட்டத்தில் லொறி புகுந்ததில் 10 பேர் உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்தனர்.

சீனாவின் கிழக்குப் பகுதியிலுள்ள புஜியான் மாகாணத்திலுள்ள ஷவுனிங் பகுதியில் ஸியான்ஃபெங் என்ற கிராமத்தில் நெடுஞ்சாலையின் ஓரத்தில் பொதுமக்கள் கூட்டமாக நின்று புதன்கிழமை பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக வந்த லொரி ஒன்று, கட்டுப்பாட்டை இழந்து கூட்டத்துக்குள் புகுந்தது. இதில் 8 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்லப்பட்டனர். அவர்களில் 2 பேர் வைத்தியசாலையில் உயிரிழந்தனர். காயமடைந்த ஏனைய 2 பேருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

# பின்லேடன் மருமகன் அபு அல் கயரின் சொத்துகளை முடக்கியது அமெ.

வாஷிங்டன், ஓக. 27

அல்-குவைதா இயக்கத் தலைவரும், பின்லேடனின் மருமகனுமான முகமது அப்துல்லா ஹசன் அபு அல் கயரின் சொத்துகளை அமெரிக்க அரசு முடக்கி வைத்துள்ளது.

பின்லேடனின் மருமகனான முகமது அப்துல்லா ஹசன் 1990ஆம் ஆண்டுகளின் நடுவில் இராணுவப் பயிற்சி பெற்றா. அதைத் தொடர்ந்து அவர் பின்லேடனின் பாதுகாவலராக செயல்பட்டு வந்தார். பாதுகாவலராக சில ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் அவருக்கு பின்லேடன் தன் மகளை திருமணம் செய்து கொடுத்தார்.

இவர் அல்-குவைதா இயக்கத்துக்காக ஆட்களைத் தேர்வு செய்யும் பொறுப்பிலும் இருந்தார். சவூதி அரேபிய அரசால் தேடப்பட்டு வந்த 85 பேர் கொண்ட பட்டியலில் 2009ஆம் ஆண்டு இவரது பெயர் இடம்பெற்றது. அமெரிக்க நலன்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்துவதற்காக கோடிக்கணக்கில் இவர் பணம் திரட்டியும் கொடுத்துள்ளார்.

அல்-குவைதா இயக்கத்தின் தலைமை நிதி அதிகாரியாக இருந்த முஸ்தபா அல் யாசித் ஏவுகணைத் தாக்குதலில் பலியான பின்னர் அந்த இடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டார். முஸ்தபா அல் யாசித், அல்-குவைதா இயக்கத்தின் தலைவர்கள் வரிசையில் 3ஆவது இடத்தில் இருந்தார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் யாசித் பாகிஸ்தானில் தங்கியிருந்தபோது ஏவுகணைத் தாக்குதலில் பலியானார். இதைத் தொடர்ந்து அந்த இயக்கத்தின் தலைமை நிதி அதிகாரியாக மருமகன் முகமது அப்துல்லா ஹசனை பின்லேடன் நியமித்தார்.

இதையறிந்த அமெரிக்க ஒபாமா அரசு, முகமது அப்துல்லா ஹசனின் சொத்துகளை முடக்கி வைத்துள்ளது. அவருடன் அமெரிக்கர்கள் எந்த விதமான வியாபார தொடர்பு வைத்துக்கொள்ளவும் அமெரிக்கா தடை விதித்துள்ளது.

ஐ.நா.சபையும் இதுபோன்றதொரு நடவடிக்கையை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கையின்படி எந்த நாட்டுக் குடிமகனும் இவருடன் வர்த்தக உறவு வைத்துக்கொள்ளக் கூடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தீவிரவாத ஒழிப்புக்கான துணை அமைச்சர் ஸ்டூவர்ட் லெவி கூறுகையில், ''நிதி அதிகாரியாக இருந்த முஸ்தபா அபு அல் யாசித்தின் மரணத்துக்குப் பின்னர் அவருடைய இடத்தை நிரப்புவதற்கு முகமது அப்துல்லா ஹசன் நியமிக்கப்பட்டார். இவரை போன்றவர்களுக்கு எதிராக நாங்கள் தொடர்ந்து செயல்படுவோம். அவரது சொத்துகளை அமெரிக்காவும், ஐ.நா. சபையும் முடக்கி வைத்திருப்பதன் மூலம் அல்-குவைதா இயக்கத்துக்கு மிகப்பெரிய அளவில் நிதி நெருக்கடி ஏற்படும்'' எனக் குறிப்பிட்டார்.



ஜேர்மன் தலைநகரான பேர்ளினில் ஜனாதிபதி ஏஞ்சலியா மார்கெல்(இடது), ஸ்லோவேகியாவின் பிரதமர் இவிடா ராடிகோவாவை(வலது) இராணுவ மரியாதையுடன் வரவேற்றார்.

# ஹிட்லரின் மூதாதையர்கள் யூத இனத்தினராக இருக்கலாம்!

ஜேர்மனியின் சர்வாதிகாரியாக இருந்த ஹிட்லர், 2ஆம் உலகப் போர்க்காலத்தில் ஜேர்மனியில் வசித்த யூத இனத்தைச் சேர்ந்தவர்களைத் தேடித்தேடி அழித்தார். அவர்களை கூட்டம்கூட்டமாக ஓரிடத்தில் கூட்டி கொன்று குவித்தார். யூத இனத்தின் மீதான வெறுப்பை வார்த்தைகளால் கொட்டினார்.

இவர் தான் பிறந்த இனத்தை மிக உயர்ந்த இனமாகக் கருதி பெருமை கொண்டார். அதை வெளிப்படையாகப் பேசியும் எழுதியும் வந்தார். இப்படிப்பட்ட ஹிட்லரின் மூதாதையர்கள் யூத இனத்தினராக இருக்கலாம் என்று மரபணு ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஹிட்லரின் உறவினர்கள் 39 பேரிடமிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளைக் கொண்டு நடத்தப்பட்ட மரபணு ஆராய்ச்சியில் வட ஆபிரிக்காவில் வாழ்ந்த யூத சமுதாயத்தைச் சேர்ந்த மூதாதையர்களிலிருந்து ஹிட்லரின் வம்சம் தொடங்குவது தெரிய வந்துள்ளது.

ஹிட்லரின் உறவினர் அலெக்சாண்டர் ஸ்டுவர்ட் ஹூஸ்டன் நியூயோர்க்கில் வசித்து வருகிறார். இவருக்கு இப்போது வயது 61. அவரிடமிருந்தும், ஆஸ்திரியாவைச் சேர்ந்தவரும் ஹிட்லரின் ஒன்றுவிட்ட சகோதரருமான நோர்பெர்ட் என்பவரிடமிருந்தும் எடுக்கப்பட்ட மாதிரிகளை வைத்து நடத்தப்பட்ட சோதனையில் அவர்களிடம் உள்ள ஒருவகை குரோமோசம் ஜேர்மனியில் உள்ளவற்றை விட வித்தியாசமாக உள்ளது. அது, வட ஆபிரிக்க வாழ் மக்களிடம் காணப்படக்கூடியதாகவும் இருக்கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் குணபாலசிங்கம்



கோண்டாவில், நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு வங்கியடியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் குணபாலசிங்கம் நேற்று (26.08.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்கியடி,
இணுவில் கிழக்கு, இணுவில். (102492)

தகவல்:
குடும்பத்தினர்.

## சே.அருள்மொழிதாஸ்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)



கீரிமலையைப் பிறப்பிடமாகவும் தொட்டிலடி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சே.அருள்மொழிதாஸ் நேற்று முன்தினம் (25.08.2010) காலமானார்.

அன்னார் சேதுகாவலம்பிள்ளை- சரஸ்வதி தம்பதியரின் அருமை மகனும் பத்மினியின் அன்புக் கணவரும் ராஜராஜன், பிரதீபா ஆகியோரின் தந்தையும் தயானந்தசிவம், அம்பிகா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (25.08.2010) பருத்திக்கலட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நாகேஸ்வரி வித்தியாலயம் அருகில்,
பருத்திக்கலட்டி, சுன்னாகம். (102487)

தகவல்:
பத்மினி (மனைவி)

## வேலாயுதபிள்ளை சண்முகராசா



இருபாலையைப் பிறப்பிடமாகவும் தொண்டைமானாற்றை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை சண்முகராசா (Retired Head Guard, C.G.R) (26.08.2010) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வேலாயுதபிள்ளை- குருஆச்சி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் அமரர் சிவநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, சிவகுருநாதன், உருத்திரலிங்கம், ஆனந்தஈஸ்வரி மற்றும் யோகேஸ்வரி (பிரான்ஸ்), பஞ்சரத்தினம் ஆகியோரின் சகோதரனும் வரோதயம் (லண்டன்), நிரஞ்சனாதேவி, சண்முகதேவி (பிரான்ஸ்), கமலோதயம், துளசிதாஸ் (பிரான்ஸ்), தர்மினி (லண்டன்), பத்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரட்ணஜோதி (லண்டன்), இராமச்சந்திரன், காசிலிங்கம் (பிரான்ஸ்), பாரதிதாசன், புஸ்பமலர் (பிரான்ஸ்), கோபாலகிருஷ்ணன் (லண்டன்), ஜெகநாதன் ஆகியோரின் அன்பு மாமனும் சாயீஸ்வரன், விஜயராகவன், காயத்திரி, கிறிஸ்டீன், எலிஸா, டொனி, கிருஷா, தனுஷ், சிந்துஜா, பிரகாஷ், பிரசாந்த், பிரவீன், மாதங்கி, விஜயசுந்தர், மங்களசொரூபி ஆகியோரின் அன்புப் பேரனும் சங்கீர்த்தனி, அருண்முகேஸ், கிருத்திகேஸ், ஜெனா, அருஷன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொண்டைமானாற்றில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நாளை (28.08. 2010) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் காட்டுப்புலம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'சாந்தி',
உடுப்பிட்டி வீதி,
தொண்டைமானாறு.

தகவல்:
இராமச்சந்திரன்
(மருமகன்)

## திருமதி வல்லிபுரம் தங்கம்மா



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தங்கம்மா (25.08.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வயித்திலிங்கம் வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கணபதிப்பிள்ளை சரஸ்வதி, பாலசிங்கம், பூபதி (பூமணி), தம்பிஐயா, காலஞ்சென்ற விஜலச்சுமி ஆகியோரின் அன்புத் தாயும் சறோசாதேவி, அழகரத்தினம், கனகலிங்கம், கௌசலாதேவி, பரராசசிங்கம், புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2010) சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (102499)

தகவல்:
குடும்பத்தினர்.

## யாழ்.நகரில் நேற்று மாலை தாக்குதல் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக 27

யாழ்.நகர நகைக்கடை உரிமையாளர் ஒருவர் நேற்றுமாலை நான்குபேர் கொண்ட கும்பலால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுமாலை 5 மணியளவில் யாழ்.நகரின் வின்சர் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமாலை வழமைபோல தனது கடையிலிருந்து வீடு திரும்பத் தயாரான வேளை வீதியில் வழிமறித்த நால்வர் அவரைத் தாக்கியதாகவும் அச்சமயம் அப்பகுதிக்கு விரைந்து வந்த பொலிஸார் அவர்களில் இருவரைக் கைது செய்ததாகவும் ஏனைய இருவரும் தப்பிச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பி.கஜேந்திரன் என்பவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-16)

## சனி, ஞாயிறு- காலை முதல் மாலை வரை மின்தடை

யாழ்ப்பாணம், ஓக 27

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதான வீதியின் விஸ்தரிப்பு வேலைகளுக்காக உயரழுத்த மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சி பிரதேசம் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

இதேவேளை நாளை மறுதினம் ஞாயிறுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை கரந்தன், நீர்வேலி, கோப்பாய் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## உலக உணவுத்திட்டம்; நாட்டரிசி கொள்வனவு

யாழ்ப்பாணம், ஓக 27

யாழ்ப்பாண மாவட்டத்தில் உலக உணவுத்திட்ட விநியோகத்தை மேற்கொள்வதற்காக சிவப்பு நாட்டரிசி கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் உலக உணவுத்திட்ட தலைமை அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளது.

கொள்வனவு செய்வது தொடர்பாக அதன் தரம், கேள்வி, நிபந்தனைகள் மற்றும் விண்ணப்படிவங்களை மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் உள்ள உலக உணவுத்திட்ட மாவட்ட முகாமைத்துவ பிரிவுடன் தொடர்புகொண்டு இன்று முதல் பெற்றுக்கொள்ள முடியும் (ஓ)

## குடாநாட்டில் காலநிலை சீரடையும்

யாழ்ப்பாணம், ஓக 27

யாழ்.குடாநாட்டில் கடந்த சில தினங்களாக நிலவிவந்த வளிமண்டல தாழமுக்கம் இந்தியாவை நோக்கி நகர்வதால் காலநிலை சீரடையும் என்று யாழ். வளி மண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி எஸ்.புஸ்பநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்று முன்தினம் ஆகக்கூடிய வெப்ப நிலையில் 32 பாகை செல்சியஸ் பதிவாகியுள்ள அதே வேளை மிகக் குறைந்த வெப்ப நிலையாக 27 பாகை செல்சியஸ் பதிவாகியுள்ளது. அத்துடன் நேற்றையதினம் 32 பாகை செல்சியஸ் வெப்பநிலை நிலவியதாகவும் தெரிவித்தார். (ஓ-322)

# கண்ணீர்க் காணிக்கை



எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய
சிரேஷ்ட மாணவனும் எமது
மருத்துவ பீடத்தின் 24 ஆம் அணி
மருத்துவ மாணவனுமான

### வைத்தீஸ்வரன் சாரங்கன்

அவர்கள் அகால மரணமடைந்ததை யிட்டு அதிர்ச்சியும் கவலையும் அடை கின்றோம், அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
28.ஆம் அணி மருத்துவ மாணவர்கள்,
மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### கந்தையா சிவப்பிரகாசம்

(புங்குடுதீவு-குறிகாட்டுவான்)

திதி: திருதியை

மலர்வு
01.10.1925

உதிர்வு
07.09.2009

அன்பும் அறிவும் அள்ளித்தந்து
அனைவரையும் வாழவைத்த தெய்வமே!
அன்புச் சிட்டுக்கள் நாம் தவிக்கின்றோம்
அப்பா ஒரு முறை எம்மை அழைப்பீர்களா
ஆறாய்ப்பெருகும் கண்ணீருக்குள்
ஆறாத நினைவுகள் பதிவாகின்றன
ஆறிட நிழலும் இங்கில்லை-எமக்கு
ஆற்றிட வழியும் தெரியவில்லை
இம்மையில் நீர் செய்த நன்மைகளால்
இப்போதுதான் உண்மைகளை புரிகின்றோம்
இறையடியில் அமைதி பெற
இதய சுமைகளை மறந்து இறைஞ்சுவோமாக.

699/2, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (102501)

குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### கணபதிப்பிள்ளைதெய்வேந்திரம்

தோற்றம்
10.04.1942

மறைவு
07.09.2009

ஓராண்டென்ன ஓராயிரம்
ஆண்டுகள் ஆனாலும்
ஆறாதப்பா உங்கள் நினைவுகள்
என்றும் ஆத்ம சாந்திக்காக
இறைஞ்சுகின்றோம்
இறைவனை!

குடும்பத்தினர்.

78, சட்டநாதர் வீதி,
நல்லூர்.

க.செ.கணபதிப்பிள்ளை அன்சன்ஸ்,
மருந்துக்கடை,
948, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.


# Vacancy Advertisement

The following Positions are open for immediate vacancies at our Regional Centers in Jaffna & Chavakachcheri;

I. Senior Lecturer/Lecturer

*The Candidates apply for the above position should have a*:

Degree /Higher Diploma in the relevant field of ICT, minimum of 3 Years of Experience in Academic, Proficiency in English.

II. Student Counselor (Female)

Pleasant Personality
Proficiency in English
At least 2 Years of Working Experience

***apply with detailed resume to reach us on or before 5th September 2010 to:***

***Manager-HR***
***No: 216, Navalar Road***
***Jaffna***

Do you want to make a difference while doing the kind of work you love?

**At IDM,** you can.

**At IDM,** we are looking for dynamic, talented, like-minded and skilled individuals who value hard work, creativity and have a passion for innovation and excellence. Our culture places great emphasis on teamwork, professional and personal development, and quality of life. Bring your passion and talent, and we'll ensure that you find the appropriate resources, professional training and opportunities to transform them into a fun-filled and rewarding career-a career where you can make a real difference.

*"IDM is committed to equal opportunity in the work place."*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் தீர்வைப் பெறலாம் என நம்பியவர் அமிர்

## நினைவு நிகழ்வில் பேராசிரியர் சிற்றம்பலம்

யாழ்ப்பாணம், ஓக. 27

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு அதில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அந்த ஒப்பந்தத்தை முதல் படியாகக்கொண்டு தீர்வை நோக்கிச் செல்லலாம் என நம்பியவர் பெருந்தலைவர் அ.அமிர்தலிங்கம் -

-இவ்வாறு பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அமிர்தலிங்கத்தின் 83 ஆம் ஆண்டு பிறந்தநாள் நினைவுச் சொற்பொழிவு, யாழ். ப.நோ. கூ. சங்க கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற போது தலைமையுரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில்:-

தந்தை செல்வாவின் கொள்கைகளை வடக்கு - கிழக்கு மாகாணம் எங்கும் பறைசாற்றியவர். மிகவும் இளைய வயதிலேயே தாயக, தேசிய கோட்பாடுகளுக்காக துடிப்புடன் போராடத்தொடங்கியவர் தலைவர் அமிர்தலிங்கம்.

1956 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிரான சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது இரத்தம் சிந்தியவர். தந்தை செல்வாவின் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் என்பவற்றுக்காக இறுதிவரை போராடிய பெருந்தலைவர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொணடவர் அமிர்தலிங்கம். இருப்பினும் அதிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு கடிதம் மூலம் விவரித்திருந்தார். ராஜீவ் இதுதொடர்பாக பேச்சுவார்தை நடத்துவதற்கு சம்பதித்தும் இருந்தார். தலைவர் அமிர்தலிங்கம் இந்த இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முதல் படியாகக் கொண்டு தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெறலாம் என நம்பினார்.

இந்திய அமைதிப்படை நிரந்தரமாக இலங்கையில் இருக்க முடியாது. ஆனால் இன்று அவர்களை இந்த நாட்டை விட்டு வெளியேறிச் சென்றால் அந்த இடத்தை நிரப்புவது யார்? என்று கேட்டவர்.

நாடாளுமன்றத்தில் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் பேச்சைக்கேட்டு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களே வாய்மூடி இருப்பார்கள். ஆனால் இன்று அவ்வாறான சிறந்த பேச்சாளர்கள் எவரும் இல்லை என்றே சொல்ல வேண்டும். இன்றைய அரசியலில் சந்தர்ப்பவாதமும், வியாபாரமும் கலந்துவிட்டன - என்றார்.

இந்த நிகழ்வில் மாநகரசபை முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் பேசுகையில்:-

எங்களுடன் இணைந்து செயற்பட வருமாறு இன்றைய இளைய சந்ததியினரை அழைக்கின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய அமிர்தலிங்கத்திடம் காணப்பட்ட எளிமையை இன்றைய எந்த அரசியல் வாதிகளிடமும் காணமுடியாது. அன்று இளைய சந்ததியினர் அரசியல் உத்வேகத்துடன் காணப்பட்டனர் தலைவர் அமிர்தலிங்கம் அக்காலத்தில் தீவிர அரசியலில் ஈடுபட்டு இளைஞர்களை வழி நடத்தியவர். ஆனால் இன்றைய சந்ததியினர்அவ்வாறில்லை.

இன்று எமது காலாசாரம், பண்பாடு எல்லாம் ஆபத்துக்கு உள்ளாகி எங்கோ போய்க்கொண்டிருக்கின்றன. ஆனாலும் எம்முடைய இளைய சந்ததி மௌனித்துப் போயுள்ளது. இளைய சந்ததியினரை நாம் ஆயுதம் ஏந்துமாறு சொல்லவில்லை. எமது தலைவர் அமிர்தலிங்கம் இளைய வயதில் தந்தை செல்வாவுடன் உதியாக நின்று போராடியவர். அதே போன்று இன்றைய இளைய சந்ததியும் எம்முடன் இணைந்து செயற்பட முன்வர வேண்டும்.

இதுதான் முடிந்த முடிவு என்று நினைக்கக் கூடாது. நாம் தோற்றுப்போன சமூகம் என்று எண்ணக்கூடாது. எம் மக்களுக்கா குரல் கொடுக்க இளைஞர் சமூகம் முன்வர வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி நினைவுப் பேருரை நிகழ்த்தி னார்.

வரவேற்புரையை இ.சங்கர் நிகழ்த்தினார். (ஒ-319-23)

(படங்கள் 24 ஆம் பக்கத்தில்)

# படையினரின் ஏற்பாட்டில் சுற்றுலா சென்ற வலிகாமம் வலய மாணவர்கள்



யாழ்ப்பாணம், ஓக. 27

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் 51 ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் தென்பகுதிக்கான கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு திரும்பியுள்ளனர்.

51 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் என்.ஜே.வல்கமவின் வழி காட்டலின் பேரில் 513 ஆவது பிரிகேட் படைப் பிரிவின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்ட இக் கல்விச் சுற்றுலாவில் மல்லாகம் கலைமகள் றோமன் கத்தோலிக்க பாடசாலை, உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் மற்றும் மானிப்பாய் மெமோறியல் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 35 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமான இக் கல்விச் சுற்றுலா மூலம் கண்டி தலதா மாளிகை, மகாமலுவ எசல பெரஹரா, ஸ்ரீ தலதா மாளிகையின் தொல்பொருள் நிலையம், பேராதனைப்பூங்கா, விக்ரோரரியா நீர்த்தேக்கம், நீர் மின் நிலையம் போன்ற இடங்களுக்கும் இம் மாணவர்கள் சென்றிருந்தனர்.

பின்னர் இவர்கள் வத்தேகமவிலிருந்து மாத்தளை வரை ரயில் மூலம் பயணம் செய்து உக்குவளையை அடைந்தனர். அங்கு பிரதேச செயலர் மற்றும் அப்பகுதி மக்களால் வரவேற்கப்பட்டு அங்கு அவர்களுக்குரிய மதியபோசன உணவை 8 ஆவது கஜபாகு படைப்பிரிவினர் வழங்கினர்.

இறுதியாக தம்புள்ளை சர்வதே கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்குடையிலான போட்டியைக் கண்டுகளிக்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-16)

# தருமபுர ஆதீன தம்பிரான் நாளை நல்லூரில் சிறப்புரை

யாழ்ப்பாணம், ஓக. 27

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாக் காலத்தில் ஆன்மீக சிந்தனையுடன் நாவலர்மணி மண்டபத்தில் நடத்தும் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் சு.உதயபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தருமபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த முனைவர் ஸ்ரீமத் குமார சுவாமித் தம்பிரான் சிறப்புரை ஆற்றவுள்ளார். (ஒ-6)

# செட்டிகுளத்தில் வாகன விபத்து இருவர் அதே இடத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 27

வவுனியா செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

மோட்டார் சைக்கிளொன்றும், ட்ரக் வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களே உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த 30 வயதுடைய மயில்வாகனம் வினோராஜ் மற்றும் செட்டிகுளத்தைச் சேர்ந்த 29 வயதுடைய சிவன் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இருவரும் செட்டிகுளம் முகாமில் வேலை செய்பவர்கள் என்றும், நேற்று முன்தினம் இரவும் வேலை முடிந்து திரும்பிக்கொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றது எனவும் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் இறந்தவர்களின் சடலங்கள் வவுனியா வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தன.

இவ்விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய வாகன சாரதி செட்டிகுளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. (ஒ-சி)

# கே.பியிடம் பணம் உள்ளவரை அவருக்கு உயிர் ஆபத்து இல்லை

கொழும்பு, ஓக. 27

கே.பியிடம் கப்பல்களும் பணமும் இருக்கும்வரை அவரது உயிருக்கு அரசால் எதுவித ஆபத்தும் ஏற்படாது என்று ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. அநுரகுமார திஸாநாயக்க நேற்றுக் கூறினார்.

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க முடியாத நிலையில் அரசுடன் இணைந்துள்ள கட்சிகள் உள்ளன. ஜாதிக ஹெல உறுமய கட்சி அரசு செய்யும் செயல்களுக்கு ஆதரவு தெரிவித்துப் பேசுகிறது.

கே.பி. அரசின் பிடியில் இருக்கின்றார். அவரைத் தடுத்து வைப்பதற்கான நீதிமன்ற உத்தரவும் பெறப்படவில்லை. அவ்வாறாயின் அவர் எந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்று அரசு நாட்டு மக்களுக்குக் கூறவேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக நான் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியபோதும் அரசால் எதுவித பதிலும் வழங்கப்படவில்லை. இருப்பினும், கே.பியிடம் கப்பல்களும், நிதியும் இருக்கும்வரை அவரது உயிருக்கு எதுவித ஆபத்தும் ஏற்படாது என்பது எமக்குத் தெரியும். - என்றார். (ஒ-சி)

# சம்பூர் மக்கள் நிரந்தரமாக வாழ வருட இறுதிக்குள் மாற்றுக்காணி

கொழும்பு, ஓக. 26

திருகோணமலை மாவட்டம் சம்பூர் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் நிரந்தரமாக வசிக்க இவ்வருட இறுதிக்குள் மாற்றுக் காணிகளை பெற்றுத் தருவதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் உறுதியளித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு சம்பூர், கூனித்தீவு, கடற்கரைச்சேனை, நவரத்னபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்தனர். இவர்கள் வாழ்ந்த பிரதேசம் அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட உள்ளதால், இம் மக்கள் கடந்த ஆறு வருடங்களாக இடம்பெயர்ந்து தற்காலிக கூடாரங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் இம் மக்களை நிரந்தரமாக மீள்குடியமர்த்துவது தொடர்பாக ஆராய சமீபத்தில் இம் மக்கள் வாழும் பகுதிகளுக்கு சென்றிருந்தார்.

இம்மக்களின் கோரிக்கைகள் தொடர்பாக பிரதியமைச்சர், மொஹான் விஜே விக்ரம மற்றும் திருமலை அரச அதிபர் ஆகியோருடன் பேச்சு நடத்தினார்.

பருவ மழை ஆரம்பமாவதற்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தி விசேட அனுமதியைப் பெற்று மீள்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பிரதியமைச்சர் தெரிவித்தார்.

திருமலை மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வாழும் 2 ஆயிரத்து 500 குடும்பங்களையும் ஒரே பிரதேசத்தில் குடியமர்த்தி அடித்தள வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படும் என்றும் பிரதியமைச்சர் உறுதி அளித்தார்.

# தமிழர்களிடம் இருந்து பணம் பறிக்க பொலிஸார் போன்று நடித்தவர்கள் கைது!

கொழும்பு, ஓக. 27

குற்றப்புலனாய்வுப் பொலிஸார் எனக் கூறித் தமிழ் மக்களை அச்சுறுத்திப் பணம் மற்றும் நகைகளைப் பறித்து வந்த இருவரை பம்பலப்பிட்டிப் பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்தனர்.

பம்பலப்பிட்டிப் பொலிஸார் இது தொடர்பாக தெரிவித்தவை வருமாறு:-

இவர்களில் ஒருவர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும் மற்றவர் பொலிஸ் கான்ஸ்டபிளாகவும் நடித்தே மக்களிடம் பணம், நகை போன்றவற்றைப் பறித்து வந்தனர்.

இவர்களிடம் [illegible] ஏமாந்த இருவர் [illegible] பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இவர்களில் கான்ஸ்டபிள் போல் நடித்தவர் நன்றாகத் தமிழ் பேசக்கூடியவர் என்றும், அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்பிருப்பதாகத் தமிழர்களைக் கூறி அச்சுறுத்தி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குத் தெரிவிப்பது போல் மற்றைய நபருக்குத் தகவல் தெரிவிப்பார் என்றும், உடனே மற்றைய நபர் அங்கே பணம் கேட்பார் என்றும் விசாரணைகளின் மூலம் தெரியவந்தது.

சந்தேக நபர்கள் கடவத்தை மற்றும் மருதானை ஆகிய பிரதேசங்களை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்று தெரி[illegible]து. (ஒ-சி)

COLOMBO STOCK EXCHANGE

| | |
|---|---|
| பங்குச்சந்தை - ஆவணி - | 26, 2010 |
| பங்குச்சந்தைச்சுட்டிகள் | |
| அனைத்துப்பங்கு(ASPI) | 5,594.30 |
| மிலங்கா(MPI) | 5,882.22 |
| உரிமைமுதல் தகவல்கள் | |
| வியாபாரப்புரள்வு(Rs.) | 3,009.29Mn |
| பங்குகளின் அளவு(No.) | 71.87Mn |
| வியாபாரம்(No.) | 19,104 |
| சந்தை முதல்(Mkt.Cap) | 1,841.69Bn |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | |
| அதிகரிப்பு(Top 5 gainers)விலை | Rs. |
| கொழும்பு போர்ட் இன்வெஸ்மென்ற 137.50 | |
| எஸ்.எம்.பி(B) லீசிங்(ஒ) | 2.20 |
| எல்.ஓ.எல்.சி. | 863.10 |
| கொழும்பு பார்மசி | 644.10 |
| த பினான்ஸ் 36.60 | |
| குறைவு(Top 5 losers) - விலை | Rs. |
| சிலோன் லெதர் | 138.00 |
| ஈ.பி. கிறேசி | 875.50 |
| கொமர்'ல் டெவலப்மென | 52.00 |
| ஹீல்ஸ் பு(க)ட் | 70.20 |
| புளு டயமன்ட்ஸ் | 6.40 |

மேலதிக தகவல்கள் - www.cse.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் 83ஆவது பிறந்தநாள் நினைவுச் சொற்பொழிவு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், அமரர் அமிர்தலிங்கத்தின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிப்பதை முதலாவது படத்திலும், தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள் மலர்அஞ்சலி செலுத்துவதை அடுத்துவரும் இரு படங்களிலும் காணலாம். அ.த.கிருஷ்ணா, மா.சின்னத்தம்பி, சி.க.சிற்றம்பலம், சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை நான்காவது படத்திலும், இ.சங்கர் வரவேற்புரை நிகழ்த்துவதை ஐந்தாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். *(படங்கள்: டிலீப், தமிழினியன்)*

## புதிய அதிபர்களை அழைக்கிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஒக 27

யாழ்.கல்வி வலயத்தில் புதிதாக நியமனம் பெற்ற அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்டுள்ளார். (ஒ)

## முதியவரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுதினமான செப்ரெம்பர் 26ஆம் திகதி பெல்ஜியத்தில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையகத்தை அவர்கள் சென்றடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மூதூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேட்டியளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.நா. மனிதாபிமான விவகாரங்களுக்கான அதிகாரி எனும் எனது பதவிக் காலத்தின்போது இலங்கையில் மிகக் கடுமையான விவகாரங்களுக்கு ஐ.நா. முகம் கொடுத்தது. எனினும் யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் அழுத்தங்களுக்கு மத்தியிலும் குறிக்கோள் நோக்குடன் பரிந்து பேசும் பாத்திரத்தை ஐ.நா. வகித்தது என்றும் அவர் தெரிவித்தார்

செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு ஜோன் ஹோம்ஸ் பதிலளிக்கையில்,

யுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உதவ முயற்சிக்கையில் அரசினதும் விடுதலைப் புலிகளினதும் பிரசாரங்களை சமநிலைப்படுத்த முயன்றபோது ஐ.நா. கடும் அழுத்தங்களுக்கு உட்பட்டது எனக் கூறினார்.

பொதுமக்களின் சேதங்கள் உட்படப் பல கேள்விகளுக்கு இன்னமும் பதில் காணப்படாமல் உள்ளது என்றும், யுத்தத்தின்போது மக்கள் வசித்த பகுதிகளில் அரசு ஷெல் தாக்குதலை நடத்தியதா என்பதும் அக்கேள்விகளில் ஒன்று என்றும் அவர் கூறினார். (சி)

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் நேற்றுச் சாட்சியமளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த ஆணைக்குழுவை ஒரு வருடத்திற்கு முன்னரே நியமித்திருக்கலாம். இதன் மூலம் இரு தரப்புக்களும் ஒருவர் மாறி ஒருவர் குற்றஞ்சுமத்தும் நிலைமையைத் தவிர்க்கமுடிந்திருக்கும்.

கடந்தகாலங்களில் நாம் கற்றுக்கொண்ட பாடங்களில் நல்லவையும் உள்ளன; தீயவையும் உள்ளன. இவற்றை வைத்துப் பார்க்கும்போது எமது நாட்டின் அழிவிற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் அதன் தலைவர் பிரபாகரன் செயற்பட்ட விதமும் மட்டுமே காரணம் எனக் கூறமுடியாது.

இலங்கையில் தொடர்ந்து ஆட்சிப் பீடம் ஏறிய அரசுகளின் தவறான நிர்வாகங்களும் இதற்குக் காரணமாக அமைகின்றன. எனவே நாம் முதலில் நிர்வாக முறைமையை மாற்றியமைக்கவேண்டும். முதலில் அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ளவேண்டும்.

அதைவிடுத்து கொழும்பில் வீதிகளில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதில் எவ்வித பயனும் இல்லை. அத்துடன் இலங்கையில் அரசியல் தலைவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தவறான கருத்துக்களை பரப்புவதிலும் எவ்வித பலனும் இல்லை. நாம் இராஜதந்திர மட்டத்திலேயே கலந்துரையாடல்களை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ஒ-11)

## தயாமாஸ்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் இருவரது வாக்குமூலங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன என இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதையடுத்து நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி அரச தரப்பு சட்டத்தரணியிடம் இவர்கள் தொடர்பில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து வினவினார். இருந்தும் அரசதரப்பு சட்டத்தரணி இது தொடர்பில் தாம் அறிவுறுத்தப்படவில்லை எனத் தெரிவித்தார்.

இதையடுத்து, இரகசியப் பொலிஸார் பதிவு செய்த வாக்குமூலங்களையும் ஆவணங்களையும் சட்டமா அதிபருக்கு அனுப்புமாறு உத்தரவிட்ட நீதிவான் எதிர்வரும் 14ஆம் திகதி சட்டமா அதிபரின் தீர்மானத்தை நீதிமன்றத்தில் அறிவிக்குமாறு உத்தரவிட்டார். (அ-சி)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் சார்பாக பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க ஆகியோரும், இந்தியக் குழுவில் வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ், பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமார், தேசிய பாதுகாப்புச் செயலர் சிவசங்கர் மேனன் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டார்கள்.

இந்த நிலையில், அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று மாலை இந்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியா சென்றபோது இலங்கையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இந்தியா செயற்படுத்துவது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டிருந்தது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு 50 ஆயிரம் புதிய வீடுகளைக் கட்டித் தருதல், ரயில் பாதை, விமானத்தளம் மற்றும் துறைமுகங்களை மேம்படுத்துதல், தொழிற்பயிற்சி அளித்தல், விவ்சாய முன்னேற்றத்துக்கு உதவுதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் அதில் இடம் பெற்றிருந்தன. அவற்றுக்காக, இந்தியா ஏற்கனவே சில உதவிகளையும் வழங்கியிருக்கிறது.

இந்த நிலையில், அந்தப் பணிகள் தொடர்பாக இந்தியக் குழுவினரிடம் இலங்கைப் பிரதிநிதிகள் எடுத்துரைத்தார்கள். பணிகளின் தற்போதைய நிலைவரம், அவற்றுக்குத் தேவைப்படும் அடுத்தகட்ட உதவிகள் உள்ளிட்ட விவரங்களை அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

அதையடுத்து, இந்தியத் தரப்பில் அந்தக் கோரிக்கைகள் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பது குறித்து விளக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று மாலை இந்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேசினார். அப்போது, இலங்கையில் போர் முடிவடைந்து நிவாரணத் திட்டங்களுக்காக இந்தியா அறிவித்துள்ள உதவிகளை இலங்கை எந்த வகையில் பயன்படுத்தி வருகிறது என்பது தொடர்பாக பிரணாப் முகர்ஜியிடம் பஸில் ராஜபக்ஷ பல்வேறு விவரங்களைத் தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது.

மேலும் தேவைப்படும் நிதி உதவிகள் குறித்தும் இருநாட்டு அமைச்சர்களும் ஆலோசனை நடத்தினர் எனத் தெரிகிறது. (அ-சி)

## மக்களுக்குத் தெரிவிக்காமல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகத் தெரிகின்றது. இந்த நாட்டு மக்களிடம் கூறாமல் - அவர்களின் அனு மதியைப் பெறாமல் - அவசர அவசரமாக அதை நிறைவேற்ற அரசு முயற்சி செய்கிறது.

அரசமைப்பு என்பது மக்களை ஆளும் சட் டம் என்பதால் அதில் மக்களின் யோசனைகள் உள்ளடக்கப்படவேண்டும். ஆனால், அரசு அதற்கான சந்தர்ப் பத்தை மக்களுக்கு வழங்கவில்லை.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவ தற்குப் பதிலாக அதை மேலும் நீடிக்கும் பிரதான யோசனையே இந்த அரசமைப்பு யோசனைகளில் அடங்கியிருக்கின்றது.

இந்தத் திருத்த யோசனை என்னவென்று அமைச்சர வைக் கோ, இந்த நாட்டு மக்களுக்கோ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்கவுக்கோ தெரியாது. அப்படியிருந்தும் ரணில் இந்த ஜனநாயக விரோத யோசனைக்கு ஆதரவு வழங்குகிறார்.

இந்தத் திருத்த யோசனை நாட்டு மக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தாது என்றால் ஏன் அரசு அதை நாட்டு மக்களிடம் மறைக்க வேண்டும்? இந்த யோசனையில் நிச்சயம் நாட்டுக்கு ஆபத்து உண்டு.

இந்த யோசனையைத் தோற்கடிப்பதற்கு நாடாளுமன்றில் தேவைப்படும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைத் தடுப்பதற்கான அனைத்துவித ஜனநாயக நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம்.

நாட்டு மக்கள், கல்விமான்கள் மற்றும் புத்திஜீவிகள் உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து இந்த திருத்த யோசனையைத் தோற்கடிப்பதற்கு போராட முன்வரவேண்டும்"- என்றார். (அ-சி)

## கோதுமை மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் நிமல் பெரேரா இதனை தெரிவித்துள்ளார்

இந்த மானியம் குறைக்கப்பட்டதன் காரணமாக 50 கிலோ கோதுமா மூடை ஒன்றின் விலை 75 ரூபாவால் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக வெதுப்பக உற்பத்திகளிலும் அதிகரிப்பை மேற்கொள்வது குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன என நிமல் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

## ஈழத்தமிழரை ஆயுதம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இந்தியா சார்பில் அளிக்கப்பட்ட நிதி உதவி மற்றும் நிவாரணப் பொருள்களால் பயனில்லை. அந்த உதவிகள் சரிவரப் போய்ச் சேரவில்லை. இதுகுறித்து முறையான பதிலை, இலங்கையும் கூறவில்லை. தமிழர்கள் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்து இலங்கைக்கு இந்தியா போதிய நெருக்கடியை அளிக்கவில்லை - என்றும் அவர் கூறினார்.

மக்களவையில் (நாடாளுமன்றத்தில்) இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றது போது விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு மேலும் கூறி யவை வருமாறு -

**ரூ. 500 கோடி என்னவாயிற்று?**

இந்தியத் தரப்பில் அளிக்கப்பட்ட, 500 கோடி ரூபா நிதி உதவி மற்றும் நிவாரணப் பொருள்கள் ஆகியவற்றை இலங்கை அரசு எவ்வாறு பயன்படுத்தியது என இதுவரை தெளிவான விவரங்கள் இல்லை. இந்த நிதி, சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை. கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை மறுக்கப்படுவது இன்னும் தொடர்கிறது. போர் முடிந்தபின்னரும் கூட, தமிழர்கள் ஆயுதம் ஏந்தியதற்கான அடிப்படைக் காரணங்கள் இன்னும் அப்படியே உள்ளன. அவை களையப்படவில்லை.

இப்போதும் அங்கு ஒரு நெருக்கடி நிலைதான் காணப்படுகிறது. புலிகள் அபாயம் இன்னும் இருக்கிறது என இலங்கை கூறுவது, தமிழர்கள் வசிக்கும் பகுதிகளைக் கண்காணிப்பதற்கும் அங்கு இராணுவத்தை வைத்துக் கொண்டே இருப்பதற்கும்தான். ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தம் என்ன ஆனது. 13 ஆவது சட்டத்திருத்தம் என்னவாயிற்று? ஏதோ நூடில்ஸ் தயாரிப்பதுபோல உடனடியாகத் தீர்வு காண முடியாது என்று கேலியாக மஹிந்த ராஜபக்ஷ பேட்டியளிக்கிறார்.

**மஹிந்தவுக்கு தீர்வில் விருப்பம் இல்லை**

அவருக்கு அரசியல் தீர்வில் விருப்பம் இல்லை. ஒரு முகாமில் இருந்து மற்றொரு முகாமிற்கு மாற்றுவதற்கு பெயர் மீள்குடியேற்றம் அல்ல. ஒவ்வொருவரது சொந்த வீடுகளுக்கும் திருப்பி அனுப்புவதுதான் மீள்குடியேற்றம். எம்.பிக்கள் குழு இலங்கை சென்றபோது, எங்களை சில முகாம்களுக்கு மட்டுமே அழைத்து சென்றனர். சிறுவர்களை அடைத்து வைத்திருப்பதாகக் கூறப்படும் முகாம்களை எங்கள் கண்ணில் கூட காட்டவில்லை. 54 ஆயிரம் பேர், இன்னமும் முகாம்களில் அடைத்து வைக்கப் பட்டுள்ளனர். இந்தியா தரப்பில் உடனடியாகத் தூதரை அனுப்பி தமிழர்களது பிரச்சினைகளைக்களைய நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார்.

**மீள்குடியேற்றத்தை அறிந்துகொள்ள முடியாமல் இரும்புத் திரை-ம.தி.மு.க. உறுப்பினர் கணேசமூர்த்தி -**

இலங்கையில் மீள்குடியேற்றமே செய்யப்படவில்லை. அங்கு என்ன நடக்கிறது என்பது குறித்து உலகம் அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு இரும்புத் திரை உள்ளது. இந்தியா அளிக்கும் உதவிகள் அனைத்தும் சிங்களவர்களை குடியேற்ற உதவுகிறதே தவிர, தமிழர்களுக்கு எள்ளளவும் பயனில்லை. இதனால் இந்தியா தன் உதவியை நிறுத்த வேண்டும். ஐ.நா. குழுவுக்கே அனுமதி மறுக்கும் அந்நாட்டு அரசுக்கு இந்தியா உதவக் கூடாது - என்று தெரிவித்தார்.

**மார்க்சிஸ்ட் உறுப்பினர் பி.ஆர்.நடராஜன்**

-போர்க்குற்றங்களைச் செய்தது இலங்கை என்று உலக நாடுகள் பலவும் கூறுகின்றன. அப்படிப்பட்ட அரசு தரும் தகவல்களை இந்திய வெளிவிவகார அமைச்சர் நம்புகிறார். இங்கிருந்துபோன எம்.பிக்கள் குழு அங்கு குறிப்பிட்ட சில இடங்களுக்கு மட்டுமே அழைத்துச் செல்லப்பட்டது என்று அந்தக் குழுவைத் தலைமை வகித்த டி.ஆர்.பாலுவே இங்கு ஒப்புக்கொண்டுள்ளார் என்பதைக் கவனிக்க வேண்டும். அங்குள்ள உண்மை நிலைமைகள் மறைக்கப்படுகின்றன - என்று கூறினார்.

**கம்யூனிஸ்ட் உறுப்பினர் லிங்கம் -**

போர் முடிந்து ஓராண்டு ஆகிவிட்டது. ஆனாலும் 35 ஆயிரம் பேர் வரை முகாம்களில் எதற்கு இருக்க வேண்டும்? அவரவர் வீடுகளுக்குத் திரும்பாதது மனித உரிமை மீறல் இல்லையா? அனைத்துக் கட்சி எம்.பிக்கள் குழுவை அனுப்பி நிலைமைகளை கண்டறிந்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று குறிப்பிட்டார்.


**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்!**

★ ஒவ்வொரு சனிக்கிழமையும் 2.30 தொடக்கம் 5 மணிவரை நடைபெற்ற பொதுஅறிவு, பொது உளச்சார்பு வகுப்பு நாளை நடைபெறமாட்டாது. அடுத்த வாரத்தில் இருந்து வழமைபோல் நடைபெறும். ★ சுகாதார முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கான வகுப்பு, சனி, ஞாயிறு 2-5 மணிவரை நடைபெறும்.

**யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புக்கள் பிரிவு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.